# புதிய ஜனநாயகம்

நவம்பர் 2013
ரூ.10.00




## ஆதார்:

# மாட்டுக்குச் சூடு! குடிமகனுக்கு டிஜிட்டல் கோடு!!

## “கடற்கரை வளங்களைக் கொள்ளையடித்து, மீனவர்களின் வாழ்வைச் சூறையாடிய

# வைகுண்டராஜனைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்! சொத்துக்கள் முழுவதையும் நட்டஈடின்றிப் பறிமுதல் செய்!!”

## – மக்களின் அச்சத்தை உடைத்தெறிந்த புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்

ஆற்றுமணல் கொள்ளை, கிரானைட் கொள்ளையைத் தொடர்ந்து தற்பொழுது தாதுமணற் கொள்ளை அம்பலமாகியுள்ளது. இத்தாதுமணற்கொள்ளை குறித்து விசாரிக்க, பேடி தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவின் அறிக்கையைக் கூட வெளியிடாமல் முடக்கியிருப்பதன் மூலம், தென் தமிழகத்தில் தன்னை அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்திருக்கும் வைகுண்டராஜனை வெளிப்படையாகவே ஆதரித்து வருகிறது, ‘அம்மா’வின் அரசு.

தாதுமணற்கொள்ளை குறித்து எந்த ஓட்டுக்கட்சியும் வாய் திறக்காத நிலையில், தூத்துக்குடி மற்றும் அதனையொட்டியுள்ள கடற்கரையோர கிராமங்களில் வி.வி.மினரல்ஸ் வைகுண்டராஜன் என்ற பெயரை உச்சரித்தாலே உயிருக்கு உத்திரவாதமில்லை என்ற அசாதாரணமான சூழலுக்கு மத்தியில், ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகளும் அதன் தோழமை அமைப்பான மனித உரிமைப் பாதுகாப்பு மையமும், தாது மணற்கொள்ளைக்கெதிரானப் போராட்டத்தில் களமிறங்கியுள்ளன.

‘‘கடற்கரை வளங்களைக் கொள்ளையடித்து, மீனவர்களின் வாழ்வைச் சூறையாடிய தாதுமணல் கொள்ளையன் வைகுண்டராஜனை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்! அவனது சொத்துக்கள் முழுவதையும் நட்டஈடின்றிப் பறிமுதல் செய்!’’ என ஓங்கி ஒலிக்கிறது இப்புரட்சிகர அமைப்புகளின் குரல்!

முதற்கட்டமாக, மனித உரிமைப் பாதுகாப்பு மையம், வழக்குரைஞர் வாஞ்சிநாதன் தலைமையில் உண்மை அறியும் குழுவை அமைத்து, பச்சையாபுரம் முதல் லீபுரம் வரை பல கிராமங்களில் பத்து நாட்கள் கள ஆய்வு செய்து 30 பக்க அறிக்கையை கடந்த 12.09.13 அன்று மதுரையில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்டது.

தனக்கென தனியாக அடியாள் படையை வைத்துக் கொண்டும்; தாதுமணல் கொள்ளையை எதிர்க்கும் கிராமங்களில் தமக்கு ஆதரவான கும்பலை உருவாக்கிக் கொண்டு ஊரை இரண்டு படுத்தியும்; தமது சட்டவிரோதச் செயல்களுக்கு சொந்த சாதி பலத்தை அடித்தளமாகப் பயன்படுத்திக் கொண்டும் தென்



தமிழகத்தில் தனி சாம்ராஜ்யத்தையே நடத்திவரும், தனியார்மயம் தோற்றுவித்திருக்கும் மாஃபியா முதலாளிதான் இந்த வைகுண்டராஜன் என்பதை அம்பலப்படுத்தியது ம.உ.பா.மையத்தின் உண்மையறியும் குழுவின் அறிக்கை.

இதனைத் தொடர்ந்து, இப்புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர் கோயில், கோவில்பட்டி, விளாத்திகுளம், திருச்செந்தூர் ஆகிய பேருந்து நிலையங்களில்; இரயில்களில்; வி.வி.மினரல்ஸ் வைகுண்டராஜனின் ஆதரவு சக்திகள் இருக்கக்கூடிய கடற்கரையோரக் கிராமங்கள் தொடங்கி தாதுமணற்கொள்ளைக்கு எதிராகப் போராடிவரும் உவரி, பெருமணல் வரையிலுமான மீனவர் குடியிருப்பு மற்றும் கிராமப்புறங்களில்; தூத்துக்குடி நகரில்; மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில்; தொழிலாளர்கள் மத்தியில்; அரசு அலுவலர்கள் மத்தியில் - என அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களிடமும் தாதுமணற்கொள்ளைக்கெதிரானப் பிரச்சார இயக்கத்தை நடத்தியுள்ளன.

‘‘அக்டோபர் 1 முதல் 11-ந்தேதி வரையில் நடைபெற்ற இப் பிரச்சார இயக்கத்தின் பொழுது மட்டும் 37,000 பிரசுரங்களை விநியோகித்திருக்கிறோம். தூத்துக்குடி நகரெங்கும் பரவலாக சுவரெழுத்துப் பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கிறோம். இதன் மூலம் இலட்சக்கணக்கான மக்களிடம் எமது பிரச்சாரம் சென்றடைந்திருக்கிறது. செஞ்சட்டையுடன் பேருந்துகளிலும், வீடு வீடாகவும் சென்று பிரச்சாரம் செய்த எமது தோழர்களை மக்கள் ஆரத்தழுவி வரவேற்றனர். ஆர்வமுடன் பிரசுரங்களை வாங்கி சென்றனர். கை குலுக்கி வாழ்த்து தெரிவித்தனர். கடற்கரைக் கிராமங்களிலும், மீனவர் குடியிருப்புகளிலும் பிரச்சாரம் செய்த தோழர்களை வரவேற்று உணவு வழங்கி உபசரித்த அப்பகுதி மக்கள் தாங்களும் இணைந்து போராடுவதாக உணர்ச்சி பெருக்குடன் தெரிவித்தனர்.

நாங்கள் பிரச்சாரம் மேற்கொண்ட பெரும்பாலான இடங்களில், ‘நீங்கள் தைரியமாக பிரச்




தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# தனியார்மயக் கொள்ளையும் ஊழல் எதிர்ப்பு நாடகமும்

தனியார் முதலாளிகளுக்கு 2004-2009ஆம் ஆண்டுகளில் நிலக்கரி வயல்களை ஒதுக்கீடு செய்ததில் நடந்துள்ள முறைகேடுகளால் அரசுக்கு 1.86 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று 2012-இல் மத்திய கணக்குத் தணிக்கை அலுவலகம் கூறிய பிறகு, இம்முறைகேடுகள் பற்றி உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையில் மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) விசாரித்து வருகிறது.

நிலக்கரி ஊழல் தொடர்பான கோப்புகள் காணவில்லை என்பதை எதிர்த்தும், இதற்குப் பொறுப்பேற்று பிரதமர் மன்மோகன் சிங்கைப் பதவி விலகக் கோரியும் கடந்த ஒரு மாத காலமாக நாடாளுமன்றத்தைக் கிட்டத்தட்ட முடக்கிவைத்து எதிர்க்கட்சிகள் குரலெழுப்பின. இந்நிலையில் ஒடிசா மாநிலத்தில் தலபிரா நிலக்கரிச் சுரங்கங்களுக்கான ஒதுக்கீட்டை ஆதித்ய பிர்லா குழுமத்தின் நிறுவனமான ஹிண்டால்கோ இன்டஸ்ட்ரீஸ் முறைகேடாகப் பெற்றுள்ளதாகக் குற்றம் சாட்டி, முன்னாள் நிலக்கரித் துறை செயலாளர் பி.சி.பரேக் மீதும், ஆதித்ய பிர்லா குழுமத் தலைவர் குமார் மங்கலம் பிர்லா மற்றும் அவரது ஹிண்டால்கோ நிறுவன அதிகாரிகள் மீதும் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்துள்ளது, சி.பி.ஐ.

சி.பி.ஐ.யின் விசாரணையை எதிர்நோக்கியுள்ள நிலக்கரித் துறையின் முன்னாள் செயலரான பி.சி.பரேக், நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீட்டில் எந்த முறைகேடும் நடக்கவில்லை; அவ்வாறு முறைகேடு அல்லது சதி நடந்திருப்பதாக சி.பி.ஐ. கருதினால், இறுதி முடிவு எடுத்தவர் என்கிற முறையில் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டு இதில் தொடர்புடைய அனைவரின் மீதும் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று செய்தியாளர்களிடம் பேட்டியளித்துள்ளார்.

''நிலக்கரி மாஃபியாக்கள் அரசாங்கத்துக்கு வெளியில் இல்லை; அவர்கள் நிலக்கரி அமைச்சகத்திலேயே இருக்கின்றனர், என்னைப் பதவியிலிருந்து விரட்டியடிக்க முயற்சித்தனர்'' என்று அமைச்சரவைச் செயலாளர் சதுர்வேதிக்கு 2005-இல் பி.சி.பரேக் எழுதிய கடிதமும் இப்போது பரபரப்பாக வெளியாகியிருக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட நிலக்கரி வயல்களின் உரிமங்களை ஒதுக்கீடு செய்து முறைகேடுகளும் ஊழலும் நடந்துள்ள நிலையில், பல்வேறு மாநிலங்களின் அமைச்சர்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ள நிலையில், ஒடிசா மாநிலத்தின் தலபிரா நிலக்கரி வயல் ஒதுக்கீட்டில் நடந்துள்ள முறைகேடு உள்ளிட்டு, வெறும் 14 முதல் தகவல் அறிக்கைகள் மட்டுமே இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

பரேக் இப்போது என்ன சொல்கிறாரோ, அதையேதான் 2ஜி அலைக்கற்றை ஊழலில் சிக்கவைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ஆ.ராசா நீண்ட நாட்களாகச் சொல்கிறார். ''அலைக்கற்றை ஏலத்தில் ஊழல் எதுவும் நடக்கவில்லை. அது ஒரு கொள்கை முடிவு. அலைக்கற்றை ஒதுக்கீடு செய்யப்பட்ட சமயத்தில் நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம், அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான அமைச்சரவைக் குழுவின் தலைவராக இருந்த பிரணாப் முகர்ஜி, மைய அரசின் சொலிசிட்டர் ஜெனரலாக இருந்த கூலம் வாகன்வாதி ஆகியோருடன் ஒதுக்கீடு தொடர்பாகக் கலந்து ஆலோசித்துதான் அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டன. இம்முடிவுகள் அனைத்தும் பிரதமர் மன்மோகனுக்குத் தெரிவிக்கப்பட்டு அவரின் ஒப்புதலோடுதான் நடைமுறைப்படுத்தப்பட்டன'' என ஆதாரங்களுடன் ராசா விளக்கமளித்தார்.

தொடர்ச்சி 34-ஆம் பக்கம்...


புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 29 இதழ்: 1

நவம்பர் 2013

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# ஆதார்:

# மாட்டுக்குச் சூடு! குடிமகனுக்கு டிஜிட்டல் கோடு!!

**மக்கள் மீதான கண்காணிப்பையும் ஒடுக்குமுறையையும் இதுவரை இல்லாத அளவுக்கு நிறுவனமயப்படுத்துவதும், கிராமப் பொருளாதாரத்தை நிதிமூலதனத்தின் சுரண்டலுக்குத் திறந்து விடுவதுமே ஆதார் திட்டத்தின் நோக்கம்.**

''ஆதார் அட்டை இல்லை என்ற காரணத்தினால், யாருக்கும் அரசின் சலுகைகளை மறுக்கக் கூடாது. சட்டவிரோதமாகக் குடியேறிய வெளிநாட்டவர்க்கு ஆதார் அட்டை வழங்கப்படக் கூடாது'' என ஆதாருக்கு எதிரான வழக்கில் செப்.23 அன்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது உச்ச நீதிமன்றம். இவ்வுத்தரவை மீளாய்வு செய்யவேண்டுமென மைய அரசு விடுத்த கோரிக்கையை உச்ச நீதிமன்றம் நிராகரித்த போதிலும், இறுதி விசாரணையை விரைந்து நடத்தி முடிக்கவேண்டுமென்ற அரசின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றிருக்கிறது.

ஆதார் அட்டைக்கு எதிரான முதல் ரிட் மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜுவால் டிசம்பர், 2011-இல் தாக்கல் செய்யப் பட்டது. இதற்கு எதிராக யு.ஐ.டி.ஏ.ஐ. (Unique Identification Authority of India) பதில் மனுவும் தாக்கல் செய்து விட்டது. 2012- இல் மும்பை உயர் நீதிமன்றத்தில் விக்ரம் கிருஷ்ணா என்பவரும் ஆதாருக்கு எதிராக ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். இறுதியாக டிசம்பர் 2012 இல் ஓய்வு பெற்ற கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதியான புட்டசாமி, நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். இதனையொட்டி எல்லா வழக்குகளும் உச்ச நீதிமன்ற விசாரணையில் இணைக்கப்பட்டு விட்டன.

அரசுக்கு எதிரான தற்போதைய இடைக்கால உத்தரவுக்கும் ஒரு பின்புலம் இருக்கிறது. ''நீதிபதியே ஆனாலும், ஆதார் அட்டை இல்லாதவனுக்குச் சம்பளம் கிடையாது'' என்று மகாராட்டிர அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவு உச்சநீதிமன்றத்தின் ''ஜனநாயக உணர்வை'' உடனே உசுப்பி விட்டது. இடைக்கால உத்தரவில் சட்டவிரோதக் குடியேறிகள் விவகாரம் இடம்பெறக் காரணம், புட்டசாமி தாக்கல் செய்த மனுவாகும். பா.ஜ.க. வின் கண்ணோட்டத்திலானதும், ஆதார் அட்டையின் பாசிசத் தன்மை குறித்த மையமான பிரச்சினையையே திசைதிருப்பக் கூடியதுமான இவ்விசயத்தை தனது மனுவில் அவர்தான் எழுப்பியிருக்கிறார்.

வங்கதேசத்திலிருந்து சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை அடையாளம் கண்டு வெளியேற்றுவது என்ற பெயரில், முஸ்லிம் மக்கள் அனைவரையும் சந்தேகத்திற்கிடமான சட்டவிரோதக் குடியேறிகளாகச் சித்தரிக்கும் பா.ஜ.க., கார்கில் போரைத் தொடர்ந்து, தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் ''பல்நோக்கு தேசிய அடையாள அட்டை'' வழங்கும் திட்டத்தைத் தொடங்குவதாக அறிவித்தது. அதற்குப் பின்னால் தற்போது காங்கிரசு அரசால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள ஆதார் அட்டை, தேச எல்லைகளைத் தகர்ப்பதையும், தேசிய இறையாண்மை என்பதை முடிவுக்குக் கொண்டு வருவதையுமே நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இது தலைகீழ் மாற்றமல்ல, ஆதார் பற்றி நமக்கு அளிக்கப்பட்டு வருவதுதான் தலைகீழ் தோற்றம்.

குற்றவாளிகளின் பெயர், முகவரியை மட்டுமின்றி, அங்கமச்ச அடையாளங்கள் மற்றும் புகைப்படத்தையும் எடுத்து வைத்துக் கொள்ளும் போலீசைப் போல, ஒவ்வொரு குடிமகனின் புகைப்படம், இரு கைரேகைகள், கை அமைப்பு, விழிப்பாவை, முக அமைப்பு, குரல் போன்ற தனித்துவம் வாய்ந்த அடையாளங்களை அளந்து

ஆதார் அட்டையை வழங்கும் சோனியா காந்தி:
தமது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதை அறியாத மக்கள்.



(Bio-metric) பதிவு செய்து, அவற்றைக் கணினியால் அடையாளம் காணத்தக்க தரவுகளாக மாற்றித் தொகுத்து வைப்பதே ஆதார் திட்டத்தின் பணி. ஆதார் என்பது உங்கள் கையில் அளிக்கப்பட்டிருக்கும் அட்டை அல்ல. சங்கேத எண்களில் விண்ணில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உங்களுடைய அடையாளம்.

ஆனால், இத்திட்டத்தின் நோக்கமாக காங்கிரசு அரசு கூறுவது என்ன? போலி ரேசன் அட்டைகள் காரணமாக உணவு, எரிவாயு மானியச் செலவுகள் அதிகரிப்பதைத் தடுப்பதும், மக்கள் நலத் திட்டங்களில் இடைத்தரகர்கள் கமிசன் அடிப்பதைத் தடுத்து, முழுத்தொகையையும் மக்களுக்குச் சேர்ப்பதும்தான் இந்த ஆதார் திட்டத்தின் நோக்கம் என்கிறது அரசு. ஆனால், ''உங்கள் பணம் உங்கள் கையில்'' என்ற இந்தத் திட்டத்தின் நோக்கமே, உணவு தானியங்கள், மண்ணெண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வெளிச்சந்தையில் வாங்கிக் கொள்ளுமாறு கூறி, அதற்கான அரசு மானியத்தை வங்கிகள் மூலம் வழங்குவதும், அதனை ஆதார் அட்டை மூலம் பெற்றுக் கொள்ளச் செய்வதும்தான். ரேசன் கடைகளை மூடிவிட்டு, பொருட்களின் விலையைச் சந்தையே தீர்மானித்துக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டும் என்பதே உலக வங்கியின் வழிகாட்டுதல். அதனை அமல்படுத்துவதற்கான முதல்படியாகத்தான் ''உங்கள் பணம் உங்கள் கையில்'' என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதை ஏற்கெனவே பல கட்டுரைகளில் அம்பலப்படுத்தியிருக்கிறோம்.

ஒரு குடிமகனின் அடையாளத்திற்கான நிரூபணமாக ரேசன் அட்டை, வங்கிக் கணக்கு, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அட்டை போன்ற சுமார் 15 ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது, பயோமெட்ரிக் அட்டைக்கான அவசியத்தை அரசால் நிறுவ இயலவில்லை. இதனால்தான், ''ஆதார் அட்டை என்பது கட்டாயமல்ல'' என்று ஒருபுறம் கூறிக்கொண்டே, மறுபுறம் எரிவாயு இணைப்பு முதல் வங்கிக் கணக்கு வரையிலான அனைத்துக்கும் ''ஆதார்'' தேவை என்று அந்தந்தச் சேவையை வழங்கும் நிறுவனங்களைக் கூற வைத்து கீழிருந்து சதித்தனமாக இதனைத் திணிக்கிறது. ''ஆதார் இல்லாதவர்களுக்கு உரிமைகளைப் பெறுவதற்கான உரிமை இல்லை'' என்று நவ.23, 2012 அன்று நடந்த தார்குண்டே நினைவு சொற்பொழிவில் வெளிப்படையாகவே அறிவித்தார், ஆதார் ஆணையத்தின் தலைவர் நந்தன் நிலேகனி.

தனியார்மய-தாராளமயக் கொள்கைகளால் உடைமைகள் ஏதுமற்றவர்களாக்கப்பட்டு, நகர்ப்புறத்துக்குப் புலம் பெயருகின்ற கிராமப்புற ஏழைகளுக்கும், வீடற்றவர்களுக்கும், உதிரித் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும் அதிகாரமாகவும், அடையாளமற்ற மக்களின் அடையாளமாகவும் ஆதார் அட்டையைச் சந்தைப்படுத்துகிறது அரசு. பத்து ரூபாய் அரசு சலுகையைப் பெறுவதற்கு பனிரெண்டு அதிகாரிகளின் கையெழுத்துக்காக அலைய வேண்டியிருப்பதாலும், போலீசிடமும் அதிகாரவர்க்கத்திடமும் தாங்கள் யாரென்பதை நிரூபிக்கவேண்டிய நிலைக்கு அடிக்கடி ஆளாக்கப்படுவதாலும், இத்தகைய தொல்லைகளிலிருந்தெல்லாம் தங்களை விடுவிக்கும் வரப்பிரசாதமாக ஆதார் அட்டையைச் சாதாரண மக்கள் கருதுகிறார்கள்.

நம்மைக் கண்காணிப்பதையும் ஒடுக்குவதையும் ஆதார் மிகவும் எளிதாக்கிவிடும் என்ற அபாயத்தை பலர் உணர்வதில்லை. தாங்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதில்லை என்பதால் அஞ்சத் தேவையில்லை என்று பாமரத்தனமாக கருதுகின்றனர். போலீசாரால் ஒரு பொய் வழக்கில் சிக்கவைக்கப்பட்டு விட்டாலோ, ஒரு ஆலையில் நிர்வாகத்துக்கு எதிராகப் போராடி பணிநீக்கம் செய்யப்பட்டாலோ, அந்த விவரங்களை வைத்துக் கொண்டு குறிப்பிட்ட ஒரு நபரை எப்போது வேண்டுமானாலும் துன்புறுத்துவதற்கும் அச்சுறுத்துவதற்குமான சாத்தியத்தை ஆதார் அட்டை கொண்டிருக்கிறது.



" தப்பிப் பிழைத்திருக்கும் கிராமப்புறப் பொருளாதாரத்தை அழிப்பதுடன், நிதிச்சந்தையுடன் அதனை இணைத்து மக்களின் கொஞ்சநஞ்ச சேமிப்பையும், கழுத்துச் சங்கிலியையும் பறிப்பதற்குச் சர்வதேச நிதிமூலதனம் கட்டவிழ்த்துவிட இருக்கும் தீவட்டிக் கொள்ளையின் தொடக்கமாகவே இது இருக்கும். "

கடந்த ஏப்ரல் மாதம் உலக வங்கி நடத்திய கருத்தரங்கில் பேசிய நந்தன் நிலேகனி, 19-ஆம் நூற்றாண்டில் வட அமெரிக்க கண்டத்திற்கு பிழைக்க வந்த ஐரோப்பியர்களை, கனடாவின் எல்லிஸ் தீவைச் சேர்ந்த

குடியேற்றத்துறை அதிகாரிகள் கையாண்ட முறையை நினைவு படுத்தினார். ''குடியேற்றத்துறை அதிகாரிகளிடம் ஐரோப்பியர்கள் விதவிதமான மொழிகளில் தம் பெயர்களைக் கூறினர். அவை யனைத்தையும் ரத்து செய்து விட்டு, ஒவ்வொருவருக்கும் அதி காரிகளே ஒரு பெயரை சூட்டி, இனி இந்த நாட்டில் இதுதான் உன் பெயர் என்று அறிவித்தார்கள். ஆதார் என்பது உலகின் பிரம் மாண்டமான பெயர் சூட்டும் விழா - இது 21-ஆம் நூற்றாண்டின் எல்லிஸ் தீவு'' என்றார் நிலேகனி.

உங்கள் உண்மையான பெயர், பெற்றோரின் பெயர், இனம், மொழி, மதம், ஊர், தொழில், கல்வித்தகுதி ஆகியவை ஒருபுற மிருக்க, ஒரு மனிதன் என்ற முறையில் உங்களது உடலின் தனித்து வமான அடையாளங்களை மட்டும் (விழிப்பாவை, ரேகை இன்ன பிற) பதிவு செய்து கொண்டு, இவ்வடையாளங்களைக் கொண்ட உடலுக்குரிய சங்கேத எண் கணினியில் பதிவு செய்யப்படும். இதன் பின்னர் நீங்கள் சோதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம், ''குறிப்பிட்ட பயோ மெட்ரிக் அளவீடுகளுக்குரிய உடல மைப்பைக் கொண்ட மனிதன் நான்தான்'' என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகி விடும். ''உங்களுடைய விழிப்பாவை மற்றும் ரேகைகளில் காலப்போக்கில் மாற்றம் ஏற் படுமாதலால், குறிப்பிட்ட கால இடைவெளியில் உங்கள் பயோ மெட்ரிக் அடையாளங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்'' என்றும் யு.ஐ.டி.ஏ.ஐ. (Unique Identification Authority of India) கூறுகிறது.

மாட்டுக்கு சூடு வைப்பதைக் காட்டிலும் மோசமாக, மனிதர்க்கு இலக்கமிடும் இந்த முறையை, ''ஒற்றை தேசிய அடையாளம்'' என்று கூறி வரவேற்றிருக்கிறார் தேசியப் புலனாய்வு வலைப்பின்னலின் (National Intelligence Grid) தலைவர் ரகுராமன். ''நாட்கிரிட்'' என்பது உள்நாட்டு பாதுகாப்பு அபாயத்தைக் கையாள்வதற்கென்று தனியே உருவாக்கப்பட் டிருக்கும் ஒரு உளவுத்தகவல் வலைப்பின்னல். குடிமக்கள் அனை வருடைய தொலைபேசி, இணைய சேவை, ரயில்-விமான போக்குவரத்து விவரங்கள், வங்கிக் கணக்குகள், கடன் அட்டைகள், வீடு-நிலப்பத்திரங்கள், ஓட்டுநர் உரிமங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இன்னும் இரண்டு ஆண்டு களுக்குள் இதில் இணைக்கப்படவிருக்கின்றன. இதனுடன் ஆதார் எப்போது வேண்டுமானாலும் இணைக்கப்படக்கூடும்.

ஆதார் அட்டை என்பதன் நோக்கம் மக்களை உளவு பார்ப் பது மட்டுமோ, அரசு பிரச்சாரம் செய்வதைப் போல குக்கிராமங் களில் இருக்கும் மக்களுக்கு அரசின் உதவித்தொகையைக் கொண்டு சேர்ப்பதோ அல்ல. கிராமப்புற மக்கள் வைத்திருக்கும் சேமிப்புப் பணத்தையும், நகைகளையும் வங்கிகளை நோக்கி ஈர்ப்பது, கிராமப்புறங்களில் இன்னமும் நீடிக்கும் உள்ளூர் அளவிலான பொருளாதாரத்தை அழித்து, தேசிய நுகர்வுச் சந்தை யுடனும், வங்கிக் கடன் சந்தையுடனும் கிராமப்புற மக்களை இணைப்பது - என்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற் கான வாகனமாக ஆதார் அட்டை இறக்கப்பட்டிருக்கிறது.

கிராமப்புற வங்கிக் கிளைகளால் வருமானமில்லை என்று அவற்றை மூடி, விவசாயக் கடன்களை நிறுத்தி கிராமப்புறத்தைப் புறக்கணித்த வங்கிகளின் பார்வை, ஆதார் அட்டைக்குப் பின் கிராமப்புறத்தை நோக்கித் திரும்பியிருக்கிறது. கிராமப்புற மக்கள் தமது சேமிப்பில் 42%-ஐப் பணமாக வைத்துள்ளனர் என்கிறது அரசின் ஆய்வு. இன்னமும் வங்கிச் சேவையுடன் இணைக்கப் படாமல் இருக்கும் நாட்டின் 60% கிராமப்புற மக்களை உடனே வங்கிச் சேவையுடன் இணைத்து அவர்கள் ''சட்டி-பானைகளில் போட்டு வைத்திருக்கும் சேமிப்புகளை வங் கிக்குக் கொண்டுவர வேண்டும்'' என்று கூறி யிருக்கிறார் ரிசர்வ் வங்கித் தலைவர் ரகுராம் ராஜன்.

''ஒருவர் வங்கிக் கணக்கைத் தொடங்குவ தற்கு ஆதார் அட்டையே போதுமானது'' என்று ரிசர்வ் வங்கி அறிவித்துவிட்டது. ஒரு ஆண் டிற்குள் ஆதார் அட்டை அடிப்படையிலான 10 கோடி வங்கிக் கணக்குகள் தொடங்கப் பட்டுவிடும் என்று கூறியிருக்கிறார் நிலேகனி. கிராமங்களில் ஒரு கிளை கூட இல்லாத ஆக்சிஸ் வங்கி போன்ற பன்னாட்டு வங்கிகள், ''ஆதார் அட்டையைக் காட்டினால் யார் வேண்டுமா னாலும் எங்கள் வங்கியில் கணக்கைத் தொடங் கலாம்'' என்று கூவிக்கூவி அழைக்கின்றன.

இந்த வங்கிகள் கிராமங்களில் தனது கிளை களைத் திறக்காமல், வணிக முகவர்கள் (Business correspondents) எனப்படுவோரை நியமித்து, அவர்களிடம் அட்டைகளை ''ஸ்வைப்'' செய்வதற்கான கருவிகளையும் குறிப்பிட்ட அளவு பணத்தையும் அளித்து, அவர்களையே நடமாடும் வங்கிகளாகப் பயன் படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் சுமார் 70,000 பேர் நியமிக்கப்பட்டிருக் கின்றனர். கிராமங்களில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அஞ்சலகங்கள் போன்ற அமைப்புகளையும்

ஆதார் குறித்த மயக்கம்:
படித்தவர்களும் பாமரர்களே!



வணிக முகவர்களாகப் பயன்படுத்தி அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் எல்லா கிராமங்களையும் வங்கி வலைப்பின்னலுடன் இணைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

தப்பிப் பிழைத்திருக்கும் சுயசார்புப் பொருளாதாரத்தை அழிப்பதுடன், நிதிச்சந்தையுடன் இணைத்துக் கொள்வது (Financial inclusion) பெயரில் மக்களின் கொஞ்ச நஞ்ச சேமிப்பையும், கழுத்துச்சங்கிலியையும் பறிப்பதற்கு சர்வதேச நிதிமூலதனம் கட்டவிழ்த்துவிட இருக்கும் தீவட்டிக் கொள்ளையின் தொடக்கமாகவே இது இருக்கும்.

> **"உங்களது உடலின் தனித்துவமான அடையாளங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்ட பின்னர் நீங்கள் சோதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம், ''குறிப்பிட்ட பயோ-மெட்ரிக் அளவீடுகளுக்குரிய உடலமைப்புக் கொண்ட மனிதன் நான்தான்'' என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையதாகிவிடும்."**




**ஆ**தார் என்பது 14 வளர்முக நாடுகளில் மின்னணுவியல் நிர்வாகத்தைப் (e-transform initiative) புகுத்துவது என்ற உலக வங்கித் திட்டத்தின் அடிப்படையிலானது. இந்திய மக்களிடம் ஆதாருக்கான தரவுகளைத் திரட்டுபவர்கள் யார்?

நாஜி ஜெர்மனியில் மக்கட்தொகைக் கணக்கெடுப்பு விவரங்களை ''பஞ்ச் கார்டு'' முறையிலான கணினியில் பதிவு செய்து இட்லர் அரசிடம் ஒப்படைத்து, யூத இனப்படுகொலைக்கு வழியமைத்துக் கொடுத்த ஐ.பி.எம். என்ற அமெரிக்க கணினி நிறுவனம், அமெரிக்க இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புள்ள எல்.1 சர்வீசஸ் என்ற நிறுவனம், முன்னாள் சி.ஐ.ஏ. அதிகாரிகளை நிர்வாகிகளாகக் கொண்டிருக்கும் அசென்ச்சர் நிறுவனம் போன்ற நிறுவனங்களின் மூலம்தான் பயோமெட்ரிக் தரவுகள் மக்களிடமிருந்து திரட்டப்படுகின்றன. இவற்றை அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தக் கூடும்.

அதுமட்டுமின்றி, ஆதார், நாட்கிரிட், தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையம், ''இ.பேமென்ட் சிஸ்டம்'' போன்ற பலவும் உலக வங்கியின் மின்னணுவியல் நிர்வாகத்துடனும், நேட்டோவின் கொள்கைகளுடனும் இணைக்கப்பட்டிருக்கின்றன. பெருமளவில் மக்கள் கொந்தளிப்புகளைச் சந்தித்து வரும் கிரீஸ், எகிப்து மற்றும் அமெரிக்க வெறுப்பில் குமுறிக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் குடிமக்கள் அடையாள அட்டை விவரங்கள், அமெரிக்க அரசிடம் கையளிக்கப்பட்டிருப்பதை விக்கி லீக்ஸ் அம்பலப்படுத்தியிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் பார்க்கும்போது, ஆதார் என்பது அமெரிக்கக் கண்காணிப்புக்கு இந்தியக் குடிமக்களை ஒப்புக் கொடுக்கின்ற இந்திய அரசின் நடவடிக்கையாகும் என்பதைப் புரிந்து கொள்ள இயலும்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஆதார் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய நிலேகனியிடம், ''2050 வாக்கில் தேசிய அரசுகள் தட்டித் தகர்க்கப்பட்டு, ஒரு உலக அமைப்பு உருவாகிவிடும் என்று கருதுகிறீர்களா?'' ''ஒருவேளை ஆப்பிரிக்காவில் ஆதார் அட்டை போன்ற ஒன்றை உருவாக்கித் தருமாறு உங்களிடம் கேட்டால், ஆப்பிரிக்கர்களுக்கென்று புதிய சங்கேத எண்களை உங்களால் உருவாக்கித் தர முடியுமா?'' என்று கேள்வி எழுப்பினார் உலக வங்கித் தலைவர்.

''100 கோடிப் பேருக்கு செய்ய முடிவதை 700 கோடிப் பேருக்கும் ஏன் செய்ய முடியாது? உலகின் மக்கட்தொகை முழுவதையும் ஆதாருக்குள் கொண்டு வருவதற்குத் தொழில்நுட்பம் ஒரு தடையல்ல'' என்று பதிலளித்தார் நிலேகனி.

''அப்படியானால் தேசிய இறையாண்மை என்பதை முற்றிலுமாகப் பிளந்தெறியவிருக்கின்ற ஆப்புதான் ஆதார் என்று எடுத்துக் கொள்ளலாமா?'' என்று உற்சாகமாக அடுத்த கேள்வியைக் கேட்டார் உலக வங்கியின் தலைவர்.

நாட்டின் இறையாண்மையைப் பிளத்தல் என்ற சொற்றொடர் நிலேகனியிடம் எந்த அதிர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. ''அது எந்த அளவுக்கு நாம் (அரசு நிர்வாகத்தை) மையப்படுத்தப் போகிறோம் என்பதைப் பொருத்தது'' என்று அவருக்குப் பதிலளித்ததன் மூலம் நாடுகளின் இறையாண்மை அழிக்கப்படுவதற்குத் தான் காத்திருப்பதை வெளிப்படுத்தினார் நிலேகனி.

இந்தியாவின் பாதி மக்கட்தொகைக்கு ஆதார் வழங்கப்பட்டுவிட்டது. அதாவது, இறையாண்மையின் மீது இறங்கிய ஆப்பு, அதனைப் பாதியளவுக்குப் பிளந்துவிட்டது. ''மீதியையும் பிளப்பது அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதே'' என்று வாதிடுவதற்கு அட்டர்னி ஜெனரல் ஆஜராகிறார். ''இறையாண்மையைப் பிளந்தெறியும் அதிகாரம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு உண்டு'' என்று நிலைநாட்டும் பொருட்டு ஆதார் மசோதா நாடாளுமன்றத்தில் காத்திருக்கிறது.

ஆப்பை அசைக்கும் அதிகாரம் பெற்ற நீதிமன்றமோ, இறையாண்மையின் மீது அமர்ந்திருக்கிறது.

● **சூரியன்**

# தீவிரவாத ஒழிப்பா, முசுலீம் வேட்டையா?

நாடெங்கும் பயங்கரவாத வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முசுலீம்களுள் பெரும்பாலோர் அப்பாவிகள்; பெரும்பாலான வழக்குகள் மோசடியானவை என்பது அம்பலமாகி வருகிறது.

**போ**லீஸ் பக்ருதீன், பிலால் மாலிக், பன்னா இஸ்மாயில் ஆகிய மூவரும் அடுத்தடுத்துக் கைது செய்யப்பட்டிருப்பது தமிழக போலீசின் துணிச்சலுக்கும் திறமைக்கும் கிடைத்த வெற்றியாகத் தமிழக அரசு கூத்தாடிக் கொண்டாடி வருகிறது. எனினும், ஜெயா அரசின் இந்த ஆரவாரத்தையெல்லாம் மீறித் தமிழக போலீசின் சொல்லிக் கொள்ளப்படும் இந்த சாகச நடவடிக்கை குறித்தும், அதனைத் தொடர்ந்து அவர்கள் நடத்திவரும் விசாரணைகள் குறித்தும் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

போலீஸ் பக்ருதீன் சென்னைக்கு வந்திருப்பதைத் துப்பறிந்து, அவரது நடமாட்டத்தைக் கண்காணித்து, அவரைத் தொடர்ந்து சென்று, எதிர்பாராத சமயத்தில் அவர் மீது பாய்ந்து, அவரோடு கட்டிப் புரண்டு சண்டை போட்டு, பெரும் போராட்டத்துக்குப் பிறகுதான் பக்ருதீன் கைது செய்யப்பட்டதாகத் தமிழக போலீசு கூறிவரும் அதேசமயம், இதனை மறுக்கும் தகவல்கள் பல்வேறு தரப்பிலிருந்து வெளிவந்துள்ளன.

''சில முசுலீம் அமைப்புகளின் வற்புறுத்தலால் பக்ருதீன் சரணடைய ஒப்புக் கொண்டதாகவும், இதனையடுத்து அந்த முசுலீம் அமைப்புகள் போலீசோடு நடத்திய பேச்சுவார்த்தையின் முடிவில், ஒரு பொதுவான இடத்தில் பக்ருதீனை போலீசிடம் சரணடைய வைப்பது'' என முடிவாகியதாக ஜூனியர் விகடன் (13.10.13, பக்.45) கிசுகிசு பாணியில் எழுதியிருக்கிறது.

பக்ருதீனுக்காக சென்னை உயர்நீதி மன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ள இந்திய தேசிய லீக்பொதுச் செயலாளர் அப்துல் ரஹீம், ''பக்ருதீனை சென்னை பெரியமேட்டில் உள்ள விடுதி ஒன்றில் வைத்துதான் போலீசார் கைது செய்திருக்கிறார்கள்'' எனக் கூறியிருக்கிறார். (குமுதம் ரிப்போர்ட்டர், 13.10.2013, பக்.8)

''போலீஸ் பக்ருதீன் சாகுல் ஹமீது என்பவர் மூலம் தமிழகம் மற்றும் ஆந்திர போலீசாரைத் தொடர்பு கொண்டு, தான் சரணடைய விருப்பம் தெரிவித்ததாகவும், அதன் அடிப்படையில்தான் போலீசார் அவரை பெரியமேட்டுக்கு வரச்சொல்லிக் கைது செய்ததாக ஒரு செய்தி வந்திருப்பதாக''க் குறிப்பிட்டுள்ள தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, ''போலீஸ் பக்ருதீன் தானாகச் சரணடைந்தாரா? அல்லது போலீசார் சண்டை போட்டுப் பிடித்தார்களா? எது உண்மை ?'' எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

தீவிரவாதிகளைக் கண்காணிப்பதற்கு எஸ்.ஐ.டி., எஸ்.ஐ.யூ., எஸ்.ஐ.சி., என ஒன்றுக்கும் மேற்பட்ட பிரிவுகள் தமிழக போலீசில் இருந்து வந்தாலும், அவைகளில் ஒன்றுகூட பக்ருதீன் கூட்டாளிகள் புத்தூரில் தங்கியிருப்பதைத் துப்பறிந்து கண்டுபிடிக்கவில்லை. சரணடைந்த பக்ருதீனிடமிருந்துதான் போலீசார் அந்தத் தகவலைப் பெற்றுள்ளனர். இம்மூவரையும் கைது செய்த பிறகோ, சமீபத்தில் நடந்த இந்து முன்னணி தலைவர்கள் கொலை வழக்குகள் அனைத்தையும் இந்த மூவரின் தலையில் கட்டிவிட்டது, தமிழக போலீசு.

இந்து முன்னணி மற்றும் பா.ஜ.க.வைச் சேர்ந்த உள்ளூர் தலைவர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டிருப்பது தொடர்பாக தமிழக டி.ஜி.பி. 27.7.2013 அன்று வெளியிட்டிருந்த அறிக்கையில், ''பா.ஜ.க. மாநில மருத்துவ அணிச் செயலர் அரவிந்த் ரெட்டி கொலை, பணப்பரிமாற்றம் விவகாரம் தொடர்பாக நடந்தது. இவ்

தமிழக போலீசால் கைது செய்யப்பட்டுள்ள (இடமிருந்து) பிலால் மாலிக், பன்னா இஸ்மாயில், போலீஸ் பக்ருதீன்.



வழக்கில் வேலூரைச் சேர்ந்த வசூர் ராஜா உள்ளிட்ட ஏழு பேர் கைது செய்யப்பட்டு, குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. பரமக்குடி நகரபா.ஜ.க. கவுன் சிலர் முருகன், சொத்து விற்பனை தொடர் பாக நடந்த தகராறில் கொல்லப்பட்டார். இவ்வழக்கில் நான்கு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்'' என விளக்கியிருந்தார். ஆனால், இதற்கு மாறாகத் தற்பொழுது அர விந்த் ரெட்டி, முருகன் கொலைகளுக்கும் பக்ருதீனும் அவரது கூட்டாளிகளும்தான் காரணம் என போலீசு கூறுகிறது. இதில் எது உண்மை? எது பித்தலாட்டம்?

மேலும், இம்மூவரும் இந்து முன் னணியின் ராம.கோபாலன், தினமலர் அதிபர் கோபால்ஜி ஆகியோரைப் படு கொலை செய்யத் திட்டம் தீட்டியதாகவும்; சென்னையில் நடந்த திருப்பதி குடை ஊர் வலத்தைச் சீர்குலைக்கச் சதி செய்ததாகவும்; மோடியைக் கொல்ல நோட்டம் விட்டதாகவும் பீதி கிளப்பியிருக் கிறது, தமிழக போலீசு. இதன் மூலம் தானே முன்வந்து போலீசிடம் சரணடைந்ததாகக் கூறப்படும் பக்ருதீனை யும், கத்தியைத் தவிர வேறு ஆயுதங்கள் இல்லாத நிலை யில் கைது செய்யப்பட்ட பிலால் மாலிக், பன்னா இஸ் மாயிலையும் மிகப்பெரிய தீவிரவாதக் கும்பலாகச் சித் திரிக்க முனைந்து வருகிறது.

''பக்ருதீனைப் பற்றி போலீசு கூறுவதில் கொஞ்சம் உண்மையும் நிறைய பொய்யும் இருக்கிறது'' எனக் கூறு கிறார், அவரது சகோதரர் தர்வேஸ் மைதீன். ''1995-ஆம் ஆண்டில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் குண்டு வெடிப்பு வழக்கில் முதன்முதலாக பக்ருதீனைக் கைது செய்தார்கள். இதில் உண்மைக் குற்றவாளி வெங்க டேசன் என்ற முஸ்தபா என்பது தெரிய வந்தது. ஆனாலும், அன்று முதல் பக்ருதீனைத் தீவிரவாதி என முத்திரை குத்திவிட்டது போலீசு'' என்கிறார் அவர்.

பக்ருதீனின் சகோதரர் என்ற ஒரே காரணத்திற்காகவே தர்வேஸ் மைதீனும் அத்வானியைக் கொல்ல பாலத்திற்கு அடியில் குண்டு வைத்த வழக்கில் கைது செய்யப்பட்டு, பிணையில் வெளியே வந்திருக்கிறார். பக்ருதீனைக் காரணம் காட்டியே, அக்குடும்பத்தைத் தொடர்ந்து சித் திரவதை செய்து வந்திருக்கிறது, போலீசு. பக்ருதீன் மனைவிக்கு நிர்பந்தம் கொடுத்து, அவரை மண விலக்குப் பெற வைத்திருக்கிறது.

''ஒரு கொலைவழக்கில் கைதாகி விடுதலை ஆன பிறகு, எந்தப் பிரச்சினை என்றாலும் அவர் மீதும் சேர்ந்து வழக்குப் போடுவது போலீசுக்கு வாடிக்கையாகி விட்டது. போலீஸ் டார்ச்சரால் எங்க குடும்பமே சீரழிஞ்சு போச்சு'' எனக் கூறுகிறார், பன்னா இஸ்மாயிலின் மனைவி ஷமீம் பானு.

போலீசின் இந்தச் சித்திரவதைகளும் அச்சுறுத்தல் களும் ''அவர்கள் தவறு செய்திருந்தால் தூக்கில்கூட போடுங்கள்; எங்களை நிம்மதியாக இருக்கவிடுங்கள்'' எனக் கூறும் நிலைக்குத் அக்குடும்பங்களைத் தள்ளிவிட் டிருக்கிறது. பக்ருதீன், பன்னா இஸ்மாயிலின் குடும்பங் கள் மட்டுமல்ல, ஏறத்தாழ முசுலீம் சமூகத்தின் நிலை மையே இதுதான். தம் மீது குத்தப்பட்டுள்ள தீவிரவாத முத்திரையைக் களைந்து கொள்வதற்கு அச்சமூகமே தீயில் இறங்கித் தம்மைப் புனிதனாகக் காட்டிகொள்ளும் கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.



மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் மோசடியாகச் சிக்கவைக்கப்பட்டு, ஐந்தாண்டு சிறைவாசம் அனுபவித்த அப்பாவி முசுலீம்கள்.

சிறு சிறு திருட்டுகள், அடிதடி வழக்குகளில் கைது செய்யப்படும் இளைஞர்களின் பெயர்களை ரௌடிகள் லிஸ்டில் வைத்து வதைக்கும் போலீசின் கிரிமினல் புத்தி யும், அத்துறையில் ஊறியிருக்கும் இந்து மதவெறியும் ஒருசேரக் கலந்து பக்ருதீன் விவகாரத்தில் வெளிப்பட் டுள்ளது. இது மட்டுமின்றி, பிடிபட்ட பக்ருதீன் உள்ளிட்ட மூவர் மீது அரவிந்த் ரெட்டி, முருகன், ஆடிட்டர் ரமேஷ் கொலை வழக்குகளைச் சகட்டு மேனிக்குப் பாய்ச்சியிருப்பதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் அரசியல் நோக்கங்களுக்கு ஒத்தூதும் வேலை யையும் தமிழக போலீசு கனகச்சிதமாகச் செய்து முடித் திருக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, நாடெங்கும் நடந் துள்ள பல்வேறு குண்டுவெடிப்பு வழக்குகளில் போலீசு எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் கீறிப் பார்த்தாலே, அதனின் புத்தியில் முசுலீம் வெறுப்பும் இந்து மதவெறிச் சார்பும் உறைந்து போயிருப்பதையும்; அறிவிக்கப்படாத ஆர்.எஸ்.எஸ்.இன் அடியாளாக அத்துறை செயல்பட்டு வருவதையும் புரிந்துகொள்ளலாம்.

- மகாராஷ்டிராவிலுள்ள மாலேகான் நகரிலும், ம.பி.யிலுள்ள அஜ்மீர் தர்காவிலும், சம்ஜௌதா விரைவு ரயிலிலும் நடந்த குண்டுவெடிப்புகளை ஆர்.எஸ்.எஸ். கும்பல்தான் நடத்தியது என்பது தற்பொழுது உறுதியாகி விட்டது. அஜ்மீர் தர்கா குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த அசீமானந்தா இதனை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்திருக்கிறார். ஆனால், அக்குண்டுவெடிப்புகள் நடந்தவுடனேயே அதற்கான பழி கயமைத்தனமான



''மாலேகான் குண்டுவெடிப்பை நாங்கள்தான் செய்தோம்'' என ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த அசீமானந்தா.

முறையில் முசுலீம்கள் மீது சுமத்தப்பட்டு அப்பாவிகள் கைது செய்யப்பட்டனர்.

குறிப்பாக, மாலேகான் குண்டுவெடிப்பில் அப்ரார் அகமது என்ற போலீசு ஆட்காட்டி அளித்த சாட்சியத்தை ஆதாரமாகக் காட்டி, 9 முசுலீம்களைக் கைது செய்தது, அம்மாநில தீவிரவாதத் தடுப்பு போலீசு. வழக்கு விசாரணையின் போக்கில் அப்ரார் அகமதுவும் இவ்வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட விசித்திரமும் நடந்தது. அதன்பின் அப்ரார் அகமது அந்த 9 முசுலீம்களுக்கும் எதிராக, தான் அளித்த சாட்சியத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். ஆனாலும், தீவிரவாதத் தடுப்பு போலீசு அப்ரார் அகமது அளித்த பொய் சாட்சியத்தின் அடிப்படையிலேயே வழக்கை நடத்தி வந்தது. இவ்வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்ட பிறகும், வழக்கின் போக்கில் எந்த மாற்றமும் நடக்கவில்லை. மாலேகான் குண்டுவெடிப்பை இந்து மதவெறியர்கள்தான் நடத்தினார்கள் என்பது அம்பலமான பிறகுதான், அந்த 9 முசுலீம்களும், செய்யாத குற்றத்திற்காக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசத்தை அனுபவித்த பிறகு பிணையில் விடுவிக்கப்பட்டனர். எனினும், அந்த அப்பாவிகள் இன்னும் வழக்கிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

> **நாடெங்கும் நடந்துள்ள பல்வேறு குண்டுவெடிப்பு வழக்குகளில் போலீசு எடுத்திருக்கும் நடவடிக்கைகளைக் கீறிப் பார்த்தாலே, அதனின் புத்தியில் முசுலீம் வெறுப்பும் இந்து மதவெறிச் சார்பும் உறைந்து போயிருப்பதையும்; அறிவிக்கப்படாத ஆர்.எஸ்.எஸ்.இன் அடியாளாக அத்துறை செயல்பட்டு வருவதையும் புரிந்து கொள்ளலாம்.**

● மும்பய் புறநகர் பகுதி மின்சார ரயில்களில் ஜூலை 11, 2006 அன்று நடந்த ஏழு குண்டு வெடிப்புகளில் 187 பேர் கொல்லப்பட்டனர். இது குறித்து விசாரணை நடத்தி வரும் மகாராஷ்டிரா தீவிரவாதத் தடுப்பு போலீசு பிரிவு, இந்திய மாணவர் இசுலாமிய இயக்கம்தான் (சிமி) இக்குண்டுவெடிப்புகளை நடத்தியதாகக் கூறியதோடு, அவ்வமைப்பைச் சேர்ந்தவர்கள் எனக் குற்றஞ்சுமத்தி 13 முசுலீம்களைக் கைது செய்து சிறையிலடைத்தது. கடந்த ஏழு ஆண்டுகளாக நடந்து வரும் இவ்வழக்கு விசாரணையில், இந்த 13 பேருக்கு எதிராக ஒரு உருப்படியான ஆதாரத்தைக்கூட தீவிரவாதத் தடுப்பு போலீசார் முன்வைக்கவில்லை; குற்றஞ்சாட்டப்பட்டவர்களுள் ஒருவரான இஹ்தேஷம் சித்திக்கிற்கு எதிராகச் சாட்சியம் அளித்துள்ள விஷால் பர்மர் போலீசாரால் தயார்படுத்தப்பட்ட பொய்சாட்சியம் என்பதும் அம்பலமாகியிருக்கிறது.

இதுவொருபுறமிருக்க, மும்பய் குற்றப்பிரிவு போலீசு, கடந்த 2008-ஆம் ஆண்டு சாதிக் சித்திக் என்பவர் உள்ளிட்ட ஐந்து பேரைக் கைது செய்தது. ''இவர்கள் ஐந்து பேரும் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பைச் சேர்ந்தவர்கள்; இந்த ஐந்து பேர்தான் மும்பய் புறநகர் மின்சார ரயில்களில் நடந்த குண்டுவெடிப்புகளுக்குக் காரணமானவர்கள்; சாதிக் சித்திக் இதனை ஒப்புக்கொண்டு தங்களிடம் வாக்குமூலம் அளித்திருப்பதாக''க் கூறி வருகிறது, மும்பய் குற்றப்பிரிவு போலீசு. ஆனாலும் தீவிரவாதத் தடுப்பு போலீசு பிரிவு, தான் பிடித்த முயலுக்கு மூணுகால் எனப் பிடிவாதமாக 13 பேருக்கும் எதிராக வழக்கை நடத்தி வருகிறது. ஒரே வழக்கில் இரண்டு விதமான விசாரணை முடிவுகள், குற்றவாளிகள் - என்ற இந்தக் கூத்தை விசாரணை நீதிமன்றமும் கேள்விக்குள்ளாக்கவில்லை. இந்நிலையில் பத்திரிகையாளர் ஆஷிஷ் கேதான் (குஜராத் முசுலீம் படுகொலைகளில் இந்து மதவெறிக் கும்பலுக்கு உள்ள பங்கை இரகசிய வாக்குமூலமாக சேகரித்து அம்பலப்படுத்தியவர்) இக்குண்டு வெடிப்பு வழக்கில் போலீசு நடத்தியிருக்கும் விசாரணை பொய் மூட்டையாக இருப்பதால், சுதந்திரமான கமிசனை அமைத்து இவ்வழக்கு குறித்து விசா

டெல்லி போலீசால் 20 பயங்கரவாத வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டு, 14 ஆண்டு கால சிறைவாசத்திற்குப் பிறகு, ''குற்றமற்றவர்; வழக்குகள் மோசடியானவை'' எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள முகம்மது ஆமிர் கான்.



ரிக்க வேண்டும் எனக் கோரி மும்பய் உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்திருக்கிறார்.

● 2010-ஆம் ஆண்டு நடந்த புனே ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு வழக்கில் ஹிமாயத் பேய்க் என்ற முசுலீம் இளைஞருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவருக்கு எதிராக சாட்சியம் அளித்த அத்துணை பேரையும் இரகசியமாக பேட்டி எடுத்த ஆஷிஷ் கேதான், இச்சாட்சியங்கள் அனைவரும் பேய்கிற்கு எதிராகச் சாட்சியம் அளிப்பதற்கு ஏற்றவாறு (மகாராஷ்டிராவின்) தீவிரவாதத் தடுப்புப் பிரிவு போலீசாரால் சித்திரவதை செய்யப்பட்டு தயார்படுத்தப்பட்டதை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

இதுவொருபுறமிருக்க, இவ்வழக்கின் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் இந்தியன் முஜாஹிதீன் அமைப்பின் தலைவர் யாசின் பக்தல் கடந்த ஆகஸ்டு மாதம் கைது செய்யப்பட்டார். ''ஜெர்மன் பேக்கரி வழக்கிற்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேய்கிற்கும் சம்பந்தமில்லை; அக்குண்டுவெடிப்பைத் தானும் காதில் சித்திக் என்பவரும்தான் சேர்ந்து நடத்தியதாக'' வாக்குமூலம் அளித்திருக்கிறார். ஆனாலும், இவ்வழக்கை நடத்திவரும் தீவிரவாதத் தடுப்பு போலீசு பேய்கிற்கு எதிராகத் தன்னிடம் வலுவான சாட்சியங்கள் இருப்பதாக இன்னமும் கூறிவருகிறது.

குண்டுவெடிப்பு வழக்குகளில் பொய் சாட்சிகளைத் தயாரித்து மோசடியாக வழக்குகளை நடத்திவருவதற்கு, அப்பாவி முசுலீம்கள் சிக்க வைக்கப்பட்டிருப்பதற்கு, ஆர்.எஸ்.எஸ். கும்பல் நடத்திய குண்டுவெடிப்புகளுக்குக்கூட முசுலீம்கள் மீது பழி போட்ட கயமைத்தனத்திற்கு இன்னும் பல வழக்குகளை எடுத்துக் காட்டலாம். இந்த அத்துமீறல்கள் குறித்த விவாதம் கடந்த இருபது ஆண்டுகளாக இந்திய அரசியல் வெளியில் நடந்து வருகிறது. இத்துணை ஆண்டுகளாக இது பற்றி வாயே திறக்காத காங்கிரசு கும்பல், இப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில், ''தீவிரவாத வழக்குகளில் அப்பாவி முசுலீம்கள் கைது செய்யப்படுவதை மாநில அரசுகள் தடுத்து நிறுத்த வேண்டும்; தவறு செய்யும் போலீசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டு, உப்புப் பெறாத கடிதமொன்றை மாநில அரசுகளுக்குத் தட்டிவிட்டிருக்கிறது. அதேசமயம், இப்படியொரு சடங்குத்தனமாகக் கடிதத்தை அனுப்புவதைக்கூட இந்து மதவெறிக் கும்பல் விரும்பவில்லை. ''இவை முசுலீம்களை தாஜா செய்யும் நடவடிக்கை'' என பா.ஜ.க. குதிக்கத் தொடங்கிவிட்டது. இந்து மதவெறிக்கும் அரசு பயங்கரவாதத்துக்கும் இடையே மாட்டிக்கொண்டுள்ள முசுலீம் சமூகமோ அச்சத்துக்கிடையே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

● செல்வம்

## பாவ் நகர் - மிதி விர்தி:

# குஜராத்தின் கூடங்குளம்?

குஜராத் மாநிலம் பாவ்நகர் மாவட்டத்திலுள்ள மிதி விர்தி கிராமத்தில் ''வெஸ்டிங் ஹவுஸ் கார்ப்பரேசன்'' என்ற அமெரிக்க நிறுவனம், 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் 6600 மெகா வாட் மின்னுற்பத்தித் திறனுள்ள அணு உலைகளைக் கட்டவிருக்கிறது. இப்பேரழிவுத் திட்டத்தை எதிர்த்து அப்பகுதியிலுள்ள 40-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.



குஜராத்தில் நிறுவப்படவுள்ள அணு உலைத் திட்டத்துக்கு எதிராக கிராம மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

அணு உலையில் விபத்து ஏற்பட்டால், அணு உலையைக் கட்டியமைத்த நிறுவனம் மிகமிகக் குறைவான தொகையை நட்டஈடாகக் கொடுத்தால் போதும் என்றவாறு அணுசக்தி கடப்பாடு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அற்பமான நட்ட ஈடு கொடுக்கும் விதியும்கூட இருக்கக் கூடாதென்று வெஸ்டிங் ஹவுஸ் கார்ப்பரேசன் போன்ற அமெரிக்க நிறுவனங்கள் நிர்பந்திக்கின்றன. கடந்த செப்டம்பர் மாத இறுதியில் அமெரிக்காவிற்குச் சென்ற மன்மோகன் சிங், இந்நிறுவனங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துவிட்டு வந்துள்ளார். மன்மோகனின் இச்செயலைக் கண்டித்தும், மிதி விர்தி அணு உலைத் திட்டத்தைக் கைவிடக் கோரியும், கடந்த செப்டம்பர் மாதம் 24-ஆம் தேதியன்று ஆயிரக்கணக்கான கிராம மக்கள் ஊர்வலமாகத் திரண்டு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தி, மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளனர்.

ஆனால் காங்கிரசுக் கூட்டணியின் மைய அரசும், குஜராத்தை ஆளும் பா.ஜ.க.வும் விவசாயிகளின் போராட்டத்தை அலட்சியப்படுத்திவிட்டு, அணு உலைகளைக் கட்டியமைப்பதில் முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அணுசக்தி கடப்பாடு மசோதாவை நிறைவேற்றுவதில் காங்கிரசு கூட்டணி அரசுக்குப் பக்கபலமாக இருந்து உதவிய பா.ஜ.க., இப்போது தங்களது ஆட்சியிலுள்ள குஜராத்தில் மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி அணு உலையைக் கட்டும் அமெரிக்க நிறுவனத்திற்கு விசுவாசமாக நின்று, தங்களுக்கும் காங்கிரசுக்கும் எந்த வேறுபாடு மில்லை என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

ஈழம்

# தமிழினவாதிகளின் அரசியல் பாமரத்தனம்!

**பாசிச இராஜபக்சே கும்பலின் அரசு அதிகாரத்தை வீழ்த்தாமல் ஈழத் தமிழர்கள் சம உரிமை, அதிகாரப்பகிர்வு, தன்னுரிமை, தமிழீழத் தனியரசு உள்ளிட்ட எதையும் அடைய முடியாது. அதற்கான வழியைச் சொல்ல மறுத்து, “வெற்றுச் சவடால்” அடித்து வருகிறார்கள் தமிழினவாதிகள்.**

யதார்த்த நிலைகள் கன்னத்தில் அறைந்த போதும் தமிழினவாதிகளும் புலி ஆதரவாளர்களும் உண்மைகளைக் காண மறுத்துக் குளிர்க் காய்ச்சல் வந்தவர்களைப் போல பிதற்றுகிறார்கள். குட்டி முதலாளியத் தன்னகங்காரம் (Ego) உண்மைகளைக் காண முடியாமல் அவர்களைத் தடுக்கிறது. மேலும், இவர்கள் அடிப்படையில் யதார்த்த உண்மைகளை எதிர்கொள்ள முடியாத கோழைகள் அல்லது ஏமாற்றுக்காரர்கள்.

இவ்வாறு நாம் சொல்வதற்கு ஒரு சான்று, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நந்திக்கடலோரம் சிங்கள இராணுவத்திடம் பிடிபட்டுக் கொடூரமாகக் கொல்லப்பட்டு விட்டார் என்ற பட்டவர்த்தனமான உண்மையை இன்னமும் ஏற்க மறுக்கிறார்கள் அல்லது மறைக்கிறார்கள்.

இந்த உண்மையை ஒப்புக் கொண்டால், பிரபாகரனைச் சுற்றித் தமிழினவாதிகளும் புலிஆதரவாளர்களும் இவ்வளவு காலமும் பரப்பியுள்ள பல பொய்மைகளும் அம்பலப்பட்டுப்போகும் என்று அஞ்சுகிறார்கள். இந்த உண்மையிலிருந்து எழும் பல கேள்விகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டியிருக்கும், ஈழத்தின் இன்றைய நிலைக்குப் பொறுப் பேற்க வேண்டியிருக்கும். ஆனால், அதற்குரிய துணிவற்ற கோழைகளான அவர்கள், இந்த உண்மையை உரக்கச் சொல்லும் எம் மீது பாய்ந்து குதறுகிறார்கள்.

‘‘தலைவர் பிரபாகரனையோ புலிகளையோ உயிரோடு பிடிக்கவே முடியாது. அவர்கள் சயனைடுக் குப்பிகளைக் கழுத்தில் சுமந்து திரிகிறார்கள். ஒருநாளும் எதற்காகவும் யாரிடமும் சமரசம் செய்துகொள்ள மாட்டார்கள். அரசியல், இராணுவத் துறைகளில் நிகரற்ற திறமைமிக்கவர்கள்’’ என்று தமிழினவாதிகளும் புலி ஆதரவாளர்களும் முப்பது ஆண்டுகளாகக் கட்டமைத்து வந்த இந்தப் பிம்பங்கள் எல்லாம் இப்போது நொறுங்கி விட்டன.

பிரபாகரனைப் பற்றி எவ்வளவோ கதைத்துத் திரிந்தவர்கள், அதெப்படி ஒரு படித்தாக ஒருசொல் கூடப் பேசாமல் இருக்கிறார்கள்! அவர்களில் யாருக்கும் இது உறுத்தாமலா போய்விட்டது! ஈழத்தின் வரலாற்றில் பிரபாகரன் என்ற பெயரைத் திடீரென்று தீண்டத்தகாததாக்கி விட்டார்களே! இதைவிடப் பெரிய துரோகம் வேறுண்டா!

எல்லாவற்றுக்கும் மேலாக, திடீரென்று அவர்களின் இருப்பே கேள்விக்குள்ளாகி, தாங்களே தன்னாளுமையுடன் பேசுவதற்கு ஒரு ‘‘பொருள்’’ இல்லாமல் போய்விட்டது. அவர்களின் பிழைப்புவாத அரசியலுக்குப் புலம்பெயர்ந்த புலி ஆதரவாளர்களிடமிருந்து ‘‘பொருள்’’ கிடைப்பதும் அரிதாகி வருகிறது. அதனால்தான் எல்லா தமிழினவாதிகளும் புலி ஆதரவாளர்களும் சீமானைப் போல,

இலங்கையின் மேற்கு மாகாணப் பகுதியில் அமைந்துள்ள வெலிவேரியாவில், தனியார் நிறுவனமொன்று நிலத்தடி நீரை மாசுபடுத்துவதைக் கண்டித்து நடந்த போராட்டத்தின் மீது சிங்கள இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமுற்றனர். (கோப்புப் படம்)



வைகோவைப் போல பொருளற்ற வெற்று உணர்ச்சிக் கூச்சல் போடுகிறார்கள்.

தமிழர்கள் உண்மைகளின் உணர்வாளர்களாக அல்லாமல், உணர்ச்சிக் கும்பலாக இருக்க வேண்டும் என்று தானே சினிமாக்காரர்களும் ''டாஸ்மாக்'' வியாபாரிகளும் செயல்படுகிறார்கள். ஈழ இனச் சிக்கலில் தமிழர்களை வெறும் உணர்ச்சிக் கும்பலாக வைக்கவே தமிழினவாதிகளும் புலி ஆதரவாளர்களும் எத்தணிக்கிறார்கள். அவ்வாறான முயற்சிகளில் ஒரு பகுதிதான் ஈழ இனச் சிக்கலில் எமது நிலைப்பாடுகள் மீதான ஆத்திரமும் அவதூறுகளும். இதற்கு முக்கியமான, அவசியமான காரணம் அவர்களின் பிழைப்புவாத அரசியலுக்கு நாம் தடையாக இருப்பதுதான்.

இவ்வாறு ம.க.இ.க.-வினர் மீது அவதூறு செய்வதற்கு அவர்கள் ஓர் எளிமையான வழியை, முதன்மையான வழியை, முட்டாள்தனமான வழியைத் தெரிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அது, ம.க.இ.க.-வினர் இவ்வளவு காலமும் மிகக் கடுமையாக எதிர்த்துப் போராடி வரும் பார்ப்பன பாசிச சக்திகளான சோ.சாமி, சு.சாமி மற்றும் இந்து ராம், சோனியா-மன்மோகன் கும்பல், போலி கம்யூனிசக் கட்சிகள் ஆகியவரோடு ம.க.இ.க.-வினரது நிலைப்பாடுகளை இணை வைத்து, அடையாளப்படுத்துவதுதான்!

இவ்வாறு செய்வது அடிப்படையிலேயே பித்தலாட்டம், அவதூறு என்று பலமுறை தெளிவாக நாம் விளக்கிப் பேசியிருக்கிறோம், எழுதியிருக்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தமிழினவாதக் குழுக்களும் புலி ஆதரவுக் குழுக்களும் தனித்தனியாகவும் கூட்டுச் சேர்ந்தும் செய்ததைவிடப் பன்மடங்கு அதிகமான மக்களிடம் ஈழ இனச் சிக்கலில் ம.க.இ.க.-வினரது ஈழ ஆதரவு மற்றும் நிலைப்பாடுகளைப் கொண்டு சென்றிருக்கிறோம். இருந்தாலும் அவர்கள் தமது அவதூறுகளைத் தொடர்கிறார்கள்.

**அடிப்படை வேறுபாடுகளைக் காண மறுக்கும் அறிவுக் குருடர்கள்**

ஈழ இனச் சிக்கலில், ம.க.இ.க.-வின் நிலைப்பாடுகளும் பார்ப்பன பாசிஸ்டுகள் மற்றும் போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடுகளும் அடிப்படையிலேயே மாறுபாடானவை, எதிரெதிரானவை, கறுப்பும் வெள்ளையும் போன்று தெளிவானவை. அறிவுக் குருடர்களுக்குத்தான் அவற்றுக்கிடையிலான கீழ்வரும் வேறுபாடுகள் தெரியாது:

1) இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதைப் பார்ப்பன பாசிஸ்டுகளும் போலி கம்யூனிஸ்டுகளும் ஏற்பதில்லை. மொழிச் சிறுபான்மையினர் என்றே கருதுகின்றனர்.

ஆனால்,

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதே எப்போதும் ம.க.இ.க.-வின் நிலைப்பாடு.

2) ஈழத் தமிழர்களின், ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் தன்னுரிமையைப் பார்ப்பன பாசிஸ்டுகளும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளும், ஒருபோதும் ஏற்று அங்கீகரித்ததே கிடையாது.

ஆனால்,

ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை எப்போதும் ம.க.இ.க. ஏற்பதுடன் தன்னுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகக் கொண்டு அதை ஈழத் தமிழ்த் தேசிய இனம் அடைவதற்கு ஆதரவாகப் போராடி வந்திருக்கிறது.

3) தமிழீழத் தனியரசு என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது; ஒன்றுபட்டுள்ள இலங்கை பிளவுபடாதவாறு, அதன் அரசியல் சட்டத்துக்கு உட்பட்டுத்தான் மாநில சுயாட்சி அல்லது அதிகாரப் பகிர்வு மூலம் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதுதான்

> "பிரபாகரனைப் பற்றி எவ்வளவோ கதைத்துத் திரிந்தவர்கள், ஈழத்தின் வரலாற்றில் பிரபாகரன் என்ற பெயரைத் திடீரென்று தீண்டத்தகாததாக்கி விட்டார்களே! இதைவிடப் பெரிய துரோகம் வேறுண்டா!"

பார்ப்பன பாசிஸ்டுகள், போலி கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலைப்பாடு.

ஆனால்,

ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை என்பதே தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியது என்பதுதான் எப்போதும் ம.க.இ.க.-வின் நிலை. தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்ளும் உரிமையை மறுப்பது, ஈழத் தமிழ்தேசிய இனத்தின் தன்னுரிமையையே மறுப்பதாகும். ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் தன்னுரிமையை ஒரு போதும் மறுக்காதபோதும், எதிர்க்காதபோதும், அதற்காகப் எப்போதும் போராடிவரும் ம.க.இ.க.வைத் தமிழீழத் தனியரசுக்கு எதிரியாகச் சித்தரிப்பது அவதூறுதான்! திட்டமிட்ட சதிதான்! ஈழத் தமிழ்த் தேசிய இனம் எப்போது, எப்படி, என்ன அரசியல் நிலைமைகளில் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையைப் பெறுகிறது என்பதைப் பொருத்துத் தனியரசு அமைத்துக் கொள்வதா, இல்லையா என ஈழத் தமிழ்த் தேசிய இனமே தீர்மானிக்கும்.(நாம் ஏன் இவ்வாறு கருதுகிறோம், அது ஏன் சரி என்பதைப் பிறகு பார்ப்போம்)

4) ஈழச் சிக்கலுக்கு இராஜீவ் - ஜெயவர்த்தனே 1987 ஒப்பந்தம் சரியானதொரு தீர்வு. இந்திய ''அமைதிப் படை'' படையெடுப்பு உட்பட இந்திய அரசின் எல்லாத் தலையீடுகளும் புலிகள் மீதானதடையும் சரியானது, அவசியமானது, இராஜபக்சேவை ஒரு போர்க்குற்றவாளி என்ற முறையிலான சர்வதேச விசாரணை - தண்டனையெல்லாம் கூடாது என்பது தான் பார்ப்பன பாசிஸ்டுகள், போலிக்கம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடு. புலிகள், தமிழகத் தமிழினவாதிகள் கூட இந்திய அரசு மற்றும் ஆளும் வர்க்க அரசியல் கட்சிகள் எல்லாம் ஈழத் தமிழருக்கு நட்புச் சக்திகள்; ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளில் எல்லோரும் இல்லையானாலும் இந்திரா காந்தி, எம்.ஜி.ஆர்., வாஜ்பாய் போன்ற சில தலைவர்கள் ஈழத் தமிழர்கட்கு நட்புச் சக்திகள் என்றே நம்பினர்; இன்னமும் நம்புகின்றனர். இந்திய அரசும் ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளும் ஈழத்துக்கு எதிரி சக்திகள் என்று வைத்துப் போராடவேண்டும் என்று அமைதிப்படை ஆக்கிரமிப்புக் காலத்தில் இருந்து முள்ளிவாய்க்காலுக்கு முன்பு வரை புலிகளும் தமிழகத் தமிழினவாதிகளும் முன் வைக்கவேயில்லை. அமைதிப் படை ஆக்கிரமிப்புக் காலத்திலும் இவர்களின் இந்திய எதிர்ப்புக்குக் காரணம், புலிகளுக்கு எதிராக இந்தியா போர் தொடுத்ததுதானே தவிர, இவர்களாக இந்திய எதிர்ப்பு நிலை எடுக்கவில்லை. இதனைப் புலிகளே ஒப்புக் கொண்டுள்ளார்கள். மற்றபடி, இந்திய அரசு மற்றும் ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளைத் ''தாஜா'' செய்து, ஈழத்தின் நட்புச் சக்திகளாக அவற்றை மாற்ற வேண்டும் என்றுதான் முள்ளிவாய்க்கால் முடியும் வரை அவர்கள் முயன்றார்கள். இப்படிச் செய்ததைத்தான் பிரபாகரனின் அரசியல் திறமை என்று இங்குள்ள தமிழினவாதிகள் போற்றிப் புகழ்ந்தனர்.

> "தமிழீழத் தனியரசை மட்டுமல்ல, ஈழத்தமிழரை ஒரு தேசிய இனமாகவே ஏற்காத இந்திய தேசியக் கட்சிகளின் தனித்தனித் தலைவர்களையும் உள்ளூர் பிரபலங்களையும் ஈழத்தின் நட்புச் சக்தியாகக் கருதி, அவர்களிடம் ஆதரவு தேடுகின்றனர், தமிழினவாதிகள்."

ஆனால்,

1983 கருப்பு ஜூலை நாட்களில் இருந்து இலங்கை, ஈழச் சிக்கலில் இந்திய அரசின் தலையீடுகள், இந்தியா ஈழப் போராளிகளுக்கு போர்ப் பயிற்சியும் ஆயுதங்களும் நிதியும் வழங்கியதுகூட உள்நோக்கங்கொண்டு, தெற்காசிய வல்லாதிக்கத் தன்னலன்கள் கருதி இந்தியா செய்தவைதாம்; இந்திய அரசு ஈழத் தமிழினத்தை வெளிப்படையாகவும் அரசியல் நீதியிலும் அங்கீகரித்து ஆதரிப்பதற்கு மாறாக, சதித்தனமாகத் தனது உளவுப்படையான ''ரா''-வை ஏவிவிட்டுப் போராளிக் குழுக்களிடையே ஊடுருவியது; அவர்களைப் பிளவுபடுத்தி மோத விட்டு இரத்தம் குடித்தது. ஈழத் தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட இராஜீவ் - ஜெயவர்த்தனே 1987 ஒப்பந்தம் முற்றிலும் தவறானது. 1983 கறுப்பு ஜூலை நாட்களில் இருந்து இலங்கை, ஈழச் சிக்கலில் இந்திய அரசின் தலையீடுகள், இந்தியா ஈழப்போராளிகளுக்கு போர்ப் பயிற்சியும் ஆயுதங்களும் நிதியும் வழங்கியதுகூட உள்நோக்கங்கொண்டு, தெற்காசிய வல்லாதிக்கத் தன்னலன்கள் கருதி இந்தியா செய்தவைதாம்; இந்திய அரசு ஈழத் தமிழினத்தை வெளிப்படையாகவும் அரசியல் நீதியிலும் அங்கீகரித்து ஆதரிப்பதற்கு மாறாக, சதித்தனமாக, தனது உளவுப்படையான ''ரா''-வை ஏவிவிட்டுப் போராளிக் குழுக்களிடையே ஊடுருவி, அவர்களைப் பிளவுபடுத்தி மோதவிட்டு, இரத்தம் குடித்ததையும் ஈழத் தமிழர்கள்மீது திணிக்கப்பட்ட இராஜீவ் - ஜெயவர்த்தனே 1987 ஒப்பந்தத்தையும் முற்றிலும் தவறானவை என்று ம.க.இ.க. எதிர்த்தது. அமைதிப் படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தின் படையெடுப்புக்குப் பிறகு, அதை எதிர்த்து விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துக்கு எதிராகப் போரிட்டதும், அதற்காக பிரேமதாசா அரசுடன் புலிகள் கூட்டுச் சேர்ந்ததும் சரியானவை என்பதே ம.க.இ.க.வின் நிலைப்பாடு. இராஜீவ் - ஜெயவர்த்தனே 1987 ஒப்பந்தத்துக்கு முன்பிருந்து முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழினப் படுகொலைகளை முன்னின்று நடத்தியது உட்பட இந்திய அரசு மற்றும் அதன் ஆளும் வர்க்க கட்சிகளின் சதித்தனமான வல்லாதிக்கத் தலையீடுகளை ம.க.இ.க மட்டுமே முரணற்ற முறையில் எதிர்த்துப் போராடி வந்திருக்கிறது. அதன் பிறகும் இராஜபக்சேவைப் போர்க் குற்றவாளியென அறிவித்துத் தண்டிக்க வேண்டுமெனவும் இதைத் தடுப்பதில் இந்திய அரசின் தில்லுமுல்லுகளையும் அம்பலப்படுத்திப் போராடி வந்திருக்கிறது.

ஆனால், முள்ளிவாய்க்காலில் புலித் தலைமையையும் பல்லாயிரம் ஈழத் தமிழரையும் பலிகொடுத்த பிறகு, இந்திய அரசின் ஈழ எதிர்ப்பு சதிகளையும் தில்லுமுல்லுகளையும் உண்மைகளையும் தாமே கண்டுபிடித்ததைப் போலவும் தாம் எப்போதும் இந்திய எதிர்ப்பு நிலையிலிருந்ததைப் போலவும் திடீரென்று புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் இப்போது குதியாட்டம் போடுகிறார்கள். இந்திய அரசை எதிர்த்துப் போராடாத தவறை யாரோ செய்துவிட்டதைப் போலவும் நாடகமாடுகிறார்கள். இப்போதும் காங்கிரசும் அதன் கூட்டாளிகளும் மட்டும்தாம் ஈழத்தின் எதிரிச் சக்திகள் என்றும் ஜெயலலிதாவும் அவரை ஆதரிப்பதன் மூலம் மோடியும் ஈழத்தின் நட்புச் சக்திகள் போலவும் பிழைப்புவாத அரசியல் நடத்துகிறார்கள்.

5) இராஜீவ் காந்தியும் சிங்கள பாசிச எதிரிகளும் ஈழத் தமிழ்த் துரோகிகளும் கொல்லப்பட்டபோது அவை புலிகளின் பயங்கரவாதச் செயல் என்று பார்ப்பன பாசிஸ்டுகளும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளும் வெறித்தனமாகச் சாடினர். இராஜீவ் காந்தி கொலையைத் தமிழினவாதிகள்கூடக் கண்டித்தனர். தாங்கள் செய்த பல கொலைகளைப் புலிகளால் கூட நியாயப்படுத்த முடியவில்லை. இராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பிறகு வந்த நாட்களில் ஜெயா அரசு ஈழத்

தமிழர்களுக்கு எதிராகப் பாசிச வேட்டையை ஏவி விட்டது, புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டது. பார்ப்பன பாசிஸ்டு களும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதையெல்லாம் நியாயப்படுத்தினர்.

ஆனால்,

இராஜீவ் காந்தியும் சிங்கள பாசிச எதிரிகளும் ஈழத் தமிழ்த் துரோகிகளும் கொல்லப்பட்டபோது அவற்றை எதிர்த்தோ, கண்டித்தோ ம.க.இ.க. எழுதியதோ பேசியதோ இல்லை. கள்ள மௌனம் சாதித்ததும் இல்லை; இப்படிப்பட்ட நட வடிக்கைகள் ஏன் சரியானவை, அவசியமானவை என்று தானே எழுதியது, பேசியது. இராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பிறகு வந்த நாட்களில் ஜெயா அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பாசிச வேட்டையைக் கட்டவிழ்த்துவிட்டபோது, இங்குள்ள தமிழினவாதிகள் கூண்டுக்குள் ஒளிந்து கொண்டு மௌனம் காத்தனர். ம.க.இ.க.வோ, புலிகள் தடை உட்பட அவற்றை எதிர்த்துப் போராடியது. அதற்காக ‘‘தடா’’, அரசு விரோதச் சட்டம், தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் பல தோழர்கள் சிறைப்பட் டனர்.

*இவ்வாறு அடிப்படையான பல பிரச் சனைகளில் ம.க.இ.க. யாரை எதிர்த்துப் போராடி வருகிறதோ, அந்தப் பார்ப்பன பாசிஸ்டுகளோடும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளோடும் ம.க.இ.க.வை அடை யாளப்படுத்தியும் இணை வைத்தும் புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் அவ தூறு செய்கிறார்கள். என்ன ஓர் அரசியல் நேர்மை! அறிவு நாணயம்!*

‘‘ஈழத் தமிழர் இனச் சிக்கலில் ம.க.இ.க.-வின் நிலைப்பாடு கம்யூனிஸ்டு களுக்கே உரிய வறட்டுத்தனம் நிறைந்தவை என்று கூறிப் போலி கம்யூனிஸ்டுகளுடன் இணைவைத்தும் தமிழினவாதிகள் அவதூறு பரப்புகிறார்கள். ஆனால், போலி கம்யூனிஸ்டு களின் நிலைப்பாடுகளும் ம.க.இ.க.-வின் நிலைப்பாடு களும் அடிப்படையிலேயே மாறுபாடானவை. ருசியாவில் ஸ்டாலினுக்குப் பிறகு குருச்சேவ் திருத்தல்வாதம் நிலைநாட் டப்பட்டதும் சி.பி.ஐ.யும், நக்சல்பாரிப் பேரெழுச்சிக்குப் பிறகு சி.பி.எம். கட்சியும் ‘‘இனி உலகின் எல்லா நாடுகளிலும் தேசிய இனப் பிரச்சினைகள் முடிவுக்கு வந்துவிட்டன. தேசிய இனங்கள் தன்னுரிமை கேட்பதே தவறானது, அவ்வாறான கோரிக்கையை ஆதரிக்க முடியாது’’ என்று அதிகாரபூர்வ மாக அறிவித்து விட்டன. ஆனால், ‘‘தேசிய இனச் சிக்கலில் போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடுகள் தவறானவை, திருத்தல்வாதமானவை’’ என்று ம.க.இ.க.- வினர் உட்பட புரட்சிகரப் பொதுடைமையாளர்கள் அவற்றை எதிர்த்து வரு கின்றனர். அதைப் போலவே, சீனாவும் கியூபாவும் இராஜ பக்சே அரசை ஆதரிப்பதைக் காட்டி அவற்றுக்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்பு நமக்கு இருப்பதாக இட்டுக் கட்டியும் அவதூறு செய்கிறார்கள் தமிழினவாதிகள். தேசிய இனச் சிக்கலில் மார்க்சிய- லெனினிய ஆசான்களின் போதனைகள் இப்போதும் பொருத்தமானவை என்று கருதும் புரட்சிகரப் பொதுடைமையாளர்கள் வடகிழக்கு இந்தியா விலும் காசுமீரத்திலும் நடக்கும் தன்னுரிமைப் போராட்டங் களை ஆரம்பம் முதலே ஆதரித்து வருகின்றனர். இப்போது கம்யூனிஸ்டு அல்லாத நாடுகள் செய்யும் தவறுகளுக்கு நாம் பொறுப்பாக முடியாது என்று தெரிந்தும் தமிழினவாதிகள், தமது அவதூறுகளைத்தொடருகின்றனர்.

*அதேசமயம், தமிழினவாதிகள்தாம் இந்தியாவின் தேசிய இனச் சிக்கலில் போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடுகளுக்கு இணையான நிலைப்பாடுகளை எடுக்கின்றனர். வடகிழக்கு இந்தியாவிலும் காசுமீரத் திலும் தன்னுரிமை கோரும் போராட்டங்களை ஆதரிக் காதது மட்டுமல்ல, அவை அவசியமற்றவை என்றுகூட பல சமயங்களில் எதிர்க்கவும் செய்கின்றனர். சி.பி.ஐ. கட்சியின் அதிகாரபூர்வ நிலைப்பாடு ஈழ விடுலைக்கு எதிரானது என்று தமிழினவாதிகளுக்குத் தெரியும்; இருந் தாலும், ஜெயலலிதாவின் அடிவருடியான தா.பாண் டியன் அவரது அருளைப் பெறுவதற்காகவே ஈழ ஆதரவு*



யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது சிங்கள இராணுவம் நடத்திய தாக்குதலைக் கண்டித்து கண்டியிலுள்ள பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்: இனம் கடந்த ஒற்றுமையின் அடையாளம் (கோப்புப் படம்)

*நாடகமாடுவதும் இவர்களுக்குத் தெரியும்; ஆனாலும் ஈழ ஆதரவு மேடைகளை அலங்கரிக்கும் விருந்தினராக தா.பாண்டியனை முன்நிறுத்த இவர்கள் தவறுவ தில்லை. இதுதான் தமிழினவாதிகளின் அரசியல் நியாயம்!*

*ஈழ இனச்சிக்கலுக்குத் தமிழீழத் தனியரசுதான் எல்லா நிலைகளிலும் எப்போதும் ஒரே தீர்வு என்பதை ஏற்றுக் கொள்ளாத நிலையில், தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியதாக ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமைக் கோரிக்கையையும், அதற்கான போராட்டத்தையும் முன்னெடுக்கின்றனர், ம.க.இ.க.-வினர். அதை அங்கீகரித்து, ம.க.இ.க.-வினரை ஈழத்தின் நட்புச்சக்தியாகக் கருதாது, ஈழத்தின் எதிரி சக்தியாகக் கருதி, ம.க.இ.க.-வினர் மீது தமிழினவாதிகள் எப்போதும் பாய்கின்றனர். ஆனால், தமிழீழத் தனியரசை மட்டுமல்ல, ஈழத் தமிழரை ஒரு தேசிய இனமாகவே ஏற்காத இந்திய தேசியக் கட்சிகளின்*

தனித்தனி தலைவர்களையும் உள்ளூர் பிரபலங்களையும் ஈழத்தின் நட்புச் சக்தியாகக் கருதி, அவர்களிடம் ஆதரவு தேடுகின்றனர்

தமிழினவாதிகளின் பார்வையில் ஈழ இனச் சிக்கலுக்கு தமிழீழத் தனியரசு என்பது ஒரே தீர்வு என்பது மட்டுமல்ல; தமிழகத் தமிழினவாதிகளுக்கு ஈழ இனச் சிக்கல் ஒன்று மட்டுமே விவாதத்துக்கும் வினையாற்றுவதற்குமான ஒரே பிரச்சினை. இந்த நாட்டைச் செயற்களமாகக் கொண்டுள்ள ம.க.இ.க.வினர் தம்முன் உள்ள எல்லாப் பிரச்சினைகளில் ஈழ இனச் சிக்கலுக்கு அதற்குரிய முன்னுரிமை தருகின்றனர். இந்த உண்மையை அறிந்திருந்தும், ம.க.இ.க.வினர் ஈழத் தமிழருக்கு எதிரானவர்கள், அவர்களுக்கு ஈழத் தமிழர் மீது அக்கறையில்லை, அதனால்தான் தமிழீழத் தனியரசு கோரிக்கைக்காக ம.க.இ.க.வினர் போராட மறுக்கிறார்கள் என்று அவதூறு செய்கிறார்கள்.



எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து, வடமேற்கு மாகாணத்திலுள்ள சிலா என்ற கடற்கரை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் ராஜபக்சே அரசுக்கு எதிராக நடத்திய போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார்; எட்டு பேர் படுகாயமுற்றனர். (கோப்புப்படம்)

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம்; அதற்குப் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை எப்போதும் ம.க.இ.க. ஏற்பதுடன், தன்னுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகக் கொண்டு அதை ஈழத் தமிழ்த் தேசிய இனம் அடைவதற்காகப் போராடி வந்திருக்கிறது.

ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை என்பதே தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியது என்பதுதான் எப்போதும் ம.க.இ.க.-வின் நிலை. தமிழீழத் தனியரசு அமைத்துக்கொள்ளும் உரிமையை மறுப்பது, ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் தன்னுரிமையையே மறுப்பதாகும். ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் தன்னுரிமையை ஒருபோதும் மறுக்காத, எதிர்க்காதபோதும், அதற்காகப் எப்போதும் போராடி வரும் ம.க.இ.க.வைத் தமிழீழத் தனியரசுக்கு எதிரியாகச் சித்தரிப்பது அவதூறுதான்! திட்டமிட்ட சதிதான்!

**குழப்பம் எதிலே?**
**ம.க.இ.க.-வினரின் நிலைப்பாடுகளிலா, தமிழினவாதிகளின் பார்வையிலா?**

''தமிழீழத் தனியரசு என்ற கோரிக்கை 1976 வட்டுக் கோட்டை தீர்மானத்திலேயே முன்வைக்கப்பட்டு, அதைத்தாம் ஏற்பதாக 1977 தேர்தல்களிலேயே ஈழத் தமிழர்கள் ஒருமனதாக ஒப்புதல் கொடுத்து விட்டார்கள், பிறகு ஏன் 'தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்வதா, இல்லையா என ஈழத் தமிழ்த் தேசிய இனம் தீர்மானிக்கட்டும்' என்று ம.க.இ.க. சொல்ல வேண்டும்? ஆகவே, ம.க.இ.க. தமிழீழத் தனியரசுக்கு எதிரானது'' என்று தமிழினவாதிகள் பாய்கிறார்கள். மேலும், சிங்கள மக்கள் அனைவரும் ஈழத் தமிழர்க்கெதிரான சிங்களப் பேரினவெறியும், பௌத்த மதவெறியும் கொண்டுள்ள போது, குறிப்பாக முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழர் இனப்படுகொலைக்குப் பிறகு தமிழீழத் தனியரசுதானே சரியானது, அவசியமானது என்று தமிழினவாதிகள் வாதிடுகின்றனர்.

ஈழ இனச் சிக்கலுக்குத் தமிழீழத் தனியரசுதான் எல்லா நிலைகளிலும் எப்போதும் ஒரே தீர்வு என்று கூறுவதைத்தான் ம.க.இ.க.-வினர் ஏற்றுக் கொள்ளவில்லையே தவிர, தமிழீழத் தனியரசுக்கு எதிரானவர்கள் என்பது உண்மையில்லை. இது நாம் இப்போது எடுக்கும் முடிவல்ல. முன்பே எழுதியிருப்பதுதான். ''அப்படியானால், தமிழீழத் தனியரசுக்காக ஏன் போராடவில்லை, இனிமேலாவது அதற்காகப் போராடுவீர்களா'' என்று கேட்டு ம.க.இ.க.-வை மடக்குவதாக எண்ணிக் கொண்டு தமிழினவாதிகள் வாதாடக்கூடும்.

தமிழீழத் தனியரசு என்ற கோரிக்கைக்காக இரண்டு காரணங்களுக்காக ம.க.இ.க.-வினர் போராடவில்லை. தமிழினவாதிகளின் பார்வையில் தமிழீழத் தனியரசு என்பதுதான் ஈழ இனச் சிக்கலுக்கு ஒரே கோரிக்கை, ஒரே தீர்வு; அதனால்தான் அதை மட்டுமே முன் வைக்கவேண்டும் என்கிறார்கள். அது குட்டி முதலாளிய வர்க்கத்தின் பகுத்தறிவுக்குப் புறம்பான, குறுந்தேசிய இனவாதப் பார்வையிலானது.

ம.க.இ.க. வினரின் பார்வையில் - இதுதான் அறிவியல்பூர்வமானது, பாட்டாளி வர்க்கப் பார்வையிலானது - தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியதாக ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமைக் கோரிக்கையையும், அதற்கான போராட்டத்தையும் நாம் முன்னெடுக்கிறோம். போலி கம்யூனிஸ்டு கட்சிகள் சொல்லுவதைப் போன்று, செய்வதைப் போன்று (இந்திய தேசியவாதிகளோடு சேர்ந்து கொண்டு, பிரிவினை கோரி காசுமீரத்திலும் வடகிழக்கிலும் நடக்கும் போராட்டங்களை எதிர்க்கிறோமா? போலி கம்யூனிஸ்டு கட்சிகளைப் போன்று

எப்போதாவது இந்திய தேசிய ஐக்கியம் - ஒருமைப்பாடு, பிரிவினைவாத எதிர்ப்புக் கூச்சல் போடுகிறோமா?) பிரிந்து போகும் உரிமையை ஒதுக்கிவிட்டு, மறுத்துவிட்டு வெறுமனே தன்னுரிமைக்காக ம.க.இ.க.வினர் நிற்கவில்லை. ஆகவேதான் தமிழீழத் தனியரசு என்ற கோரிக்கையைத் தனியே முன்வைத்துப் போராட வேண்டியதன் அவசியம் இல்லை.

தமிழீழத் தனியரசு கோரிக்கையை மட்டுமே முன்வைத்து, அதையே இலக்காகக் கொண்டு செயல்பட வேண்டும் என்கிறார்கள், தமிழினவாதிகள். பொதுவுடைமையாளர்களான ம.க.இ.க.வினர் அவ்வாறு செய்ய முடியாது, செய்யக் கூடாது, செய்யவுமில்லை. ஒன்றுக்கும் மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில், ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு மட்டுமல்ல, ஒடுக்கும் பெருந்தேசிய இனத்துக்கும், அதன் பரந்துபட்ட மக்களுக்கும் கூட எதிரானதுதான் அந்நாட்டை ஆளும் பாசிச அரசு. அதற்கு எதிராக ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தனித்தனிப் பொதுவுடைமைக் கட்சி வைத்து, தனித்தனித் திட்டமும் இலக்கும் வைத்துப் புரட்சி செய்வது; அவ்வாறான தனித்தனி புரட்சிகளில் தேசிய இனங்கள் வெற்றிபெற்று, தனித்தனியே சோசலிசத்தைக் கட்டியமைத்த பின்னரோ, அதற்கு முன்னரோ ஐக்கியப்படுவது என்று பேசுவது மார்க்சிய-லெனினியப் பார்வையே கிடையாது.

அந்நாட்டை ஆளும் பாசிச அரசுக்கு எதிராக ஒரே புரட்சிகரப் பொதுவுடைமைக் கட்சியைக் கட்டுவது; அக்கட்சி, எல்லா தேசிய இனங்களுக்கும் சமவுரிமையை மட்டுமல்ல, ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்குப் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை உறுதிப்படுத்துவது; அக்கட்சி ஒடுக்கும் (சிங்களத்) தேசிய இனத்தவரிடையே ஈழத் தமிழர் தன்னுரிமையையும், ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் தேசிய இனத்தவரிடையே ஐக்கியத்தையும் பிரச்சாரம் செய்து, அதன்மூலம் அந்நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் தேசிய இனங்களை ஐக்கியப்படுத்திப் புதிய ஜனநாயகப் புரட்சியை முடிப்பதுதான் அக்கட்சியின் இலக்காகவும் திட்டமாகவும் இருக்கும் என்பதுதான் மார்க்சிய-லெனினியப் பார்வை.

இந்த மார்க்சிய-லெனினியப் பார்வையை மறுப்பதற்காகத் தமிழினவாதிகள் பலவாறு புளுகித் திரிகிறார்கள். ‘‘சிங்களப் பெருந்தேசிய இனத்து மக்களுக்கும் அவர்களை ஆளும் பாசிச அரசுக்கும் வேறுபாடே கிடையாது; பகை முரண்பாடும் கிடையாது; பெருந்தேசிய இனத்து மக்கள் அனைவரும் ஒடுக்கப்படும் சிறுபான்மை தேசிய இன மக்களுக்கு எதிரானவர்கள்; இலங்கையின் இரு தேசிய இனப் பாட்டாளி மக்களும் ஐக்கியப்பட மாட்டார்கள்; இலங்கையில் ஈழத் தமிழ்தேசிய இன மக்களின் தன்னுரிமையை ஏற்கும் அமைப்புகள் எதுவும் சிங்களவர் மத்தியில் கிடையாது’’ ஆகிய தமிழினவாதிகளின் கருத்துக்களைப் பொதுவுடைமையாளர்களான ம.க.இ.க.வினர் ஏற்கவில்லை. ஏனென்றால், தமிழினவாதிகள் கூறிவரும் மேற்கண்ட கருத்துகளில் உண்மையில்லை.

இந்தியாவின் ஈழ ஆக்கிரமிப்புப் படையை வெளியேற்றுவதற்கான போராட்டத்தில், நோக்கில் சிங்களவரும் ஈழத் தமிழரும் ஒன்றுபட்டு நின்றிருக்கிறார்கள். 1983-இல் இருந்து தொடர்ந்து நடந்துவந்த ஈழப்போர் காரணமாக இலங்கையில் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் முற்றியபோது சிங்கள, தமிழ் மக்கள் அமைதியை வேண்டிநின்றபோது அதையே முன்வைத்து அந்நாட்டு அதிபர் தேர்தலை எதிர்கொண்டார், சந்திரிகா குமாரதுங்கே. அவரைத் தேர்ந்தெடுத்து அமைதி, போர்நிறுத்தம், பேச்சு வார்த்தையை ஆதரித்ததில் சிங்களரும் ஈழத் தமிழரும் ஒன்றுபட்டிருந்தார்கள். சிங்கள இனவெறியர்களினால் அம்முயற்சி சிதறடிக்கப்பட்டது வேறு விடயம். 2004 சுனாமியின் பேரழிவுகளை எதிர்கொள்வதில் சிங்களவரும் ஈழத் தமிழரும் ஒன்றுபட்டிருந்தார்கள்.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசனின் மனைவியாகிய சிங்களப் பெண்ணைப் போன்று தமிழ்த்தேசிய இன மக்களின் தன்னுரிமையை ஏற்கும் சிங்களவர்களும், சிங்களவர் மற்றும் ஈழத் தமிழர்களைக் கொண்ட குழுக்களும் அங்குண்டு. தமிழ்த்தேசிய இன மக்களின் மனித உரிமைக்காகவும் இலங்கைப் பாசிச அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடிக் கொல்லப்பட்டவர்களும் பத்திரிக்கையாளர்களும் மனித உரிமைப் போராளிகளும் சிங்களவரிடையே உண்டு. ஈழ விடுதலைப் போராட்டங்கள் நடந்த அதே காலகட்டத்தில், இலங்கைப் பாசிச அரசால் ஈழத் தமிழர்கள் மட்டும் கொன்று குவிக்கப்படவில்லை. பல்லாயிரம் சிங்கள இளைஞர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிரான வெள்ளை வேன் வேட்டை இன்னமும் தொடர்கிறது. 75,000 சிங்கள இளைஞர்கள் இந்தக் காலத்தில் காணாமல் போயிருக்கிறார்கள் என்று சர்வதேச மனித உரிமை அமைப்பு இலங்கைப் பாசிச அரசுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஆகவே, அரசியல் காரணங்களுக்காக சிங்களவரும் ஈழத் தமிழரும் ஐக்கியப்படுவது சாத்தியமே இல்லாதது அல்ல.

> **“தமிழ்நாட்டிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட தமிழினவாதக் குழுக்களும் புலி ஆதரவுக் குழுக்களும் தனித்தனியாகவும் கூட்டுச் சேர்ந்தும் செய்ததைவிடப் பன்மடங்கு அதிகமான மக்களிடம் ஈழ இனச் சிக்கலில் ம.க.இ.க.-வினரது ஈழ ஆதரவு மற்றும் நிலைப்பாடுகளைக் கொண்டு சென்றிருக்கிறோம்.”**

**தமிழினவாதிகளின் உருட்டல் மிரட்டல், பொய்மைகள் பலிக்காது**

விடுதலைப் புலிகளே தமிழீழத் தனியரசு என்ற தீர்வை பல்வேறு சமயங்களில் மாற்றிக் கொண்டும் கைவிட்டும் உள்ளனர். தன்னலத்துக்காகத் தன்னுரிமைக் கோரிக்கையையே கைவிட்டதும் உண்டு. வெவ்வேறு வியாக்கியானங்களைக் கொடுத்து தமிழீழத் தனியரசு கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்ததும் உண்டு.

இராஜீவ் - ஜெயவர்த்தனே 1987 ஒப்பந்தப்படி வடக்கு, கிழக்கு இணைந்த நிர்வாகசபை அமைக்கும் ஏற்பாட்டை ஏற்றுக்கொண்ட போதும், இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்காக பிரேமதாசா அரசுடன் கூட்டுச்சேர்ந்தபோதும், ரணில், சந்திரிகா அரசுகளுடன் சமாதானம், போர்நிறுத்தம், பேச்சுவார்த்தைகள் நடத்திய போதும் தன்னுரிமைக் கோரிக்கைக்குப் புலிகள் வெவ்வேறு வியாக்கியானங்களைக் கொடுத்து தமிழீழத் தனியரசு கோரிக்கையை நீர்த்துப் போகச் செய்யவில்லையா? புலிகளின் இத்தகைய முன்னெடுப்புகளைத் தயக்கமின்றித் தமிழினவாதிகள் ஆதரித்தனர்.

> எப்போது, எப்படி, என்ன அரசியல் நிலைமைகளில் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை, ஈழத் தமிழ்த் தேசிய இனம் அடைகிறது என்பதைப் பொருத்து தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்வதா, இல்லையா என ஈழத் தமிழ்த்தேசிய இனம் தீர்மானிக்கும்.

ஆனால், ஈழத் தமிழர் நலனில் தமக்கு மட்டுமே அக்கறை இருப்பதைப் போன்று காட்டிக் கொள்ளும் தமிழினவாதிகள், ஈழ இனச் சிக்கலுக்குத் தீர்வு சொல்லவும் போராடவும் தமக்கே ஏகபோக உரிமை கோரிக் குதிக்கிறார்கள். ஈழத் தமிழருக்கு ஆதரவாகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு தமிழினவாதிகள் ஏதாவது ஒரு முழக்கத்தை, திட்டத்தை முன்வைத்துப் பல பெயர்ப் பலகை அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்து அடையாளப் போராட்டங்கள் நடத்துகிறார்கள், அதை ஆதரிக்கும்படி நிர்ப்பந்திக்கிறார்கள்; இல்லையென்றால் ஈழத் தமிழர்க்கு எதிரானவர்கள் என்றும் அவதூறு செய்கிறார்கள்.

ஈழத் தமிழர் இனச் சிக்கலுக்கு உடனடியான. விரைவான, நிச்சயமான தீர்வு என்ற பெயரில் அடுக்கடுக்கான பல பொய்மைகளை நம்பவைக்க தமிழினவாதிகள் எத்தணிக்கிறார்கள். இன முரண்பாடு முதன்மையாகி விட்ட நிலையில் தமிழ் - சிங்களப் பாட்டாளிகளை ஒன்று படுத்திப் புரட்சி செய்வது சாத்தியமேயில்லை; இன உணர்வுமிக்கத் தமிழர்களைத் திரட்டித் தேசிய விடுதலையை விரைவில் சாதிக்க முடியும்; இராணுவ ரீதியிலும் அரசியல்ரீதியிலும் நிகரற்ற பிரபாகரன் தலைமையில் ஈழ விடுதலை விரைவில் வெற்றிகரமாக முடிக்கப்படும் என்றவாறு எவ்வளவோ சொன்னார்கள். முள்ளிவாய்க்கால் கொலைக் களத்தில் எல்லாம் நொறுங்கிப்போயின.

தவறுகளில் இருந்து நேர்மையான முறையில் படிப்பினைகளைப் பெறுவதற்குப் பதிலாக, பன்னாட்டுச்சதியால்தான் இந்த நிலை என்று மழுப்பிச் சமாளிக்கிறார்கள். முள்ளிவாய்க்காலுக்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பே தீட்டப்பட்டதாகக் கூறப்படும் பன்னாட்டுச் சதியை எதிர்கொள்ள முடியாமல் போனதும் முல்லைத் தீவின் குறுகிய நிலப் பரப்பில் மூன்று லட்சம் ஈழத் தமிழரைக் குவித்துப் பல்லாயிரம் பேரைப் பலி கொடுத்ததும்தான் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் நிகரற்ற தலைமையா?

பலம் வாய்ந்த சிங்கள பாசிச இராணுவத்தையும் பகைமையான பன்னாட்டு சக்திகளையும் எதிர்கொண்டிருந்த ஈழ விடுதலைப் போரில் பிரபாகரன் தலைமை இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பாரிய தவறிழைத்து விட்டது. இராணுவ ரீதியில் நீண்டகால மக்கள் யுத்தம் என்ற போர்த்தந்திரத் திட்டத்தை மேற்கொள்ளத் தவறியது. நீண்டகால மக்கள் யுத்தம் என்ற பாதையில் சாத்தியமான மக்கள் ஆதரவு முழுமையாகத் திரட்டப்பட வேண்டும். என்ன இலட்சியமோ அதற்குதான் மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டுமே தவிர, யார் தலைவரோ அவர் மீதான வழிபாட்டுக்கு ஆள்திரட்டக்கூடாது.

சிங்கள பாசிச அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்திகொண்டு நட்புச் சக்திகளை வென்றெடுத்திருக்க வேண்டும். ஒருவேளை உடனடியாக அது சாத்தியமில்லாமல் போனாலும், மக்கள் யுத்தம் நீடிக்கும் நீண்டகாலப் போக்கில் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் முற்றிவரும் சூழலில் அது சாத்தியமே. இலங்கையில் அவ்வாறான நிலைமைகள் கடந்த 30 ஆண்டுகளில் பல முறை வந்துள்ளன. ஆனால், விடுதலைப் புலிகளும் அதன் தலைமையும் ஈழத் தமிழரின் ஆதரவையே குறுந்தேசிய இனவாத அடிப்படையில் கட்டமைத்துக் கொண்டிருந்தனர். சிங்கள பாசிச இராணுவத்துடன் கடும் போரில் ஈடுபட்டிருந்தபோதுகூட மறுபுறம் ஈழத் தமிழரிடையே கூட சகோதரப் போரை நடத்திய விடுதலைப் புலிகளும் அதன் தலைமையும் நட்புச்சக்திகளை வென்றெடுப்பதில் எங்ஙனம் அக்கறைகொண்டிருக்க முடியும்?

பிரபாகரனின், புலிகளின் வீரதீர சாகசங்களைச் சொல்லியே சினிமா நாயகத்தன வழிபாட்டை வைத்துப் பிழைப்பு நடத்துகிறார்கள், தமிழினவாதிகள். ஈழத் தமிழர் தன்னுரிமை பெறுவதற்கான அவசியமான, சரியான அரசியல் உத்திகளை முன்வைத்துப் போராடு

கின்றன, ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்பு களும்.

ம.க.இ.க. தமிழீழத்துக்கு எதிரானது என்ற அவதூறு, ம.க.இ.க.-வின் பல்வேறு போராட்டங்களைப் பல ஆண்டுகளாக நேரில் காணும் தமிழக மக்களிடையே எடு படாமல் போகவே, ஈழத் தமிழர் இனச் சிக்கலில், ம.க.இ.க.-வின் நிலைப்பாடு தமிழீழத் தனியரசுக்கு எதிரானது, சந்தர்ப்பவாதமானது, குழப்பமானது என்று ம.க.இ.க. மீது பலவாறாக அவதூறையும் அவநம் பிக்கையையும் தமிழினவாதிகள் பரப்புகிறார்கள்.

ஆனால், ஈழத் தமிழர் இனச் சிக்கலில், ம.க.இ.க.-வின் நிலைப்பாட்டில் குழப்பமோ, சந்தர்ப் பவாதமோ கிடையாது. மிகமிகத் தெளிவாகவே உள்ளது. அது தமிழினவாதிகளின் நிலைப்பாட்டி லிருந்து மாறுபட்டிருக்கிறது, அவ்வளவுதான்! தமிழின வாதிகளின் நிலைப்பாடுகளை ம.க.இ.க.-வினர் ஏற்கும் வரையும் தமிழினவாதிகளின் தவறு களையும் துரோகத்தையும் பிழைப்பு வாதத்தையும் ம.க.இ.க.-வினர் எதிர்த்து அம் பலப்படுத்தும்வரை அவர்கள் இப்படித் தான் செய்வார்கள். உண்மையில் இப்படிச் செய்வது மற்றவர்களை உருட்டி மிரட்டி (பிளாக்மெயில் செய்து) தமது நிலைப் பாடுகளை ஏற்கச் செய்யும் ரௌடித்தனம்.

### ஈழத் தமிழர் முன்புள்ள தெரிவுகள்

எப்போது, எப்படி, என்ன அரசியல் நிலைமைகளில் பிரிந்துபோகும் உரிமை யுடன் கூடிய தன்னுரிமையை ஈழத்தமிழ்த் தேசிய இனம் அடைகிறது என்பதைப் பொருத்து தமிழீழத் தனியரசு அமைத்துக் கொள்வதா, இல்லையா என ஈழத் தமிழ் தேசிய இனம் தீர்மானிக்கும். நாம் ஏன் இவ் வாறு கருதுகிறோம், அது ஏன் சரி என் பதைப் பலமுறை சொல்லியாகி விட்டது; மீண்டும் இங்கே ஒருமுறை சொல்கிறோம்.

தமிழினவாதிகள் தங்கள் இலட்சியமாகச் சொல்லிக் கொள்ளும் ''தமிழீழத் தனியரசு'' மீது அவர்களுக்கு உண்மையில் நம்பிக்கையோ, அக்கறையோ துளியும் கிடையாது. அதனால்தான் அதை அடையும் பாதையைப் பற்றியும், அதை அடைந்தாலும் தக்கவைத்துக் கொள்வது எப்படி என்பதைப் பற்றியும் பேச மறுக் கிறார்கள்.

ஒன்று, சிங்களப் பேரினத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தின் மூலம் பாசிச சிங்கள இராணுவத் தையும் அரசையும் வீழ்த்தி, தமிழீழத் தனியரசைப் பிர கடனம் செய்ய வேண்டும். பிரகடனம் செய்தால் மட்டும் போதாது; சர்வதேசசமூகம் இல்லையானாலும், பிற ஒரு சில நாடுகளாவது அதை அங்கீகரிக்கவேண்டும். இதற் காகத்தான் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலி களின் ஆயுதப்போராட்டம் முப்பது ஆண்டுகளாக நடந்தது. அதன் முடிவும் அனுபவமும் என்னவென்று அனைவரும் அறிவோம். மீண்டும் ஒரு படைகட்டி தமிழீழத் தனியரசுக்கான போர் கனவிலும் நடைபெறாது என்று சொல்லத் தேவையில்லை. (புலி ஆதரவாளர் களும் தமிழினவாதிகளும் புளுகித் திரிவதுபோல, தப் பித்துத் தலைமறைவாக உள்ள பிரபாகரனும் பிற புலி களும் ஒருவேளை திரும்பி வந்து மீண்டும் ஈழ விடு தலைப் போர் தொடுக்கலாமோ என்னவோ).

இரண்டு, புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் திராவிடக் கட்சிகளும் முயற்சிக்கும் வகையில் இவர் கள் நடத்தும் போராட்டங்கள், விண்ணப்பங்கள் மூலம் அழுத்தம் கொடுத்து இந்திய அரசோ அல்லது இவர் களில் ஒரு பிரிவினர் நம்புவது போன்று மோடி பிரத மராகியோ இந்திய ஆட்சியாளர்களிடம் ஈழ ஆதரவு நிலை உருவாகி அல்லது அமெரிக்கத் தலைமையிலுள்ள சர்வதேச சமூகம் ஈழத் தமிழர்களின் துயரம் கண்டு நெக் குறுகி பொதுவாக்கெடுப்புக்கான, அதாவது ஈழத் தமி ழருக்குத் தன்னுரிமைக்கான வாய்ப்புக் கிட்டலாம்;




இராஜபக்சே அரசின் ஊழல்கள், மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்திய பத்திரிகையாளர் லசந்தா விக்கிரமதுங்கே, ராஜபக்சே கும்பலால் மர்மமான முறையில் கொல்லப்பட்டதைக் கண்டித்தும்; பத்திரிகை சுதந்திரத்தை வலியுறுத்தியும் இலங்கைப் பத்திரிகையாளர்கள் கொழும்பு நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (உள்படம்) லசந்தா விக்கிரமதுங்கே. (கோப்புப்படம்)

அதாவது, இவர்கள் நடத்தும் வேட்டையில் கொம்புடன் கூடிய முயலைப் பிடிக்கலாம் என் கிறார்கள்.

மூன்று, சிங்களப் பேரினவாத, பௌத்த மதவெறி பாசிச இராஜபக்சே கும்பலை அதிகாரத்தில் இருந்து தூக்கி எறிந்து இலங்கையில் ஒரு ஜனநாயக அரசு அமைந்து, அது ஈழத் தமிழர்களின் பிரிந்துபோகும் உரி மையுடன் கூடிய தன்னுரிமையை ஏற்க வேண்டும். இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நெருக் கடிகளும் வர்க்க முரண்பாடுகளும் மிகவேகமாக முற்றி வரும் சூழலில் புலிப் பூச்சாண்டியைக் காட்டியே சிங்களப் பேரினவாத, பௌத்த மதவெறியில் சிங்கள மக்களை நீண்ட காலத்துக்கு பாசிச இராஜபக்சே கும்பல் தனது அதிகார ஆதிக்கத்தில் இருத்தி வைத்திருக்க முடியாது என்பதையே அங்குள்ள நிலைமைகள் தெளி வாகக் காட்டுகின்றன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சில ஆயிரம் வீரர்களையும் துருப்பிடித்த ஆயுதங்களை யும் கொண்டிருந்த சிங்கள இராணுவம் இன்று நான்கு

இலட்சம் வீரர்களையும் அதிநவீன ஆயுதங்களையும் கொண்ட முப்படைகளையும் பெற்று, உலகின் பெரிய இராணுவங்களில் ஒன்றாகி விட்டது. சிங்கள இராணுவம் மட்டுமல்ல, இலங்கை அரசின் எல்லா உறுப்புகளிலும் பாசிச இராஜபக்சே குடும்பக் கும்பலின் ஆதிக்கம் நிறைந்து விட்டது. அதற்கு எதிராகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அம்மக்கள் எவ்வளவு பெரிய மக்கள் சக்தியைத் திரட்டினாலும் ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் இசுலாமிய மக்கள் ஆதரவின்றி பாசிச இராஜபக்சே கும்பலின் அதிகார ஆதிக்கத்தை வீழ்த்த முடியாது. அதேபோல, சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவின்றி ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும், இசுலாமியர்களும் என்னதான் போராடினாலும் தமது உரிமைகளைப் பெறவும் முடியாது. இது யாருடைய விருப்பங்களுக்கும் அப்பாற்பட்ட புறநிலை எதார்த்தம். நாம் கூறுவது ஆளும் வர்க்கங்கள் சொல்லுவதைப் போல சரண்டலுக்கான, அம்மக்களை ஒடுக்கி வைப்பதற்கான சமனற்ற கட்டாய ''ஒற்றுமையல்ல''. சம உரிமை அடிப்படையிலான, ஜனநாயக முறையிலான ஒற்றுமை. பாசிச இராஜபக்சே குடும்பக் கும்பல் ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் பங்குபற்றியதற்கு ஈடாகவும் முன்நிபந்தனையாகவும் ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும், இசுலாமியர்களும் தமது உரிமைகளாகக் கோர முடியும். இதைத்தான் ஈழத் தமிழர்கள் உட்பட இலங்கையின் அனைத்து முற்போக்கு, ஜனநாயக சக்திகள் (அவை சிறியவையானாலும்) தமது பாதையாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு, இயக்கங்களைக் கட்டமைத்து வருகிறார்கள். இவ்வாறான பாதையைத்தான் ம.க.இ.க.-வினர் ஆதரிக்கின்றனர்.

> **“ஈழத் தமிழ்த்தேசிய இனத்தின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமை என்பதே தமிழீழத் தனியரசு அமைத்துக்கொள்ளும் உரிமையையும் உள்ளடக்கியது என்பதுதான் எப்போதும் ம.க.இ.க.-வின் நிலை.”**

ஆனால், இதெல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை, சிங்களவருக்குச் சாதகமானவை, தமிழீழத் தனியரசை நிராகரிப்பதற்குச் சொல்லப்படும் சாக்குப்போக்குகள் என்று தமிழினவாதிகள் வாதிடுகின்றனர். இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், இத்தனைக்கும் பிறகு, சிங்கள அரசு ஈழத் தமிழர்களின் உரிமைகளைச் சிறிதும் ஏற்க மறுக்கும் நிலையில், எஞ்சிய பல்லாயிரம் ஈழத் தமிழர்களும் முள்வேலி முகாமுக்குள், இராணுவக் கொடுங்கோன்மையின் கீழ் வதைபடும் நிலையில் தமிழீழத் தனியரசுக்கும் குறைவான எதையும் பேசுவது துரோகம் என்று குதிக்கிறார்கள்.

தமிழினவாதிகள் மேலே தொகுத்துச் சொல்லும் இதே நிலைமைகளின் காரணமாகத்தான், பாசிச இராஜபக்சே கும்பலை அதிகாரத்தில் இருந்து வீழ்த்தாமல் ஈழச் சிக்கலில் ஒரு அடிகூட முன்வைக்கமுடியாது; அதைத் தூக்கி எறிந்து, சிங்கள-ஈழத் தமிழ் பாட்டாளி மக்களின் தலைமையில் இலங்கையில் ஒரு புதிய ஜனநாயக அரசு அமைப்பது; அதை நிறைவேற்றுவதன் மூலம் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையைப் பெறுவது என்ற பாதையைச் சரியானதென்று முன்வைக்கப்படுவதை ம.க.இ.க.- வினர் ஏற்கின்றனர்.

ஆனால், இந்த நிலைமைகளில் தமிழீழத் தனியரசை அடைவதற்கானதென்று தமிழினவாதிகள் தெரிவு செய்துகொண்டுள்ள தீர்வும் பாதையும் அரசியல் ரீதியில் பாமரத்தனமானது, விடலைத்தனமானது. ஈழத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதி, அவர்கள் மீதான இன ஒடுக்குமுறையின் கடுமை, அவர்களுக்கு ஏற்பட்ட பேரிழப்புகள், துன்ப துயரங்கள், இன்றைய அவலநிலைகள் — ஆகிய வற்றின் அடிப்படையில் மட்டுமே ஈழத் தமிழினச் சிக்கலுக்கான தீர்வையும் அதை அடைவதற்கான பாதையையும் தெரிவு செய்து இயக்கத்தைக் கட்டமைத்துவிட முடியாது. அப்படிச் செய்ய முயலுவது வெறும் கவர்ச்சிகரமான வாய்ச்சவடாலாகவே இருக்கும்.

போரில் வெற்றி பெற்ற எந்தவொரு அரசும் தோற்றுப் போனவர்களுக்கு (என்னதான் நியாயமானது என்றாலும்) சம உரிமைகளும் சலுகைகளும் வழங்கியதாக வரலாறே கிடையாது. போரில் தோற்றுப் போனவர்கள்தாம் வெற்றி பெற்றவர்களுக்கு அதற்கு ஈடாக உரிமைகளையும் சலுகைகளையும் தங்களையும் கொடுத்தாக வேண்டும். இவை நீதி, நியாயத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. வென்றவருடைய பலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுதான் இன்றைய ஏகாதிபத்திய உலக நியதியாக நிலைநாட்டப்பட்டுள்ளது. உலக அரசியலைக் கரைத்துக் குடித்தவர்களைப்போல சண்டப் பிரசண்டமாகச் சவடாலடிக்கும்

## அறிவிப்பு!

**இடமின்மையின் காரணமாக “எதிர் கொள்வோம்” தொடர் கட்டுரை இந்த இதழில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**– ஆசிரியர் குழு.**

தமிழினவாதிகள் பின்வரும் இந்தச் சாதாரண உண்மையைக்கூட பார்க் கவும் ஏற்கவும் மறுக்கிறார்கள்.

இலங்கை பாசிச இராஜபக்சே அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையே நடந்து முடிந்த போரில் வென்றுள்ளது, பாசிச இராஜபக்சேதரப்பு. தோற்றது, ஈழத் தமிழர் தரப்பில் நின்று போரிட்ட புலிகள். வென்ற பாசிச இராஜபக்சே தரப்பு, தோற்ற ஈழத் தமிழர் தரப் புக்கு சம உரிமைகளுக்கும் அதிகாரப் பகிர்வுகளுக்கும் ஒப்புக்கொள்ளும் என்று ஈழத் தமிழர்கள் எதற்காக, எப் படி எதிர்பார்க்கலாம்? சரணடைந்த புலிகளைப் படுகொலை செய்து குவித்த பாசிச இராஜபக்சே என்ன நீதிமானா? அவன் ஈழப் போர் வெற்றியின் ஆதாயங்களை அறு வடை செய்துகொள்ளவே செய் வான். பாசிச இராஜபக்சே கும்பலின் அரசு அதிகாரத்தை வீழ்த்தாமல் ஈழத் தமிழருக்கு சம உரிமை, அதிகாரப் பகிர்வு, தமிழீழத் தனியரசு எதை யும் அடையவே முடியாது. இந்திய அரசு உட்பட அமெரிக்கத் தலைமை யிலான சர்வதேச சமூகத்துக்குத் தமது போராட்டங்கள் மூலம் அழுத் தம் கொடுத்து இவற்றை அடைய முடியும் என்று நம்பச் சொல்லுகிறார் கள் புலி ஆதரவாளர்களும் தமிழின வாதிகளும். ஆனால், பாசிச இராஜ பக்சே கும்பலை அதிகாரத்தில் இருந்து தூக்கி எறிந்து இலங்கையில் ஒரு ஜனநாயக அரசு அமைந்து, அதன் மூலம்தான் ஈழத் தமிழர்களின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை நிலைநாட்ட முடி யும்; ஈழத் தமிழருக்கு சம உரிமை, அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல, அந்த நிலையிலும் அவசியமானால் தமி ழீழத் தனியரசு அமைத்துக் கொள்ளும் பலத்தையும் அவர்கள் பெறமுடியும்.

ஆகவே, புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் ஈழத் தமிழர் விடு தலைக்கு அடையவே முடியாத வழியை மீண்டும் முன்வைக் கிறார்கள் . ஆனால், ஈழத் தமிழர் களும், இந்தியத் தமிழர்களும் மீண்டும் ஒரு முறை இவர்களிடம் ஏமாறமாட்டர்கள்.

● ஆர்.கே.

# அமெரிக்காவின் கண்காணிப்புக்கு
# ஒத்தூதும் இந்தியா!

அமெரிக்க அரசின் உளவுத் துறைகளில் ஒன்றான தேசியப் பாது காப்பு நிறுவனம், ''ப்ரிஸம்''என்ற உளவு இயக்கத்தின் மூலமாக அனைத்து உலக நாடுகளின் முக்கிய இணையம் மற்றும் தொலைத் தொடர்புத் தகவல் பரிமாற்றங்களை வேவு பார்ப்பதை கடந்த ஜூன் மாதத் தில் ஸ்நோடென் அம்பலப்படுத் தினார். முதற்கட்டமாக அவர், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் இணையத்திலும் தொலைபேசி யிலும் நடைபெறும் தகவல் பரி மாற்றங்களை அமெரிக்கா பிரதி யெடுத்துள்ளதை ஆதாரங்களோடு வெளியிட்டார். தற்போது இரண்டாம் கட்டமாக, இந்தியா, பிரேசில் போன்ற ஏழை நாடு களையும் அமெரிக்கா உளவு பார்ப் பதை ஆதாரங்களுடன் அம்பலப் படுத்தியுள்ளார்.

கடந்த ஜூன் மாதத்தில் அமெரிக் காவின் இந்த ஒற்றறியும் வேலை களை ஸ்நோடென் அம்பலப்படுத் திய போது, தீவிரவாதிகளைக் கண் காணிப்பதற்காகத்தான் அவ்வாறு செய்ததாகக் கூறி, அதனை நியாயப் படுத்தியது அமெரிக்கா. ஆனால், தற்போது அதன் விசுவாசமான 'நட்பு' நாடுகளான இந்தியா, பிரே சில் போன்றவற்றையும் அமெரிக்கா உளவு பார்த்துள்ளது. இத்தகைய ஒற்று வேலைகளின் மூலமாகத் திரட் டப்பட்ட தகவல்களின் அளவு களில், இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உள்ள கணினிகளில் சேமிக்கப் பட்டுள்ள எல்லா தகவல்களையும் அமெரிக்கா பிரதியெடுத்துள்ளது. தூதரக அதிகாரிகளின் மின்னஞ்சல் களைக் கண்காணித்ததுடன், கணினியைக் கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும் வேவு பார்த்துள்ளது. இதேபோன்று வாஷிங்டன் நகரில் உள்ள ஐ.நா.வுக் கான இந்திய அலுவலகத்தையும், மற்றுமொரு தூதரக அலுவலகத்தில் இயங்கி வந்த இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான ஐ.எஸ்.ஆர்.ஓ. (ISRO) வையும் வேவு பார்த் துள்ளது. இந்தியக் குடிமக்கள் தொலைபேசி மூலமாக யாருடன் பேசுகிறார்கள், இணையம் மூலமாக என்னென்ன தகவல்களைப் பரி

ஜெர்மனி, இந்தியா, பிரேசில் உள்ளிட்டுப் பல்வேறு நாடுகளின் அரசுகள் மற்றும் பொதுமக்களின் இணையதளங்களை அமெரிக்கா இரகசியமாக வேவு பார்த்து வருவதைக் கண்டித்து ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.



மாறிக் கொள்கிறார்கள் எனவும் கண்காணித்துள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் இந்தியாவின் இணைய மற்றும் தொலைத்தொடர்புத் தகவல் பரிமாற்றங்களிலிருந்து கிட்டத்தட்ட 6.3 பில்லியன் தகவல்கள் அளவிற்கு அமெரிக்கா பிரதியெடுத்துள்ளது. இந்தியாவின் உள்நாட்டு அரசியல் நிகழ்வுகள் தொடங்கி, அணுசக்தி மற்றும் விண்வெளித்துறையின் செயல்பாடுகள் வரையிலான அனைத்துத் தகவல்களும் இப்போது அமெரிக்காவின் கையில் உள்ளது.



இந்தியாவைப் போன்றே பிரேசில் நாட்டின் தூதரகங்களையும் பொதுமக்களின் தொலைபேசி உரையாடல்களையும் கண்காணித்ததுடன், அந்நாட்டு அதிபரது மின்னஞ்சல் முகவரியுடன் யாரெல்லாம் தொடர்பிலுள்ளனர் போன்ற தகவல்களையும் அமெரிக்கா களவாடியுள்ளது. பிரேசில் நாட்டின் எண்ணெய் வயல்களையும், பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான ''பெட்ரோபாஸ்'' நிறுவனத்தையும் அமெரிக்கா கண்காணித்ததுடன், இணையம் மூலமாக அந்நிறுவனம் பரிமாறிக்கொண்ட அனைத்துத் தகவல்களையும், அந்நிறுவனத்தின் கணினிகளில் சேமிக்கப்பட்ட அனைத்து கோப்புகளையும் பிரதியெடுத்துள்ளது. இதன் மூலம் அந்நாட்டின் எண்ணெய் வளத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் தற்போது அமெரிக்காவின் கையில் உள்ளது.

ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் மற்றொரு நாடு தலையிடுவதென்பது அந்நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது. ஆனால் இன்று அமெரிக்காவின் உலக மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்ட சூழலில், நாடுகளின் இறையாண்மை என்பது கேலிப் பொருளாகிவிட்டது. இந்தியா, பிரேசில் போன்ற ஏழை நாடுகள் மட்டுமல்ல; அமெரிக்காவின் மேலாதிக்கத்தை ஏற்கும் ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகளைக் கூட அமெரிக்கா உளவு பார்த்துள்ளது. இதற்கெதிராக பிரான்சும் ஜெர்மனியும் பிரேசிலும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால் இந்திய ஆட்சியாளர்களோ, இத்தகைய வாயளவிலான முணுமுணுப்பு கூட இல்லாமல், உலகளாவிய உளவு பார்க்கும் வலைப்பின்னலில் அமெரிக்காவின் கூட்டாளியாகவே செயல்படுகின்றனர். அமெரிக்காவின் கண்காணிப்புத் திட்டத்துக்கு உதவும் வகையில், அமெரிக்க அரசுடன் இந்தியாவின் வி.எஸ். என்.எல். நிறுவனம் (டாடா தொலைத்தொடர்பு நிறுவனம்) 2005 ஏப்ரலிலும், ரிலையன்ஸ் நிறுவனம் 2007 நவம்பரிலும் கையெழுத்திட்டுள்ளன. அமெரிக்க அரசு கோரினால், தங்களது வலைப்பின்னல் மூலம் சேகரிக்கப்படும் அனைத்துத் தகவல்களையும் அமெரிக்காவுக்கு இந்நிறுவனங்கள் அளிக்கும் வகையில் ஒப்பந்த விதிகள் போடப்பட்டுள்ளன.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்கிற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் மறுகாலனியாதிக்கம், எல்லா ஏழை நாடுகளது பெயரளவிலான இறையாண்மையையும் ஒழித்து அவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவே துடிக்கிறது அமெரிக்கா.

இதற்காக அந்நாடுகளின் இயற்கை வளத்தைச் சூறையாடும் நோக்கில் தகவல்களைத் திருடுவதுடன், ஆட்சியாளர்கள் முதல் குடிமக்கள்வரை யாராக இருந்தாலும், தான் கண்காணிக்க விரும்பும் அனைவரையும் எவ்விதத் தடையும் இன்றி உளவு பார்க்கிறது. இந்தியாவின் இயற்கை மூலவளங்கள் உள்ளிட்டு உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளையும் கொள்ளை அடிக்கவும், வர்த்தக நலன்களையொட்டி ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போட்டா போட்டியில் இந்தியாவின் மீதான தனது இரும்புப் பிடியைத் தக்கவைத்துக் கொள்ளவும், தனது அரசியல் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் அமெரிக்க வல்லரசு இத்தகைய உளவு பார்க்கும் நடவடிக்கைகளைச் செய்து வருகிறது.

இது, ஒரு நாட்டின் இறையாண்மையில் தலையிடும் அத்துமீறல் மட்டுமல்ல; வெறும் உளவு பார்க்கும் நடவடிக்கையும் அல்ல. இது, அனைத்து நாடுகளின் தகவல்களையும் நடவடிக்கைகளையும் தனது விரல் நுனியில் வைத்துக்கொண்டு உலகை ஆட்டிப்படைக்கும் அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த்தந்திரத் திட்டத்தின் ஒரு அங்கம். இந்த நோக்கத்திலிருந்தே மெய் உலகிலும் (real) மெய்நிகர் உலகிலும் (virtual) அமெரிக்கா மேலாதிக்கம் செலுத்துகிறது.

அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்தை எதிர்த்த போராட்டம் என்பது அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான ஆப்கான், இராக் போன்ற நாடுகளுக்கு மட்டும் உரியதோ, அமெரிக்காவின் உடனடி இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் சிரியா, இரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்கு மட்டும் உரியதோ அல்ல. ஒவ்வொரு நாட்டின் அரசும் அந்த நாட்டின் குடிமகனும் நேரடியாக அமெரிக்காவின் கண்காணிப்புக்கு உள்ளாகி வரும் சூழலில், அமெரிக்க மேலாதிக்கத்துக்கு எதிரான போராட்டம் என்பது நமது அன்றாட வாழ்வின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான போராட்டமாகவே மாறிவிட்டிருக்கிறது.

● கதிர்

# லஷ்மண்பூர் - பதே படுகொலைத் தீர்ப்பு:

# நீதிமன்றத்தின் வன்கொடுமை!

**நிலவுகின்ற அரசு அமைப்புமுறையின் கீழ் தாழ்த்தப்பட்டோருக்கு நீதி கிடைப்பது அரிதிலும் அரிதானது என்பது மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது.**

பீகாரிலுள்ள லஷ்மண்பூர்-பதே கிராமத்தில் 16 ஆண்டுகளுக்கு முன்பு தாழ்த்தப்பட்டோர் 58 பேரை ரன்வீர் சேனா என்ற ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களின் குண்டர் படையினர் படுகொலை செய்த வழக்கில், அமர்வு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட 26 ஆதிக்க சாதிவெறி பயங்கரவாதிகளை பாட்னா உயர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. கொல்லப்பட்டவர்களின் உற்றார் - உறவினர்களது சாட்சியங்கள் நம்பகத்தன்மையுடன் இல்லை என்று கூறி கடந்த அக்டோபர் 9-ஆம் நாளன்று மனுநீதியையே இந்நீதிமன்றம் தனது தீர்ப்பாக நிலைநாட்டியுள்ளது.

பீகாரின் தலைநகர் பாட்னாவிலிருந்து ஏறத்தாழ 100 கி.மீ. தொலைவில், ஜெகனாபாத் மாவட்டத்தின் சோனே ஆற்றின் கரையிலுள்ள கிராமம்தான் லஷ்மண்பூர்-பதே. ராஜபுத்திரர்கள், பூமிகார் ஆகிய ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களையும், மல்லா, பஸ்வான் முதலான தாழ்த்தப்பட்ட சாதியினரான கூலி விவசாயிகளையும் கொண்ட கிராமம் இது. வழக்கமாகத் தமக்கு வழங்கப்படும் கூலியான ஒன்றரை கிலோ உணவு தானியத்தை அறுவடைக் காலத்தில் 3 கிலோவாக உயர்த்தித்தருமாறு கோரி, வேலைக்கு வராமல் இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்ட மக்கள் இ.பொ.க. (மா-லெ) லிபரேஷன் கட்சியின் தலைமையில் திரண்டு போராடினர். நக்சல்பாரிகள் இயக்கம் இப்பகுதியில் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்கவும், தம்மை எதிர்க்கத் துணிந்துவிட்ட தாழ்த்தப்பட்டோரை அச்சுறுத்திப் பணியவைக்கவும் 1997 டிசம்பர் முதல்நாளன்று நள்ளிரவில் இக்கிராமத்தின் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பைச் சுற்றி வளைத்து பூமிகார் நிலப்பிரபுக்களின் ஆதிக்க சாதி வெறி குண்டர் படையான ரன்வீர் சேனா கொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டது.

போஜ்பூரிலிருந்து சோனே ஆற்றைக் கடந்து ஆயுதங்களுடன் படகில் வந்த நூற்றுக்கும் மேற்பட்ட ரன்வீர் சேனா குண்டர்கள், உள்ளூர் பூமிகார் நிலப்பிரபுக்கள் வழிகாட்ட, தாழ்த்தப்பட்டோரை வீடுகளிலிருந்து வெளியே இழுத்துப்போட்டு சுற்றிவளைத்துக் கொண்டு தாக்கிக் கொன்றனர். தப்பியோடியவர்களை டார்ச் லைட் மூலம் வீடுவீடாகத் தேடி விரட்டிக் கொன்றனர். இக்கொலைவெறியாட்டத்தில் 27 பெண்கள், 16 குழந்தைகள் உள்ளிட்டு 58 தாழ்த்தப்பட்டோர் கோரமாகக் கொல்லப்பட்டனர். நொறுங்கிக் கிடந்த தாழ்த்தப்பட்டோரது வீடுகளின் சுவர்களிலும் தரையிலும் மட்டுமின்றி, சோனே ஆற்றங்கரையிலும், கரையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த படகிலும்கூட இரத்தம் தெறித்திருந்தது. கொல்லப்பட்ட 27 பெண்களில் 8 பேர் கர்ப்பிணிகள். இக்கொலை வெறியாட்டம் நடந்த போது தானிய மூட்டைகளுக்குப் பின்னே பதுங்கிக் கொண்டு உயிர்பிழைத்தார் கர்ப்பிணியான ராஷ்மி தேவி. இக்கோரத்தைக் கண்ணெதிரே பார்த்த பீதியில் அவருக்கு கருச்சிதைவு ஏற்பட்டது. ‘‘நாங்கள் தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளைக் கொல்வதற்குக் காரணம், அவர்கள் வளர்ந்து பெரியவர்களான பிறகு நக்சல்பாரிகளாகி விடுவார்கள் என்பதால்தான். நாங்கள் பெண்களைக் கொல்

லஷ்மண்பூர்-பதே கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் 58 பேரைப் படுகொலை செய்து ரன்வீர் சேனா நடத்திய பயங்கரவாத வெறியாட்டம். (கோப்புப் படம்)





‘‘தீர்ப்புக்குப் பின்னர் சாதிவெறியர்கள் மீண்டும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எங்களைப் பிடித்தாட்டுகிறது. நாங்கள் எல்லா நம்பிக்கைகளையும் இழந்து நிற்கிறோம்’’ என்று கூறும் தாழ்த்தப்பட்ட மூதாட்டி.

வதற்குக் காரணம், அவர்கள் நக்சல்பாரிகளைப் பெற்றெடுத்துவிடுவார்கள் என்பதால்தான்’’ என்று ரன்வீர் சேனா பகிரங்கமாகவே கொக்கரித்தது.

தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்டு, அனைத்து பிரிவு உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி ஆதிக்க சாதி நிலப் பிரபுக்களுக்கு எதிரான போராட்டங்களால் நக்சல்பாரி இயக்கம் பீகாரில் பற்றிப் பரவத் தொடங்கியதும், ஒவ்வொரு ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களும் தனிவகை குண்டர்படைகளைக் கட்டியமைத்துக் கொண்டு உழைக்கும் மக்கள் மீது தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டனர். குர்மிகளின் பூமி சேனா, யாதவர்களின் லோரிக் சேனா, பூமிகார்களின் ரன்வீர் சேனா, ராஜபுத்திரர்களின் சன்லைட் சேனா முதலான குண்டர் படைகள் மட்டுமின்றி, பிரம்ம ரிஷி சேனா, குயேர் சேனா, கங்கா சேனா முதலான வட்டார அளவிலான குண்டர் படைகளும் உருவாக்கப்பட்டன. இவற்றில், 1994-இல் கட்டியமைக்கப்பட்ட பூமிகார்களின் ரன்வீர் சேனாதான் வலுவானதும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதுமாகும். அதன் தலைவன்தான் பிரம்மேஷ்வர் சிங். அவன் முன்னின்று வழிநடத்தியதுதான் லஷ்மண்பூர்-பதே கொலைவெறியாட்டம்.

தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக ஆதிக்க சாதி நிலப்பிரபுக்களால் நடத்தப்பட்ட இப்படுகொலை பற்றிய வழக்கில் 11 ஆண்டுகளான பின்னரும் நீதிமன்ற விசாரணை தொடங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு, மாநில உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின்னரே 2008-இல்தான் விசாரணையே தொடங்கியது. படுகொலை நடந்து 13 ஆண்டுகளுக்குப் பிறகு, பாட்னா அமர்வு நீதிமன்ற நீதிபதியான விஜய் பிரகாஷ் மிஸ்ரா, குற்றம் சாட்டப்பட்ட சாதிவெறியர்களில் 16 பேருக்கு மரண தண்டனையும் 10 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கி, எஞ்சிய 9 பேரை விடுதலை செய்து 7.10.2010 அன்று தீர்ப்பளித்தார். அதை எதிர்த்து சாதிவெறியர்கள் பாட்னா உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். மூன்றாண்டுகளுக்குப் பிறகு கொலைகார சாதிவெறியர்களை உயர்நீதிமன்றம் இப்போது விடுதலை செய்துள்ளது. ‘‘பீதி நிறைந்த அந்தச் சூழலில் ஒவ்வொருவரும் உயிர் பிழைக்கத் தப்பியோடியிருப்பார்களே அன்றி, படுகொலை நடந்த இடத்தில் இருந்திருக்க மாட்டார்கள்; குற்றவாளிகளை இருட்டில் அடையாளம் கண்டிருப்பார்கள் என்பது நம்பும்படியாக இல்லை’’ என்று தீர்ப்பளித்திருக்கிறது உயர்நீதிமன்றம். இந்தப் படுகொலைக்கான காரணம் மட்டுமல்ல, குற்றவாளிகளை விடுவிப்பதற்கு நீதிமன்றம் கூறியிருக்கும் காரணமும் அப்படியே கீழ் வெண்மணியை ஒத்திருக்கிறது.

ஆனால் முகத்தை மறைத்துக் கொண்டு வந்த அவர்களின் தோற்றத்தை வைத்தும், அவர்களின் குரலை வைத்தும் அவர்கள் யார் என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அடையாளம் காட்டி சாட்சியமளித்த போதிலும், அதை நீதிமன்றம் ஏற்க மறுத்திருக்கிறது. தீர்ப்பளித்த நீதிபதிகள் கொலைகாரர்களை விடுவிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, அதற்கேற்ப கிரிமினல்களைப் போலச் சிந்தித்துத் தீர்ப்பெழுதியிருக்கின்றனர். மேல் முறையீட்டில் சாதிவெறியர்கள் விடுதலையாகும் விதத்திலும், உயர்நீதிமன்றம் சட்டப்படி குற்றவாளிகளை விடுவிப்பதற்கு ஏதுவாகவும், போதுமான ஓட்டைகளுடன் குற்றப்பத்திரிகையை போலீசு தயாரித்திருக்கும்.

‘‘இத்தீர்ப்பையடுத்து ஆதிக்க சாதிவெறியர்கள் இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்து ஆனந்தக் கூத்தாடுகின்றனர். ‘உங்கள் வீட்டைக் கொளுத்தினாலும், உங்களைக் கொன்றாலும் எங்களை யாராலும் எதுவும் செய்ய முடியாது பார்த்தீர்களா’ என்று எங்களிடம் எகத்தாளம் செய்கின்றனர். இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் அவர்கள் எங்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தலாம்

பூமிகார் நிலப்பிரபுக்களின் ஆதிக்கசாதி கொலைகார குண்டர் படையான ரன்வீர் சேனா. (கோப்புப் படம்)



என்ற அச்சம் எங்களைப் பிடித்தாட்டுகிறது. நாங்கள் எல்லா நம்பிக்கைகளையும் இழந்து நிற்கிறோம்'' என்கிறார் லஷ்மண்பூர்-பதே கிராமத்தைச் சேர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட மூதாட்டி.

''இவ்வளவு கொடிய சாதி வெறிப் படுகொலையில் குற்றவாளிகள் தப்பிக்கிறார்களே, அது எப்படி சாத்தியம்? ஏனெனில், நீதிமன்றங்கள் அவர்களுக்கானது; அரசாங்கம் அவர்களுக்கானது; போலீசு அதிகாரம் அவர்களுடையது. ஏழைகளுக்கு எதுவுமில்லை. இதுதான் இன்றைய நீதி!'' என்று தனது சொந்த அனுபவத்திலிருந்து கூறுகிறார், தனது குடும்பத்தில் ஏழு பேரை இப்படுகொலையில் பறிகொடுத்த லஷ்மண்பூர்-பதே கிராமத்தைச் சேர்ந்த பவுத் பஸ்வான் என்ற தாழ்த்தப்பட்ட கூலி விவசாயி.



லஷ்மண்பூர்-பதே கொலை வெறியாட்டத்தை வழிநடத்திய ரன்வீர் சேனா குண்டர்படையின் தலைவன் பிரம்மேஷ்வர் சிங். (கோப்புப் படம்)

பீகாரில் சாதிவெறி பயங்கரவாதிகள் உயர்நீதிமன்றத்தால் விடுவிக்கப்படுவது இப்போது முதன்முறையாக நடப்பதல்ல. ஏற்கெனவே பதானிதோலாவில் தாழ்த்தப்பட்டோரைக் கொன்ற குற்றவாளிகள் 2012 ஜூலையில் விடுவிக்கப்பட்டனர். பின்னர் நக்ரி பஜார் பகுதியில் சாதி வெறியர்களால் நடத்தப்பட்ட படுகொலையின் குற்றவாளிகள் 2013 மார்ச்சில் விடுவிக்கப்பட்டனர். இவை தவிர மியான்பூர், நாராயண்பூர், காத்தி பிகா முதலான இடங்களில் தாழ்த்தப்பட்டோர் கொல்லப்பட்ட வழக்குகளில் அமர்வு நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்ட சாதி வெறியர்கள் உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

லஷ்மண்பூர்-பதே படுகொலையை அன்றைய அரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன், தேசிய அவமானம் என்று சாடி கண்டனம் தெரிவித்த பின்னரே, லல்லு பிரசாத் யாதவின் மனைவியான ராப்ரி தேவியின் ராஷ்ட்ரிய ஜனதா தள அரசாங்கம் ரன்வீர் சேனாவுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றி விசாரணை நடத்த நீதிபதி ஆமிர்தாஸ் தலைமையிலான ஒரு ஆணையத்தை நியமித்தது. அந்த ஆணையம் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்னரே ராப்ரி தேவி அரசாங்கம் கவிழ்ந்தது. பின்னர் 2006-இல் ஆட்சிக்கு வந்த நிதிஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதாதள-பா.ஜ.க. கூட்டணி அரசாங்கம் அந்த ஆணையத்தைக் கலைத்து, அதன் விசாரணை அறிக்கையை முடக்கி வைத்தது. இருப்பினும், சில சமூக ஆர்வலர்களின் முயற்சியால் இந்த அறிக்கை அம்பலமானது. காங்கிரசு, பா.ஜ.க., சமதா முதலான ஆளும் வர்க்கக் கட்சிகள் மட்டுமின்றி, 'சமூக நீதி' பேசும் ராஷ்ட்ரிய ஜனதா தளம், ஐக்கிய ஜனதா தளம் முதலான ஓட்டுக் கட்சிகளின் உள்ளூர் தலைவர்களும் பிரமுகர்களும் ரன்வீர் சேனாவின் கூட்டாளிகளாகவும் புரவலர்களாகவும் இருந்துள்ள விவகாரம் இந்த அறிக்கையின் மூலம் வெளிவந்தது.

ஐக்கிய ஜனதா தளம் கட்சியே பூமிகார் சாதிவெறி நிலப்பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தும் கட்சியாக இருப்பதால், கொலைகாரன் பிரம்மேஷ்வர் சிங்கின் பெயர் ரன்வீர் சேனா நடத்திய படுகொலைகள் தொடர்பான எந்த முதல் தகவல் அறிக்கையிலும் சேர்க்கப்படவில்லை. அவன் பிணையில் வெளிவர மனுச்செய்த போது, அதை நிதிஷ் அரசாங்கம் எதிர்க்கவுமில்லை. பின்னர், குற்றங்கள் நிரூபணமாகவில்லை என்று 2011-இல் அவன் விடுதலை செய்யப்பட்டான். அதன் பிறகு அவன் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதும், இச்சாதிவெறி பயங்கரவாதிக்கு பா.ஜ.க.வும் ஐக்கிய ஜனதாதளமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தின.

இவையனைத்தும், இன்றைய அரசியலமைப்பு முறையே தாழ்த்தப்பட்டோருக்கும் அனைத்து பிரிவு உழைக்கும் மக்களுக்கும் எதிரானதாக இருப்பதையும், பெயரளவிலான ஜனநாயகத்தையும் சட்டப்படியான மனித உரிமைகளையும் கூட செயல்படுத்த வக்கற்று தோல்வியடைந்து கிடப்பதையும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. ஏற்கெனவே சமூக ரீதியில் ஒரு ஆதிக்க சாதி என்ற முறையில் பெற்றிருக்கும் அதிகாரத்துடன், அரசியல் கட்சி, அதிகார வர்க்கம், போலீசு, நீதித்துறை போன்ற வற்றிலும் இந்த இடைநிலைச்சாதிகளின் மேட்டுக்குடி வர்க்கங்கள் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. மேலும், தனியார்மய - தாராளமயக் கொள்கைகளின் அமலாக்கத்துக்குப் பின்னர், இத்தகைய இடைநிலைச் சாதிகளில் தோன்றியிருக்கும் புதியவகை தரகு வர்க்கங்கள் இன்று சாதிக்கட்சிகளின் புரவலராக இருந்து, சாதிய பிழைப்புவாத வாக்கு வங்கி அரசியலுக்கு வழியமைத்துக் கொடுப்பதோடு, தீண்டாமையைத் தங்களது பிறப்புரிமையாக அறிவிக்கும் அளவுக்குக் கொட்டமடிக்கின்றன. தமிழகத்தில் ராமதாசு உருவாக்கிக் கொண்டிருக்கும் ஆதிக்க சாதிகளின் கூட்டணி இத்தகையது தான்.

சாதி-தீண்டாமையை ஒழிப்பதற்கு முன்வைக்கப்படும் சீர்திருத்தவாதத் தீர்வுகளும் நாடாளுமன்ற அரசியல் வழிமுறைகளும் தோல்வியைத் தழுவி விட்டன என்பது மட்டுமல்ல, அவை சாதியை மேலிருந்து உறுதிப்படுத்துவதற்கும், தீண்டாமைக் கொடுமைகளைத் தீவிரப்படுத்துவதற்குமே பயன்படுகின்றன. சாதி அரசியலுக்கும், சாதியைப் புனிதப்படுத்தும் பார்ப்பனியத்துக்கும், பிழைப்புவாத நாடாளுமன்ற அரசியலுக்கும் எதிராக ஒரு ஜனநாயகப் புரட்சிக்கு மக்களை அணிதிரட்டுவதுதான் அவசரக் கடமையாக இருக்கிறது.

● குமார்

## நகரத் தெருக்கள்:

# சீமான்களுக்கா, சாமானியர்களுக்கா?

**கொல்கத்தா நகரின் முக்கிய வீதிகளில் சைக்கிள்களில் செல்லத் தடை விதிக்கப்பட்டிருப்பது ஏழைகளின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும்.**

**சை**க்கிளில் சென்று வீடுகளுக்குப் பால் - செய்தித்தாள் விநியோகிப்பவர்களுக்கும் சைக்கிள் ரிக்ஷாவை வைத்துப் பிழைப்பவர்களுக்கும் இனி கொல்கத்தா நகரின் சாலைகளைப் பயன்படுத்த முடியாது என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. சைக்கிள்கள், கைவண்டிகள், டிரை சைக்கிள் போன்ற மோட்டார் பொருத்தப்படாத வாகனங்களால் போக்குவரத்து நெரிசல் அதிகரிப்பதாகவும், இவ்வாகனங்களால் கொல்கத்தாவின் சாலைப் போக்குவரத்து வேகம் தேசிய சராசரியைவிடக் குறைந்துவிட்டதாகவும் காரணங்களை அடுக்கி, அந்நகரத்தின் 174 சாலைகளில் சைக்கிள் உள்ளிட்ட சாமானிய மக்களின் வாகனங்களுக்குத் திமிர்த்தனமாகத் தடை விதித்துள்ளது மம்தா அரசு. தடையை மீறினால் ரூ.110 அபராதம் அல்லது சைக்கிள் பறிமுதல் - என எச்சரிக்கும் போலீசு, ''சைக்கிள்களில்தான் பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளை வைக்கிறார்கள்'' எனப் பீதியூட்டி, அரசின் இம்முடிவை வக்கிரமாக நியாயப்படுத்துகிறது.

இத்தடையுத்தரவால் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள பால்காரர்கள், செய்தித்தாள் போடுபவர்கள், தனியார் அஞ்சல் (கூரியர்) ஊழியர்கள், நடைவண்டி வியாபாரிகள், ரிக்ஷா வண்டி ஓட்டுபவர்கள், தொழிற்சாலை ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தன்னிச்சையாக வெகுண்டெழுந்து வீதியில் இறங்கி சைக்கிள் சக்கரங்களைத் தலைக்கு மேல் ஏந்தியபடி 'சைக்கிள் சத்தியாகிரக'ப் போராட்டத்தை நடத்தினர். திமிர் பிடித்த மம்தா அரசோ, போராடிய மக்களின் மீது போலீசைக் கொண்டு தடியடித் தாக்குதலை நடத்தி தனது கோரமுகத்தை மீண்டும் காட்டியது.

சாமானிய, நடுத்தர வர்க்கத்தினர் நிறைந்த கொல்கத்தா நகரம் குறுகலான தெருக்களைக் கொண்டதாகும். இதர பெருநகரங்களை ஒப்பிடும் போது, கொல்கத்தாவில்தான் சைக்கிள்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. கொல்கத்தாவின் குறுகலான தெருக்களில் அதிக இடத்தை அடைத்துக் கொள்ளும் கார்களால்தான் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறதேயன்றி, சைக்கிளால் போக்குவரத்து தடைபட்டுத் தாமதமாகிறது என்கிற வாதமே அபத்தமானது.

இலண்டனைப் போல கொல்கத்தாவை மாற்றுவேன் என்று தேர்தல் வாக்குறுதி கொடுத்த மம்தா, கொல்கத்தாவின் சாலைகளிலிருந்து சாமானியர்களைத் விரட்டியடித்துவிட்டு, அந்நகரை கார்களில் பறக்கும் மேட்டுக்குடியினருக்கானதாக மாற்றிவிடத் துடிக்கிறார். தனியார்மய - தாராளமயமாக்கலைத் தொடர்ந்து இதர மாநிலங்களின் ஆட்சியாளர்கள் நகரை அழகுபடுத்துவது எனும் பெயரால் குடிசைகளை அப்புறப்படுத்தி சாமானியர்களைத் துரத்துவதும், கொல்கத்தாவில் சைக்கிள்களில் பயணிக்கும் உழைக்கும் மக்களைச் சாலைகளிலிருந்து அகற்றுவதும் வேறுவேறல்ல.

அனுமதிக்கப்படாத இடங்களில் கார்களை நிறுத்துவோரை மென்மையாகக் கையாள்வதும், அதே இடங்களில் சைக்கிளையோ ஆட்டோவையோ நிறுத்துவோர்

கொல்கத்தா நகரின் சாலைகளில் மிதிவண்டி மற்றும் ரிக்ஷா உள்ளிட்ட சாமானிய மக்களின் வாகனங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடையைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டம்.



மீது பாய்ந்து குதறுவதும் நாடெங்கும் போலீசின் பொது விதியாகவே உள்ளது. குடிசை மாற்று வாரிய வீடுகளின் வாடகையை விட மிகவும் குறைவான வாடகையைத் தான் கார்கள் நிறுத்துமிடங்களுக்கு அரசு வசூலிக்கிறது. பல ஐரோப்பிய நாடுகளிலும் சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளிலும் தொடர்வண்டி, பேருந்து போன்றவற்றுக்கு அரசு முக்கியத்துவம் தருகின்றபோது இங்கோ, பொதுப்போக்குவரத்தைப் படிப்படியாகக் குறைக்கும் அரசு, இருசக்கர வாகனங்கள் வாங்குவோருக்குக் கடனுதவியும் கார்களுக்குக் குறைவான சாலை வரியையும் விதித்து திட்டமிட்டே கார்-மோட்டார் சைக்கிள் கம்பெனி முதலாளிகளின் நலனுக்காகச் செயல்படுகிறது.

நகரங்களை மாற்றியமைக்கும் அரசு, அங்கே மாடுகளை வைத்துப் பிழைப்போர் இருக்கக் கூடாது, சைக்கிள் ஓட்டிப் பிழைப்போர் இருக்கக்கூடாது - எனப் பல கூடாதுகளை ஒன்றன்பின் ஒன்றாக அறிவித்து உழைக்கும் மக்களை நகரங்களிலிருந்தே விரட்டியடித்து வருகிறது. சாமானியர்களை அற்பமாகவும் தேவையற்றவர்களாகவும் கருதும் கண்ணோட்டத்திலிருந்து பிறக்கும் இந்த வக்கிரமான உத்தரவுகள் ஒவ்வொன்றும் உழைக்கும் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்குவதால், இத்தடைகளுக்கு எதிராகவும் இவற்றுக்குக் காரணமான தனியார்மய-தாராளமயத்துக்கு எதிராகவும் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் சைக்கிள்களுக்கு சாலைகளில் தடை கொண்டுவர முயன்றபோது, உழைக்கும் மக்கள் அதை எதிர்த்துப் போராடி அரசைப் பணியவைத்த வீர வரலாறு நம் முன்னே உள்ளது.

● அன்பு

# “வியாபாரிகளின் ஒற்றுமையைக் கட்டியமைப்போம்! போலீசின் பிரித்தாளும் சூழ்ச்சியை முறியடிப்போம்!”

### – அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கத்தின் ஆர்ப்பாட்டம்.

திருச்சியில் பத்தாண்டுகளுக்கு முன்னர் பெரிய கடைவீதி, தேரடி கடைவீதி, என்.எஸ்.பி.ரோடு, நந்தி கோவில் தெரு முதலான பகுதிகளில் தரைக்கடை வியாபாரிகளை மொத்தமாக அப்புறப்படுத்தியது மாநகராட்சி. திக்குத் தெரியாமல் தவித்த தரைக்கடை வியாபாரிகளை அணிதிரட்டி, தரைக்கடை போடுவது நமது அடிப்படை உரிமை எனப் போராடி, நந்திகோவில் தெருவில் கடைபோடும் உரிமையைப் பெற்றுத் தந்தது, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் இணைப்புச் சங்கமான அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கம்.



போர்க்குணமிக்க இச்சங்கத்தைத் தனது அதிகாரத்தைக் காட்டிப் பணிய வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட போலீசு, இச்சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்று எழுதிக் கொடுத்த சில வியாபாரிகளுக்கு என்.எஸ்.பி.ரோட்டில் கடைபோட்டுக் கொள்ள அனுமதித்தது. பின்னர் புரோக்கர்களிடம் மாமூல் கொடுத்தால் மட்டுமே கடை போட முடியும் என்ற நிலையை உருவாக்கியது. இதற்கு விசுவாசமாக போலி கம்யூனிஸ்டு சி.ஐ.டி.யு. சங்கமும் த.மு.மு.க. சங்கமும் போலீசுக்கு மாமூல் வாங்கிக் கொடுத்து, கடை போட வைத்து சேவகம் செய்து கொண்டிருக்கின்றன.

தெப்பக்குளம் தென்கரை காலியாக இருந்தபோது, அதில் கடைபோட அனுமதி கோரி மனு கொடுத்தது அ.த.வி.பா.சங்கம். ஆனால் சி.ஐ.டி.யு.வினரிடம் மாமூல் வாங்கிக் கொண்டு கடை போட அனுமதித்தது கோட்டை போலீசு. இதை எதிர்த்து அ.த.வி.பா.சங்கத்தினர் போராட்டத்தை அறிவித்தவுடன், ஒரு சில இடங்களை மட்டும் ஒதுக்கியது. பின்னர் சி.ஐ.டி.யு.வினரைத் தூண்டிவிட்டு அடிதடி, வழக்கு, விசாரணை என்று தொடர்ந்து தகராறை வளர விட்டு வியாபாரிகளின் ஒற்றுமையைச் சீர்குலைத்து, சங்கத்தை ஒழிப்பதையே நோக்கமாக் கொண்டு போலீசு செயல்பட்டு வருகிறது.

போலீசின் இச்சதிகளை அம்பலப்படுத்திப் பிரச்சாரத்தை மேற்கொண்ட அ.த.வி.பா.சங்கத்தினர், ''போலீசைப் பார்த்து அஞ்சுவதும் புரோக்கர்களிடம் கெஞ்சுவதும் அவமானம்! ஒன்றாய்த் திரண்டு போராடி உரிமை பெறுவதே தன்மானம்!'' என்ற முழக்கத்துடன் 17.10.2013 அன்று திருச்சி சிந்தாமணி - அண்ணாசிலை அருகில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

சங்கத்தின் செயலாளர் தோழர் பழனிச்சாமி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், போக்குவரத்து நெரிசலைக் காரணம் காட்டி தரைக்கடை போட அனுமதி மறுப்பதாக மாநகராட்சியும் போலீசும் கூறும் பொய்யைத் திரைகிழித்து, மாமூலும் பொய்வழக்கும் தருகின்றவர்களுக்கு கடைபோட அனுமதிக்கும் போலீசின் அயோக்கியத்தனத்தைத் திரை கிழித்துக் காட்டினார், சங்கத்தின் சிறப்புத் தலைவர் தோழர் சேகர். தரைக்கடைகள் போடுவது சட்டப்படியான உரிமை என்று உச்ச நீதிமன்றமே உத்தரவு பிறப்பித்த பின்னரும் கடைபோட போலீசு அனுமதிக்காததன் காரணம் மாமூல் பறிக்கத்தான் என்பதை விளக்கி, இச்சட்டவிரோதச் செயலுக்கு எதிராகப் போராட அறைகூவினார் ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன்.

போலீசின் சதிகளைப் புரிந்து கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்ற தரைக்கடை வியாபாரிகள் அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

-பு.ஜ.செய்தியாளர், திருச்சி.

# சி.பி.எம்: சமூக விரோதக் கழிசடைகளின் புகலிடம்!

திரிபுரா மாநிலத்தில் அரசுப் பணிகளுக்கான அங்கீகாரம் பெற்ற ஒப்பந்ததாரராகத் தொழில் செய்து வருகிறார் சி.பி.எம். கட்சியின் ஜோகேந்தர் நகர் கமிட்டி உறுப்பினரான சமர் ஆச்சார்ஜி. திரிபுராவின் தலைநகர் அகர்தலா உள்ளிட்ட மூன்று நகராட்சிகளில் ஏழை மக்களுக்காக 2,400 கழிப்பறைகளைக் கட்டித்தர அவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து அரசிடமிருந்து ஒப்பந்தப் பணிகளை எடுத்துள்ளார். இதன் மூலம் ரூ. 2.5 கோடி வரை சம்பாதித்துள்ள அவர், கடந்த அக்டோபர் 10-ஆம் தேதியன்று தனது வங்கிக் கணக்கிலிருந்து ரூ.20 லட்சத்தை ரொக்கப் பணமாக எடுத்து வந்து மெத்தை மீது விரித்து, அதன் மீது படுத்துக் கொண்டு சில நோட்டுக் கட்டுகளை தன் மீது பரப்பிக் கொண்டு, அக்காட்சியைத் தனது செல்பேசி கேமரா மூலம் பதிவு செய்து தனது நண்பர்களுக்கு பெருமிதத்துடன் அனுப்பியுள்ளார். இது தனது வாழ்நாள் கனவு என்றும், இப்போதுதான் அது நிறைவேறியுள்ளது என்றும், கட்சியின் பிற தலைவர்களைப் போல பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொண்டு சம்பாதித்த சொத்துக்களை மறைத்து ஏழையைப் போல நடிப்பதில் தனக்கு உடன்பாடில்லை என்றும் அவர் அந்த வீடியோவில் பேசியுள்ளார். இந்த வீடியோவை அவரது நண்பர் ஒருவர் உள்ளூர் தொலைக்காட்சிக்குக் கொடுக்க, அது நாடெங்கும் இப்போது ஒளிபரப்பாகி, ஊழல் பெருச்சாளிகளான காங்கிரசுக்காரர்களே காறித்துப்பும் அளவுக்கு சி.பி.எம். கட்சியின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது.



பணக்கட்டுகளை மெத்தை மீது விரித்துப் படுத்துப் புரளும் போலி கம்யூனிஸ்டு சமர் ஆச்சார்ஜி.

இது பற்றி சமர் ஆச்சார்ஜியிடம் விளக்கம் கேட்டு, அது ஏற்புடையதாக இல்லாததால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அடிப்படை உறுப்பினர் தகுதியிலிருந்து கடந்த அக்டோபர் 19 அன்று நீக்கிவிட்டோம் என்கிறது, சி.பி.எம். கட்சியின் திரிபுரா மாநிலக் குழு. அரசு ஒப்பந்ததாரர் எப்படிக் கட்சி உறுப்பினராக இருக்க முடியும் என்பதையோ, இப்படி ஊழல் செய்து முறைகேடாகச் சம்பாதித்ததையோ சி.பி.எம். கட்சி ஒரு குற்றமாகக் கருதவில்லை. பணத்தில் படுத்துப் புரண்டு அதை வீடியோ எடுத்து வெளிச்சம் போட்டுக் காட்டியதுதான் அக்கட்சிக்குப் பெரிய குற்றமாகிவிட்டது.

புரட்சி சவடால் அடிக்கும் சி.பி.எம்.கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியே அல்ல. அது, பிழைப்புவாதிகள், ஊழல் பெருச்சாளிகள், கிரிமினல் குண்டர்களின் கட்சிதான். திரிபுராவில் மட்டுமின்றி, திருவாரூர் மாவட்ட சி.பி.எம்.கட்சியினரும் இதை மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, நிலவுடமை ஆதிக்கத்தை எதிர்த்து ஒருங்கிணைந்த கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டங்களில் உறுதிமிக்கப் போராளியாகத் திகழ்ந்தவர்தான், திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியத்திலுள்ள திட்டாணி முட்டம் கிராமத்தைச் சேர்ந்த தோழர் சின்னப்பா. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை நடத்தியதோடு, பண்ணையடிமைகளாக இருந்த தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகளைத் திரட்டி சவுக்கடி, சாணிப்பால் கொடூரங்களுக்கு எதிராகப் போராடிய முன்னுதாரணமிக்க கம்யூனிஸ்டாக அவர் திகழ்ந்தவர். கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்ட பின்னர் சி.பி.எம். கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட அவர், மாவட்டம் முழுவதும் சைக்கிளிலேயே பயணித்து விவசாயிகள் சங்கத்தைக் கட்டியமைக்கவும், திட்டாணி முட்டம் கிராமத்தில் ஆதிக்க சாதியினரின் ஆக்கிரமிப்பில் இருந்த புறம்போக்கு நிலங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் குடிசைகள் கட்டிக் கொடுக்கவும் அரும்பாடுபட்டார்.

இத்தகைய தியாகச் செம்மலாகத் திகழ்ந்த சின்னப்பா, தான் கட்டி வளர்த்த சி.பி.எம். கட்சியினரே ஊர்ச்சொத்தைக் கொள்ளையடிப்பதையும், பொது நிதியை பொய்க்கணக்கு காட்டி ஏய்ப்பதையும், அப்பாவிக் கூலித் தொழிலாளிகளைச் சாதியக் கட்டுமானப்படி ஊரை விட்டு ஒதுக்கிவைப்பதையும் ஒரு மூத்த கம்யூனிஸ்டு என்கிற முறையில் எதிர்த்தார். இதனால் பிழைப்புவாத சி.பி.எம். கட்சித் தலைமையின் எதிர்ப்பைச் சம்பாதித்தார்.

திட்டாணி முட்டம் கிராமத்தில், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவி கலைச்செல்வியின் கணவரும் சி.ஐ.டி.யு. மாவட்டத் தலைவருமான டி.முருகையன், 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் சாலை அமைப்பது என்ற பெயரில் சின்னப்பாவின் விளைநிலத்தை ஆக்கிரமித்து, அவர் வளர்த்த மரங்களை வெட்டிச் சாய்த்தார். இதை எதிர்த்து நியாயம் கேட்ட சின்னப்பா மற்றும் அவருக்கு ஆதரவாக நின்றவர்களை கிராமக் கமிட்டி கூட்டத்தில் ஊரை விட்டே ஒதுக்கி வைத்தனர், சி.பி.எம். தலைவர்கள். 2011-இல் சின்னப்பாவை சி.பி.எம். கட்சிக் குண்டர்கள் கொடூரமாகத் தாக்கியதில் அவரது இடுப்பு எலும்பு முறிந்து ஆறு மாதங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். நடமாட முடியாமல் படுத்த படுக்கையாகிவிட்ட அவர், கடந்த 5.10.2013-இல் மரணமடைந்தார்.



திட்டாணி முட்டம் கிராமத்தில் புரட்சிகர-ஜனநாயக சக்திகளால் நிறுவப்பட்டுள்ள தோழர் சின்னப்பா அவர்களின் நினைவுக் கல்வெட்டு. (உள்படம்) தோழர் சின்னப்பா

இப்பகுதியில் உழைக்கும் மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் என்ற முறையில் விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் உள்ளிட்டு அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளும் அவரது இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். சாதிக் கட்டுப்பாடு போட்டு அவரது இறுதி ஊர்வலத்தில் பங்கேற்கக்கூடாது என சி.பி.எம். கட்சித் தலைமை தடுத்த போது, ''எங்களை உருவாக்கிய தலைவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளக் கூடாதெனத் தடை போட நீங்கள் யார்?'' என்று வர்க்க உணர்வுள்ள சில சி.பி.எம். ஊழியர்கள் ஆவேசப்பட்டுக் கடைத்தெருவிலிருந்த சி.பி.எம். கட்சிக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விட்டு இறுதி ஊர்வல நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மறைந்த இத்தியாகத் தோழருக்கு வி.வி.மு; பு.மா.இ.மு.வினரும், கிராமக் கமிட்டி மற்றும் மாதர் சங்கத் தோழர்களும் இணைந்து கடைத் தெரு அருகே இதர கட்சிகளின் கொடிக் கம்பங்கள் அமைந்துள்ள இடத்தில் நினைவுக் கல்வெட்டு அமைக்கத் தீர்மானித்தனர். இதற்கான கட்டுமானப் பணிகளைச் செய்து கொண்டிருந்தபோது, அதைத் தடுக்க போலீசு, வருவாய்த்துறை அதிகாரிகள் மூலம் சி.பி.எம். கட்சியின் பிழைப்புவாதத் தலைவர்கள் முயற்சித்தனர். புரட்சிகர அமைப்புகளின் உறுதியான நடவடிக்கையால் அது முடியாமல் போகவே, 18-ஆம் தேதியன்று நள்ளிரவில் 50,60 பேர் கொண்ட சி.பி.எம். குண்டர்படையினர் குடிபோதையில் அரிவாள், கம்பு, உருட்டுக்கட்டை, கடப்பாரையுடன் கல்வெட்டை உடைக்க வந்தனர்.

இதையறிந்ததும் பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்டுத் தோழர்கள் திரண்டு கல்வெட்டைக் காத்து நின்று, தோழர் சின்னப்பாவின் புகழையும், நக்சல்பாரி புரட்சிகர முழக்கங்களையும் எழுப்பினர். இதைக் கேட்டு கிராம மக்கள் திரளத் தொடங்கியதும், ஆயுதங்களை வீசியெறிந்து விட்டு குண்டர்கள் தப்பியோடினர். பின்னர் போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் இழுத்தடிப்புகளை முறியடித்து, திட்டமிட்டபடி 20.10.2013 அன்று தோழர் சின்னப்பா அவர்களின் நினைவுக் கல்வெட்டு திறப்பு நிகழ்ச்சியும், அவரது இல்லத்தில் படத்திறப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. பல்வேறு கட்சியின் பிரமுகர்களும் புரட்சிகர ஜனநாயக சக்திகளும் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில், பட்டுக்கோட்டை வட்டார வி.வி.மு. செயலாளர் தோழர் மாரிமுத்து, திருவாரூர் மாவட்ட பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர் ஆசாத், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் தோழர் சின்னப்பாவின் போராட்ட வாழ்வையும் கம்யூனிச நேர்மையையும் விளக்கி, கிரிமினல் கும்பலாகச் சீரழிந்துவிட்ட சி.பி.எம். கட்சியின் துரோகத்தையும் பித்தலாட்டத்தையும் மக்களிடம் அம்பலப்படுத்தி, நக்சல்பாரி பாதையில் அணிதிரள்வதே தோழர் சின்னப்பாவுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும் என உரையாற்றினர்.

– பு.ஜ. செய்தியாளர், திருவாரூர்.



# இலஞ்சம்...

# தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கும் கவசம்!

"காஷ்மீரில் ஸ்திரத்தன்மையைத் தொடர்வதில் இலஞ்சத்திற்கும் பங்குண்டு" என்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி வீ.கே.சிங்.

**வீ**.கே.சிங் என்ற விஜயகுமார் சிங் இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இருந்தபொழுது (2010-2012) உருவாக்கப்பட்டு, அவரது கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப ஆதரவு பிரிவு என்ற உளவு அமைப்பின் செயல்பாடுகள் குறித்து விசாரணை நடத்திய இந்திய இராணுவத் தலைமை, ''அந்த அமைப்பு ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தை ஆண்டு வரும் ஒமர் அப்துல்லா அரசைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு, அவரது கூட்டணி அரசில் விவசாயத்துறை அமைச்சராக இருந்துவரும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த குலாம் ஹசன் மிர்ருக்கு 1.19 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது; இராணுவ அமைச்சகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டிருக்கிறது'' என்பன உள்ளிட்டுப் பல முக்கியமான கிரிமினல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறது. மைய அரசிடம் கடந்த மார்ச் மாதத்தில் அளிக்கப்பட்ட இவ்விசாரணை அறிக்கை இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படவில்லை என்றாலும், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் அதிலுள்ள முக்கிய விடயங்களை கடந்த செப்.மாத இறுதியில் பரபரப்புச் செய்தியாகக் கசியவிட்டது.

கடந்த ஆறேழு மாதங்களுக்கு மேலாக மைய அரசின் குப்பைகளுள் ஒன்றாகக் கிடந்த இந்த அறிக்கை, வீ.கே.சிங், பா.ஜ.க.வின் பிரதம மந்திரி வேட்பாளர் நரேந்திர மோடியுடன் கைகோர்த்துக் கொண்டவுடனேயே கசிந்து வெளிவந்திருப்பதைத் தற்செயலானதாகவோ, மைய அரசிற்குத் தெரியாமல் நடந்துவிட்டதாகவோ கருத முடியாது. அதேசமயம், இந்தக் கசிவு கேள்விக்கிடமற்ற புனிதப் பசுவாகச் சித்தரிக்கப்படும் இந்திய இராணுவத்துக்குள் புரையோடிப் போயிருக்கும் கோஷ்டிப் பூசல்கள், அதிகாரப் போட்டிகள், குழிபறிப்புகள், ஊழல்கள் ஆகியவற்றோடு, தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் இந்திய இராணுவம் காஷ்மீரில் நடத்தி வரும் சதிகள், தகிடுதத்தங்கள் ஆகிய அனைத்தையும் கீறிக் காட்டுவதாக அமைந்துவிட்டது.

''இராணுவ அமைச்சகம் அளித்துள்ள அறிவுரைகளின்படிதான் தொழில்நுட்ப ஆதரவுப் பிரிவை அமைத்ததாக'' வீ.கே.சிங் தன்னிலை விளக்கம் அளித்திருந்தாலும், அவர் தனது சுயநல நோக்கங்களுக்காகவும் அவ்வமைப்பைப் பயன்படுத்தி வந்திருப்பதும் விசாரணையில் அம்பலமாகியிருக்கிறது. வீ.கே.சிங் இராணுவத் தளபதியாக மே 2010-இல் பதவியேற்றவுடனேயே, தொழில்நுட்பப் பிரிவு என்ற பெயரில் இந்த உளவு அமைப்பை அமைத்து, அதனைத் தனது விசுவாச அதிகாரிகளைக் கொண்டு நிரப்பியிருக்கிறார்; தன்னைத் தவிர வேறு யாருக்கும் கட்டுப்படவோ பதில் சொல்லவோ தேவையில்லை என்ற விதத்தில் இந்த அமைப்பைச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட அதிகார அமைப்பாக வளர்த்து விட்டதோடு, தனது எதிர் கோஷ்டிகளை உளவு பார்க்கும் அமைப்பாகவும் பயன்படுத்தி வந்திருக்கிறார். இராணுவத்தின் மற்ற உளவுப் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, முறைகேடாகத் தனது விசுவாச உளவு அமைப்பிற்குத் திருப்பிவிட்டிருக்கிறார். அவரது ஓய்வு பெறும் வயதை நிர்ணயிக்கும் பிரச்சினையில் காங்கிரசு அரசிற்கும் அவருக்கும் பிணக்கு ஏற்பட்ட பிறகு, இந்த அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டு இராணுவ அமைச்சகத்தின் தொலைபேசி பேச்சுக்களை ஒட்டுக்கேட்கும் சட்டவிரோத நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார். இந்த ஒட்டுக் கேட்கும் கருவிகளை வாங்கியதில் பல கோடி ரூபாய் அளவிற்கு ஊழலும் முறைகேடுகளும் நடந்திருப்பதும் விசா

முன்னாள் இராணுவத் தளபதி வீ.கே.சிங்.





ஓமர் அப்துல்லா அரசைக் கவிழ்ப்பதற்காக இராணுவத்திடமிருந்து 1.19 கோடி ரூபாய் இலஞ்சமாகப் பெற்றதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள காஷ்மீர் மாநில அமைச்சர் குலாம் ஹசன் மிர்.

ரணையில் அம்பலமாகியிருக்கிறது.

வீ.கே.சிங்கிற்குப் பிறகு பிக்ரம் சிங்கை இராணுவத் தளபதியாக நியமிக்கும் முடிவை மைய அரசு எடுத்த சமயத்தில், ''பிக்ரம் சிங் காஷ்மீரில் போலி மோதல் படுகொலைகளை நடத்தியவர்; எனவே, அவரைத் தலைமைத் தளபதியாக நியமிக்கக் கூடாது'' எனக் கோரி, ''எஸ் காஷ்மீர்'' என்ற தன்னார்வத் தொண்டு அமைப்பு பொதுநல வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதென்றாலும், இதற்குப் பின்னால் இருந்தவர் வீ.கே.சிங்தான் என்பதும் விசாரணையில் அம்பலமாகியிருக்கிறது. இந்த எஸ் காஷ்மீர் அமைப்புடன் தொடர்புடைய ஜம்மு-காஷ்மீர் மனித சேவை அமைப்பு என்றொரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு வீ.கே.சிங் தலைமைத் தளபதியாக இருந்த சமயத்தில் 2.38 கோடி ரூபாயை நிதியாக அளித்திருக்கிறார். அந்த வழக்கையும் இந்த நிதியையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், வீ.கே.சிங், பிக்ரம் சிங்கின் பதவி உயர்வுக்கு எதிராகத் திரைமறைவில் காய் நகர்த்தியதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஓமர் அப்துல்லாவின் அரசைக் கவிழ்க்கப் பணம் கொடுத்தார், இராணுவத்தின் அதிகார ஒழுங்கைச் சீர்குலைக்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டுகளைவிட, இக்குற்றச்சாட்டுகளுக்கு வீ.கே.சிங் அளித்த பதில்தான் அவரது ஆதரவாளர்களைக்கூட விக்கித்துப் போக வைத்துவிட்டது. ''ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதத்தை அடக்கி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில்தான் இந்த நடவடிக்கைகளைதான் எடுத்ததாகவும், பணப் பட்டுவாடா நடந்ததை இலஞ்சமாகக் கருதக் கூடாது; அதனை நல்லெண்ண நடவடிக்கையாகக் கருத வேண்டும்'' என அவர் விளக்கமளித்ததோடு, ''ஜம்மு-காஷ்மீர் அரசியல்வாதிகளுக்குப் பணம் கொடுப்பதை நான் புதிதாகத் தொடங்கவில்லை; அது 1947 தொடங்கியே நடந்து வருகிறது'' என ஒரே போடாகப் போட்டார். தான் மட்டும் நீரில் மூழ்காமல், தனது எதிராளியையும் இழுத்துக் கொண்டு மூழ்கும் தந்திரம் நிறைந்தது அவரது பதில்.

2010-ஆம் ஆண்டில் காஷ்மீரின் தாங்க்மார்க் பகுதியில் நடந்த இளைஞர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததிலும்; 2011-ஆம் ஆண்டு அம்மாநிலத்தில் கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தி முடித்ததிலும் தொழில்நுட்ப ஆதரவுப் பிரிவு பெரும் பங்கு ஆற்றியதாகக் குறிப்பிட்டு, தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்தியிருக்கிறார், வீ.கே.சிங். ஜம்மு-காஷ்மீரில் நடக்கும் தேர்தல்களைத் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாக; அங்கு நடைபெறும் போராட்டங்களை இந்திய இராணுவம் தனது உயிரைக் கொடுத்து அடக்கி வருவதாக ஆட்சியாளர்களும் தேசியக் கட்சிகளும் காட்டும்பொழுது, வீ.கே.சிங் அளித்திருக்கும் அறிக்கையோ, அவையெல்லாம் கையூட்டுக்கும் இலஞ்சத்திற்கும் கிடைத்த வெற்றியாகக் கூறுகிறது.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்திய அரசுக்கு எதிராகத் தன்னெழுச்சியான மிகப்பெரும் மக்கள்திரள் போராட்டம் காஷ்மீர் பள்ளத்தாக்கில் வெடித்தபொழுது, போராட்டக்காரர்கள் லஷ்கர்-இ-தொய்பாவிடம் காசு வாங்கிக் கொண்டு போராடுவதாகக் கூறி, காஷ்மீர் மக்களை அவமானப்படுத்தியது, இந்திய இராணுவம். இராணுவத்தின் அக்குற்றச்சாட்டு இதுவரை நிரூபிக்கப்படவில்லை. ஆனால், காசு கொடுத்து துரோகிகளையும் பிழைப்புவாதிகளையும் உருவாக்குவதன் மூலம்தான் காஷ்மீரில் தேசிய ஒருமைப்பாட்டின் கொஞ்சநெஞ்சமான, மரியாதையையும் காப்பாற்ற முடிகிறது என்பதை இந்திய இராணுவத்தின் தளபதியாக இருந்தவரே ஒப்புக்கொண்ட பிறகும் இது குறித்து விசாரிப்பதற்கு மட்டுமல்ல, இது குறித்துப் பேசுவதற்கே அச்சப்படுகிறார்கள் காங்கிரசு, பா.ஜ.க. பிராண்டு தேசியவாதிகள்.

காங்கிரசு தோண்டிய கிணற்றிலிருந்து வெளிவந்த பூதம் காஷ்மீரைச் சேர்ந்த பிழைப்புவாத ஓட்டுக்கட்சித் தலைவர்களை மட்டுமல்ல, இந்த 'தேசிய'க் கட்சிகளையும் ஒருசேர அம்பலப்படுத்திவிட்டது. அதனால்தான், ''இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து இன்னும் விரிவாக

காஷ்மீர் பள்ளத்தாக்கில் 2011-ஆம் ஆண்டு நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் ஓட்டுப் போடக் காத்திருக்கும் மக்கள் (கோப்புப் படம்)



விசாரணை நடத்த வேண்டும்'' என இழுக்கிறது, மைய அரசு. வீ.கே.சிங்கின் ஆதரவாளரான பா.ஜ.க.வின் அருண் ஜெட்லி, ''இத்தகைய இரகசியங்கள் வெளியே வந்திருக்கக் கூடாது; இஷ்ரத் ஜஹான் வழக்கிலும் இப்படிதான் காங்கிரசு இரகசியங்களை வெளியே கசிய விட்டுவிட்டது'' எனக் கண்டித்திருக்கிறார். ''இராணுவ இரகசிய நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதை வெளிப்படையாக ஆராய்வதும் பேசுவதும் ஆபத்தானது; உளவு அறியவும் எதிரியைத் திசை திருப்பவும் இராணுவம் எதையெல்லாமோ செய்யும். அதையெல்லாம் அம்பலப்படுத்திக்கொண்டிருப்பது ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு நல்லதல்ல'' என எச்சரிக்கிறது, தினமணி (29.09.2013).

இப்படிபட்ட கேள்விக்கிடமற்ற ஆதரவு மட்டுமல்ல, சட்டபூர்வ பாதுகாப்பும் இந்திய இராணுவத்துக்கு வழங்கப்படுவதால்தான், அக்கும்பல் தண்டிக்கப்படுவோம் என்ற அச்சமின்றி நிதி முறைகேடுகள், ஊழல்கள் மட்டுமல்ல, காஷ்மீரிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் போலி மோதல் கொலைகளை அடுக்கடுக்காக நடத்தி வருகிறது. அதிலும்கூட, 'மோதல்' கொலை நடந்ததாகப் பொய்க்கணக்கு எழுதி, அரசாங்கம் அறிவித்துள்ள பரிசுப் பணம், பதவி உயர்வுகளை மோசடியான முறைகளில் சுருட்டிக் கொள்கிறது. போராளி அமைப்புகளிலிருந்து விலகி சரணடைவோரை மிரட்டிப் பணம் பறிக்கும் மாஃபியா வேலைகளில் ஈடுபட்டு வருகிறது. தனது சதித் திட்டங்களை நிறைவேற்றும் பலிகிடாக்களாகச் சரணடைந்த போராளிகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிறகு அவர்களைத் தூக்கு மேடைக்கும் அனுப்புகிறது. தூக்கிலிடப்பட்ட அஃப்சல் குரு இப்படிபட்ட பலிகிடாக்களில் ஒருவர் தானே! இந்தச் சதிகளை விசாரிப்பது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத் தென்றால், அயோக்கியத்தனத்தின் மறுபெயர்தான் தேசப் பாதுகாப்பு, தேச பக்தி என அடித்துச் சொல்லலாம்.

• ஆர்.ஆர்.

# புதிய கார்ப்பரேட் வங்கிகள்:
# திருடன் கையில் பெட்டிச்சாவி!

இந்து மதப் புராணக் கதையான மஹாபலி சக்கரவர்த்தி வதத்தில் வாமன அவதாரத்தில் வந்த பெருமாள் எடுத்து வைத்த மூன்றாவது அடி முக்கியமானது. அந்த மூன்றாவது அடிதான் மஹாபலியின் தலையில் இறங்கியது. வங்கித் துறையைத் தனியார்மயமாக்குவதிலும் அப்படிபட்டதொரு மூன்றாவது அடியை எடுத்து வைத்திருக்கிறது, மன்மோகன் அரசு. முதல் அடியில், வங்கித் துறையில் தனியார் நுழைய அனுமதிக்கப்பட்டனர்; இரண்டாவது அடியில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் பங்குகள் தனியாருக்கு விற்க அனுமதி அளிக்கப்பட்டது. மூன்றாவது அடியில், கார்ப்பரேட் நிறுவனங்கள் நேரடியாகவே வங்கிகளைத் திறந்து கொள்ள அனுமதி அளித்து, இதன் மூலம் வங்கிகள் தேசியமயமாக்குவதற்கு முன்பிருந்த நிலையை - வங்கித்துறையில் கார்ப்பரேட் நிறுவனங்கள் கோலோச்சும் நிலையை மீண்டும் உருவாக்க முனைந்திருக்கிறது, காங்கிரசு அரசு.

26 இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் அனுமதி வேண்டி விண்ணப்பித்திருப்பதாகவும், தகுதி வாய்ந்த கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வங்கிகளைத் திறந்து கொள்ள உரிமம் வழங்கும் உற்சவம் ஜனவரி 1, 2014 முதல் தொடங்கி விடுமென்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த 26 நிறுவனங்களுள் டாடா, பிர்லா, எல் அண்ட் டி, ரிலையன்ஸ், டி.வி.எஸ். ஆகிய தொழில் குடும்பங்கள் மட்டுமின்றி, நவீனமான முறையில் கந்துவட்டித் தொழிலை நடத்தி வரும் முத்தூட் பைனான்ஸ் உள்ளிட்டுப் பல்வேறு ''பிளேடு'' கம்பெனிகளும் அடங்கியுள்ளன.

நிதித்துறையில் அரசின் கட்டுப்பாட்டை முற்றிலுமாக ஒழித்துக் கட்டிவிட்டு, அதனை முழுமையாகத் தனியார்மயமாக்க வேண்டும் என்று சர்வதேச நிதி நிறுவனங்களும், தர மதிப்பீட்டு நிறுவனங்களும் நெருக்கடி கொடுத்து வருகின்றன. அவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தோடுதான் பல்வேறு எதிர்ப்புகளையும் மீறி வங்கித் துறையில் மூன்றாம்கட்ட தாராளமயத்தை அமலாக்க முயலுகிறது, காங்கிரசு கும்பல். இந்த உண்மையை

வங்கி ஒழுங்காற்றுச் சட்டத்தில் கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்குச் சாதகமாகச் செய்யப்பட்ட திருத்தங்களைக் கண்டித்துப் பொதுத்துறை வங்கி ஊழியர்கள் மங்களூர் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



மறைத்துவிட்டு, ''வங்கிச்சேவை இன்னும் இந்திய கிராமங்களை முழுமையாகச் சென்றடையவில்லை. அதனை நிறைவு செய்யும் நோக்கத்தில்தான் வங்கித் துறையில் கார்ப்பரேட் நிறுவனங்கள் நுழைவதற்கு அனுமதி அளித்திருப்பதாக'' நாடகமாடுகிறது, மைய அரசு. வங்கித் துறையில் கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதிப்பதால் வாடிக்கையாளர்களுக்குத் தரமான சேவை கிடைக்கும்; அத்துறையில் நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தப்படும் எனப் பின்பாட்டு பாடுகிறார்கள், தனியார் மயத்தின் ஆதரவாளர்கள்.

இதே வாதத்தை முன்வைத்துதான் தனியார் வங்கிகளுக்கு அரசு அனுமதி அளித்தது. அவ்வங்கிகள் கடனை வசூலிக்க குண்டர் படையை அறிமுகம் செய்து வைத்து, தமது 'சேவை'யை மேம்படுத்தின. ''இந்தியாவில் செயல்பட்டு வரும் 12 தனியார் வங்கிகளுக்கு நாடெங்கிலும் 15,630 கிளைகள் இருந்தாலும், இதில் 2,699 கிளைகள்தான் கிராமப்புறங்களையொட்டி அமைக்கப்பட்டிருக்கிறது'' என நிதி அமைச்சகத்துக்கான நாடாளுமன்ற நிலைக்குழு சுட்டிக் காட்டியிருக்கிறது. ''50 சதவீதத்திற்கும் மேலான தனியார் வங்கிகள் 2010-11ஆம் ஆண்டில் விவசாயத்திற்கு ஒரு பைசாகூடக் கடனாக வழங்கவில்லை; பொதுத்துறை வங்கிகள் வழங்கியிருக்கும் மொத்தக் கடனில் 30 சதவீதம் மட்டுமே விவசாயத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது'' என இந்திய ரிசர்வ் வங்கி பிலாக்கணம் பாடியிருக்கிறது.

கிராமப்புற சிறு விவசாயிகளுக்கும் சிறுதொழில்களுக்கும் கடன் வழங்குவதைவிட, ஆடம்பர நுகர் பொருட்களுக்கும், வீடு வாங்குவதற்கும் கடன்கள் கொடுப்பதற்குத்தான் வங்கிகள் முன்னுரிமை தருகின்றன என்பது வெளிப்படையாகத் தெரியும் நிலையில், கார்ப்பரேட் நிறுவனங்கள் கிராமப்புற மக்களின் நிதித் தேவையை ஈடு செய்யும் விதத்தில் தமது வங்கிகளை நடத்துவார்கள் என மைய அரசு கூறுவதை அப்பாவிகள்கூட நம்பமாட்டார்கள்.

வங்கிகளைத் திறக்கவுள்ள கார்ப்பரேட் கும்பல் விவசாயத்திற்குக் கடன் வழங்குவதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். இவ்வங்கிகளில் போடப்படும் பணம் பாதுகாப்பாக இருக்குமா என்பதுதான் முக்கியமான கேள்வி. இந்திய நடுத்தர வர்க்கப் பிரிவு, தமது பணத்தை கார்ப்பரேட் நிறுவனங்களின் பங்குகளிலோ அல்லது அக்கம்பெனிகள் வெளியிடும் கடன் பத்திரங்களிலோ முதலீடு செய்வதைவிட, வங்கிகளில் சேமிப்பதைத்தான் நம்பகமானதாகக் கருதுகிறது. இப்பிரிவின் இந்த மனநிலையைத் தனியார்மயத்தால்கூட மாற்ற முடியவில்லை. இந்நிலையில் அவர்களின் பணத்தைச் சேமிப்பாகப் பெற்று, அதனைப் பங்குச்சந்தைக்கு மடைமாற்றிவிட கார்ப்பரேட் கும்பலுக்கு வங்கி என்ற குறுக்கு வழி திறந்துவிடப்பட்டுள்ளது. பொதுத்துறை வங்கிகளில் கடனை வாங்கிவிட்டு ஏப்பம் விட்டதில் முன்னணியிலிருப்பது கார்ப்பரேட் நிறுவனங்கள்தான் என்பது அம்பலமாகி, அம்மோசடிகள் குறித்து இப்பொழுது சி.பி.ஐ. விசாரணை நடந்துவரும் வேளையில் வங்கிகளைத் திறந்துகொள்ள கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது திருடன் கையிலே பெட்டிச் சாவியைக் கொடுப்பதற்கு ஒப்பானது.

அப்படிபட்ட மோசடிகள் நடைபெறாத வண்ணம் தடுக்கும் வகையில் விதிகள் உருவாக்கப்பட்டிருப்பதாகச் சமாதானம் சொல்கிறது, மைய அரசு. இதைக் கேட்கும்பொழுது கள்ளன் பெருசா, இல்லை காப்பான் பெருசா என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா உள்ளிட்டுப் பல்வேறு பொதுத்துறை வங்கிகளில் 7,500 கோடி ரூபாயைக் கடனாக வாங்கி, அதனைக் கட்டாமல் ஏமாற்றி வரும் விஜய் மல்லையாவைச் சட்டம் என்ன செய்துவிட்டது? அதிக வட்டி தருவதாக ஆசை காட்டிப் பொதுமக்களிடமிருந்து பெற்ற சேமிப்புகளை ஏப்பம் விட்ட, தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு நிதி நிறுவன அதிபர்கள் ஆயுள் தண்டனைக் கைதியாக அடைக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது, ஏமாந்தவர்களுக்கு அவர்களின் பணம்தான் முழுமையாகக் கிடைத்துவிட்டதா?

பங்குச் சந்தை ஊழல், 2ஜி ஊழல், நிலக்கிரி ஊழல் எனப் பல்வேறு ஊழல்களின் ஊற்றுக்கண்ணாக இருந்துவரும் கார்ப்பரேட் கும்பல், ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமான வரி மோசடிகளில் ஈடுபட்டு வரும் கார்ப்பரேட் கும்பல், வங்கிகளை நாணயமாக நடத்தும் என்பதற்கு ஏதேனும் உத்தரவாதமுண்டா? வங்கிகள் அரசுடைமை ஆக்கப்படுவதற்கு முன்பாக, கார்ப்பரேட் நிறுவனங்கள் நடத்தி வந்த வங்கிகளில் நடந்த மோசடிகளைக் கணக்கில் கொண்டால், எப்பேர்பட்ட அபாயத்தை மீண்டும் இந்திய மக்களின் தலையில் சுமத்த காங்கிரசு கும்பல் தயாராகி வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

● குப்பன்

## 29-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து புதிய ஜனநாயகம் 29-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இப்புரட்சிகர அரசியல் இதழ் தொடர்ந்து வெளிவர பலவகையிலும் உதவிவரும் வாசகர்களாகிய உங்களுக்கும், பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு இந்த இதழை உழைக்கும் மக்களிடம் கொண்டு சென்று புதிய வாசகர்களை உருவாக்க அயராது உழைக்கும் முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மார்க்சிய-லெனினிய அரசியலை ஏந்தி, இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உங்களது உறுதியான ஆதரவுடன் 29-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

29-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகம் இதழுக்கு நேரிலும் தொலைபேசி, அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் வாயிலாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகள். வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் 7 - சோசலிசப் புரட்சி நாள் வாழ்த்துக்கள்!

-ஆசிரியர் குழு.

தலையங்கம் தொடர்ச்சி...

பரேக் மன்மோகனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியிருப்பதைக் காட்டித் துள்ளிக் குதிக்கும் பா.ஜ.க.விற்கு ஒன்றை நினைவுபடுத்த வேண்டும். மன்மோகனின் மீது வழக்குப் போட வேண்டும் என பரேக் கோரியிருப்பதைப் போல, குஜராத் அரசின் முன்னாள் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் டி.ஐ.ஜி. வன்சாரா பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி இருக்க வேண்டிய இடம் சிறைச்சாலை எனத் தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் அக்கடிதத்தில், ''2002 முதல் 2006 வரையிலான காலத்தில் நடந்துள்ள மோதல் படுகொலைகள் அனைத்தும் மோடி அரசிற்குத் தெரிந்து, அதன் வழிகாட்டுதலோடுதான் நடந்தன. மோதல் கொலைகளை நடத்திய போலீசார் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது நியாயமென்றால், இக்கொலைகளை வழிநடத்தி ஊக்குவித்த இந்த அரசாங்கம் இருக்க வேண்டிய இடம் சிறைச்சாலையாகும்'' எனக் கூறியிருக்கிறார்.

மன்மோகனின் கரங்களில் படிந்திருப்பது ஊழல் கறை என்றால், பா.ஜ.க.வின் கரங்களில் இருப்பதோ இரத்தக் கறை. அதேசமயம் இந்த இரண்டு யோக்கியவான்களும் நிலக்கரி ஊழலில் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள தரகு முதலாளி பிர்லாவிற்கு வக்காலத்து வாங்குவதில் ஈருடல் ஓர் உயிரென நடந்து கொள்கின்றனர்.

தனியார்மயமாக்கலுக்குப் பின்னர் கடந்த இருபது ஆண்டுகளில் பங்குச்சந்தை மோசடி தொடங்கி அலைக்கற்றை ஊழல், கோதாவரி எண்ணெய் வயல் ஊழல், ஆதர்ஷ், ஏர் இந்தியா ஊழல், இப்போதைய நிலக்கரி வயல் ஊழல் வரை நூற்றுக்கணக்கான ஊழல்கள் நடந்துள்ளன. தனியார்மயம் என்பதே பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் முதலாளிகள் கொள்ளையடிக்க வழங்கப்படும் உரிமம்தான். ஊழல் இல்லாத தனியார்மயம் கிடையாது. இருப்பினும், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் ஒரே அரசியல் கட்டமைப்புக்குள் இருப்பதால், ஊழல் அம்பலமாகும்போது தமது அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப இதில் ஒரு சில விவகாரங்களைச் சட்ட விரோதமானதென்று காட்டிச் சூடேற்றுவதும், ஆட்சியதிகாரத்திலுள்ள ஒருசிலரின் தவறுகள் என்பதாக மட்டுமே இந்த விவகாரத்தைக் குறுக்கிச் சுருக்குவதும், தேர்ந்தெடுத்த ஒரு சில வழக்குகளை மட்டும் முதன்மைப்படுத்தி கவனத்தைத் திசைதிருப்புவதும்தான் நடக்கிறது. ●

## “ஈக்கள் பல்கிப் பெருகி கிராமங்களின் சுகாதாரத்தைச் சீர்குலைக்கும் பி.கே.பி. கோழிப்பண்ணையை இழுத்து மூடு!”

### – கிராம மக்களின் போராட்டம்!



தருமபுரி மாவட்டம் அரியகுளம் அருகிலுள்ள வன்னியகுளம், ஏ.முருக்கம்பட்டி, கிருஷ்ணாபுரம் ஆகிய மூன்று பஞ்சாயத்துகளின் 9 கிராமங்களைச் சேர்ந்த மக்கள், பி.கே.பி. பௌல்ட்ரி பார்ம் என்ற கோழிப் பண்ணையின் கழிவுகளிலிருந்து உருவாகிப் பல்கிப் பெருகியுள்ள ஈக்களால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கிராம மக்கள் விவசாயிகள் விடுதலை முன்னணியிடம் இது பற்றித் தகவல் தெரிவித்ததும், இக்கோழிப் பண்ணையை இழுத்து மூடுமாறும், இக்கிராமங்களில் தண்ணீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்வதோடு மருத்துவ முகாம் நடத்தக் கோரியும் வி.வி.மு. தோழர் ஆம்பள்ளி முனிராஜ் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் அணிதிரண்டு 7.10.2013 அன்று மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர். அவரும் இப்பண்ணையை இரு நாட்களில் மூடிவிடுவதாக வாக்குறுதி அளித்து மருத்துவர்களையும் அதிகாரிகளையும் பார்வையிட அனுப்பினார். இருப்பினும், ஒருவார காலமாகியும் கோழிப் பண்ணை மூடப்படவில்லை. மாறாக, போராடும் மக்கள் மீது பொய்வழக்கு போடவும், கோழிப்பண்ணையை தூய்மைப் படுத்தி, ஈக்கள் இல்லாததாகக் காட்டி மக்களைச் சாந்தப்படுத்தவும் சில நாடகங்களை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டது.

இம்மோசடியை வி.வி.மு. தோழர்கள் கிராம மக்களிடம் விளக்கி பிரச்சாரம் மேற்கொண்டதையடுத்து, உண்ணாவிரதப் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்த இக்கிராமங்களின் பிரமுகர்களை போலீசார் மிரட்டியும் நைச்சியமாகப் பேசியும் போராட்டத்தைத் தடுக்க முயற்சித்தனர். இச்சதியை அம்பலப்படுத்தி மக்களுக்கு வி.வி.மு. தோழர்கள் நம்பிக்கையூட்டியதும், திட்டமிட்டபடி 15.10.2013 அன்று இருநூறுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் அணிதிரண்டு கோழிப்பண்ணை முதலாளியையும், அரசின் மிரட்டலையும் எதிர்த்து முழக்கமிட்டபடியே உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்.

மக்கள் போராடத் தொடங்கியதும், அடுத்த இரண்டு மணி நேரத்தில் கோட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர், கூடுதல் போலீசு துணை கண்காணிப்பாளர் - எனப் பெரும் பட்டாளமாக அதிகாரிகள் வந்திறங்கினர். நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் படிப்படியாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும், கூடிய விரைவில் ஆவண செய்வதாகவும், 144 தடையுத்தரவு மாவட்டத்தில் அமலில் உள்ளதால் போராட்டத்தைக் கைவிடுமாறும் மக்களிடம் அதிகாரிகள் பணிவுடன் கேட்டுக் கொண்டனர். இதை ஏற்றுத், தற்காலிகமாகப் போராட்டத்தை நிறுத்திக் கொண்ட கிராம மக்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் அடுத்த கட்டப் போராட்டத்தைத் தொடரத் தீர்மானித்துள்ளனர்.

-பு.ஜ. செய்தியாளர், தருமபுரி.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

சாரம் செய்வது ஆச்சரியமாக உள்ளது. அவர்களுக்குத் தெரிந்தால் பிரச்சனை வரும், எச்சரிக்கையாக இருங்கள்' என்றனர் மக்கள். நெல்லை பேருந்துப் பிரச்சாரத்தின் பொழுது, 'என்ன தைரியம் உங்களுக்கு? வைகுண்டராஜனை எதிர்த்து அவரின் பஸ்சிலேயே அவரைப் பற்றி தரக்குறைவாகப் பேசிவிட்டு நன்கொடை வேறு கேட்கிறீர்கள்' என்ற பேருந்தின் நடத்துனரிடம், 'பஸ் அவருடைய தாக இருக்கலாம்; நிற்குமிடம் பொது இடம். பஸ்சில் உள்ளவர்கள் பொதுமக்கள். எனவே எங்கள் கருத்தைப்பேச நாங்கள் ஒன்றும் அச்சப்படத்தேவையில்லை' என்று பதிலளித்துப் பிரச்சாரத்தைத் தொடர்ந்தனர் எமது தோழர்கள்.

தூத்துக்குடி லயன்ஸ் டவுன், ரோச்காலனி, திரேஸ்புரம், உவரி, பீச் காலனி, பெருமணல் உள்ளிட்ட பகுதிகளில் குறுக்கும் நெடுக்குமாக வாகனங்களில் வந்து நோட்டமிடுவது; பிரச்சாரம் செய்யும் தோழர்களைப் புகைப்படம் எடுப்பது; அவ்வப்பொழுது தொலைபேசியில் யாருக்கோ தகவல் தெரிவிப்பது போன்ற வைகுண்டராஜன் கைத்தடிகளின் பீதியூட்டல்களையும் நேரடியான மிரட்டல்களையும் எதிர்கொண்டுதான் இப்பிரச்சாரத்தை நடத்தினோம்'' என்கிறார், விவசாயிகள் விடுதலை முன்னணியின் உசிலை வட்டாரச் செயலர் தோழர் குருசாமி.

''இவை ஒருபுறமிருக்க, போலீசும் வைகுண்டராஜனின் கைத்தடியாகவே செயல்பட்டது. தூத்துக்குடி நகரில் பிரச்சாரம் செய்த தோழர்களைக் கைது செய்த தூத்துக்குடி நகரப் போலீசு, அவர்



களை சிறையிலடைப்பதாக மிரட்டியது; கீழவைப்பாறில் பிரச்சாரம் செய்துவிட்டு உறங்கிக்கொண்டிருந்த தோழர்களை நள்ளிரவில் மிரட்டிப் பார்த்தது; தூத்துக்குடி மீனவ கிராமங்களில் நடைபெற்ற பிரச்சாரத்தையும் அனுமதியின்றி பிரச்சாரம் செய்வதாகக் கூறி தடுக்க முனைந்தது; இவற்றையெல்லாம் அப்பகுதி மக்களின் ஆதரவோடும் வழக்குரைஞர்கள் என்ற வகையில் நாங்கள் தலையிட்டும் இப்பிரச்சினையை எதிர்கொண்டோம்'' என்கிறார்கள் ம.உ.பா. மையம் தூத்துக்குடி கிளையைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் அரிராகவன் மற்றும் ராமச்சந்திரன்.



மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பில் அக்-12 அன்று தூத்துக்குடி அண்ணா நகர் பிரதான சாலையில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுத்தது போலீசு. இதனைக் கண்டித்தும், தாது மணற்கொள்ளை குறித்து உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைக்கக் கோரியும், மாவட்ட



ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை அக்-12 அன்று அதிரடியாக நடத்தியது, ம.உ.பா.மையம்.

ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு தலைமையில், புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும், மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் பெருந்திரளாகப் பங்கேற்று நடத்திய இப்போராட்டத்தால் பாளையங்கோட்டை சாலையில் ஒருமணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து முடங்கியது. போராட்டத்தில் பங்கேற்ற சிறுவர்கள் - பெண்கள் உள்ளிட்ட அனைவரையும் பலவந்தமாகக் கைது செய்தது போலீசு.

சிறுவர்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானதும்; ''குண்டர் படைகளின் தளபதி வைகுண்டராஜனை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்'' என்று அச்சிறுவர்கள் கம்பீரமாக முழக்கமிட்டதும், அங்கே திரளாகக் குழுமியிருந்த பார்வையாளர்கள் மத்தியில், ''நாமும் அவர்களோடு இணைந்துப் போராட வேண்டுமென்ற'' உணர்வைத் தட்டியெழுப்பியது.

''கிராமப் பிரச்சாரத்தின் பொழுது, 'சிவப்பு சட்டை பிள்ளைகளா... நீங்கதான் உண்மையானப் போராளிகள். உங்க நோட்டீசைப் படிச்சேன். உங்க காலில் விழுந்து வணங்கனும் போல இருக்கு. நீங்கதான்யா, நாங்க தேடிக்கிட்டிருந்த தெய்வம்' என்று கண்ணில் நீர்மல்க பேரானந்தப்பட்டார், பெருமணலைச் சேர்ந்த 70 வயது மதிக்கத்தக்க சூசையப்பா. 1996-ல் மணல் கொள்ளையை எதிர்த்துப் போராடியதோடு, பொய் வழக்கினையும் இன்றுவரை எதிர்கொண்டு வரும் அந்த எழுபது வயது இளைஞனிடமிருந்து வரித்துக்கொண்டோம் போராட்ட உணர்வை!'' என்கிறார், போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளரும் பு.ஜ.தொ.மு.வின் மாநிலத் தலைவருமான தோழர் அ.முகுந்தன்.

குறுகிய காலத்திற்குள்ளாக நடத்தப்பட்டுள்ள புரட்சிகர அமைப்புகளின் இப்பிரச்சார இயக்கமும் முற்றுகைப் போராட்டமும் மீனவர்கள் மற்றும் மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தை உடைத்தெறிந்திருக்கிறது. மக்களின் பேராதரவோடு முன்னிலும் வீச்சாக, இப்புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம் தொடர்கிறது! போராட்டத்தீ படர்கிறது!

- இளங்கதிர்

# இது மணற்கொள்ளை மாஃபியாக்களின் ஆட்சி!




புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூர் பகுதியில் மணல் கொள்ளையை எதிர்த்துப் போராடிய செங்களாக்குடி கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களான ராஜேஷ், கார்த்தி ஆகிய சகோரதர்கள் கடந்த அக்டோபர் 5-ஆம் தேதியன்று மணல் மாஃபியாக் களால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். இயற்கை வளங்களைப் பாதுகாக்கப் போராடியவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த முடிவு அதிர்ச்சியும் வேதனையும் அளிப்பதாகும்.

செங்களாக்குடி கிராமத் தலைவர் துரைராஜின் மகனாகிய ராஜேஷ், இக்கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன், செந்தில், முத்தழகு, நடராசன், ஜெயராமன் மற்றும் அ.தி.மு.க. கவுன்சிலர் கணேசன் ஆகியோரை கொண்ட கும்பல் கோரையாற்றில் நடத்தி வந்த மணற்கொள்ளை குறித்து மாவட்ட ஆட்சியர் தொடங்கி முதல்வரின் தனிப்பிரிவு வரை புகார் செய்துள்ள போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ராஜேஷைப் படுகொலை செய்ய இந்த மாஃபியா கும்பல் பலமுறை முயற்சித்ததைப் பற்றி புகார் கொடுத்துள்ள போதிலும், போலீசார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

முந்தைய தி.மு.க. ஆட்சியின் போது 2007-இல் சி.பி.எம். கட்சியின் நெல்லை மாவட்ட இந்திய ஜனநாயக வாலிபர் சங்கச் செயலாளரான சுடலைமுத்து, பின்னர் அ.தி.மு.க. ஆட்சியில் 2012-இல் நெல்லை மாவட்டம் மிட்டாதார்குளத்தைச் சேர்ந்த சதீஷ் குமார் - என மணல் கொள்ளையை எதிர்த்துப் போராடிய இளைஞர்கள் மணல் மாஃபியாக்களால் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். கொலைகாரர்கள் தண்டிக்கப்படாத நிலையில் இப்போது மீண்டும் இரு இளைஞர்கள் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளனர்.

அதிகார வர்க்கம், போலீசு உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசு எந்திரமே தொடரும் மணற்கொள்ளைக்குத் துணையாக நிற்கிறது. அம்மாவின் 'பொற்கால' ஆட்சியில் லோடிங் காண்டிராக்டர்கள் என்ற பெயரில் கொல்லைப்புறமாக நுழைந்த கோவை ஆறுமுகசாமி - பழனிச்சாமி கும்பல் இன்று மணல் குவாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்துமளவுக்கு வளர்ந்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாறு, வேகவதி, செய்யாறு முதலானவற்றில் சட்டவிரோத மணல் கொள்ளை நடந்து வருவதையும், பிரம்மாண்டமான மலைகளாக மணலைக் குவித்து வைத்து மாஃபியாக்கள் பகிரங்கமாகவே வியாபாரம் செய்வதை ஆதாரங்களுடன் விளக்கியும், பூந்தமல்லி வட்டார ஆற்று மணல் லாரி உரிமையாளர்கள் சங்க கூட்டமைப்பினர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். மெட்ரோ ரயில் பணிக்காக மணல் அள்ளப்படுவதைத் தடுக்க முடியாது என்றும், யாராவது வீடு கட்டுவதற்காக குவித்து வைத்திருப்பார்கள் என்றும் விசாரணையின் போது காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் நீதிமன்றத்தில் கூசாமல் புளுகினார். அதிர்ச்சியடைந்த நீதிபதி, கிராம அதிகாரிகள் தொடங்கி மாவட்ட ஆட்சியர் வரை நடவடிக்கை எடுக்குமாறும், மையப் புலனாய்வுத் துறையின் விசாரணைக்கும் உத்தரவிட்டார்.

அதைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சித்ர சேனனையும், இம்மாவட்டத்தின் மணல் சேமிப்பு மையத்தின் பொறுப்பாளர்களான பழைய சீவரம் மற்றும் கருங்குழி துணை வட்டாட்சியர்களையும் பணியிடை நீக்கம் செய்து, மணல் கொள்ளைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் காட்டி மையப் புலனாய்வுத்துறையின் விசாரணையையும் நீதிமன்றத்தின் கண்டனத்தையும் தவிர்க்க பாசிச ஜெயா கும்பல் முயற்சிக்கிறது.

பாசிச ஜெயாவின் ஆட்சியில் மணல் கொள்ளை மாஃபியாக்களின் கூட்டாளிகளான அதிகாரிகளுக்கு வெறும் பணியிடை நீக்கம்தான் தண்டனை. ஆனால், மணல் கொள்ளையை எதிர்த்துப் போராடும் இளைஞர்களுக்கோ மரண தண்டனை - என இன்றைய அரசியலமைப்பு முறை சீரழிந்து கிடப்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

மணல் கொள்ளையை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த சகோதரர்கள் ராஜேஷ், கார்த்தி.

